சொந்தக் காலில் நில்!



டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை

சொந்தக் காலில் நில்!

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை புத்தகநிலையம்

23, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை - 17

முதற் பதிப்பு : அக்டோபர் 1996
பதினைந்தாம் பதிப்பு : ஜூலை 2005
பதினாறாம் பதிப்பு : ஏப்ரல் 2006

விலை: ரூ. 40-00

- Title : **SONTHAK KAALIL NIL**
- Author : Dr. **M.S. UDHAYAMURTHI**
- Language : Tamil
- Edition : Sixteenth Edition, April, 2006
- Pages : XIV + 158 = 172
- Published by : **GANGAI PUTHAKA NILAYAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar,
  Chennai–600017.
- Price : **Rs. 40-00**

ஆசிரியர் முகவரி
டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி
மக்கள் சக்தி இயக்கம்
17ஏ, சௌத் அவென்யு
காமராஜ் நகர், திருவான்மியூர்
சென்னை - 600 041.

Printed at : Malar Printers, 044-28224803

உங்கள் கவனத்திற்கு....!

சாதகமான சூழ்நிலை.

உங்கள் ஆசைகளுக்கேற்ற வாய்ப்புக்கள்.

எங்கு பார்த்தாலும் முன்னேற வேண்டும், நல்ல தொழிலில் இறங்க வேண்டுமென்ற துடிப்பு.

இன்றைய தமிழ்நாட்டின் மனநிலை ஒரு நல்ல நாற்றங்கால்; பண்படுத்தப்பட்ட நாற்றங்கால். வளமான மண்; போதுமான தண்ணீர்; பரம் படிக்கப்பட்ட நிலம். நீங்கள் வளர்த்திருக்கிறீர்களே மனத்தில், அந்த எண்ண விதையை இறங்கி நட வேண்டியதுதான்!

தமிழ்நாட்டில் இன்று, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு — சுயமுன்னேற்ற நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. 1972லிருந்து துவங்கியது — தொடர்ந்த கட்டுரைகள் ஆனந்த விகடனில். இன்று அந்தக் கட்டுரைகள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாடப் புத்தகமாக வைக்கப் பட்டிருக்கின்றன. அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஒரு தலைமுறையாக இந்த எண்ணங்கள் தமிழ்ச் சமுதாயத்தை ஊடுருவிக் கொண்டிருக்கின்றன. மக்களை புதிய சிந்தனைகளில் இறக்கி விட்டிருக்கின்றன.

இதன் வெளிப்பாடாக — இன்று 'வளர்தொழில்', 'ஏற்றுமதி உலகம்', 'பொருளாதாரம்', 'ஷேர் மார்க்கெட்', 'வணிகமணி', 'வணிகமலர்' என்று பத்துக்கும் மேற்பட்ட தொழில் மாத இதழ்கள்! இவையும் நிலத்தை மேலும் பண்படுத்தி இருக்கின்றன. இன்று முக்கியமான ஜூனியர் விகடன் போன்ற பத்திரிக்கைகளில், தொழிலால் வெற்றியும் சாதனைகளும் புரிந்தவர்களின் வாழ்க்கை வரலாறுகள்; உள்ளத்தை சிலிர்க்க வைக்கும் சம்பவங்கள். ஏழ்மையை மீறிய துவக்கங்கள்; போராட்டங்கள்.

முதலாவதாக: இதை நினைவில் கொள்ள வேண்டும். நம்முள் இருக்கும் ஜீவன் வாழத் துடிக்கிறது; வளர முந்துகிறது. இந்த இரண்டாவது: பரிணாம வளர்ச்சியில் நாமெல்லாம் கருவிகள் என்பதை உணர்ந்து செயல்பட்டோமானால் ஒரு மாபெரும் சக்தி நமக்குத் துணைபுரிகிறது என்பதுதான் அந்த உண்மை.

ஏதோ நேற்று மழையில் முளைத்த காளான் அல்ல இது. எண்ணங்கள் — ஒரு சிலரால் — ஒரு அறிஞர் கூட்டத்தினால் — எண்ணப்படும்போது அவை எல்லோர் உள்ளத்தையும், தூரத்தைக் கடந்து, காலத்தைக் கடந்து, தொடுகின்றன. இதனால் ஒரு சமுதாயமே விழிப்பு பெறுகிறது. இதுதான் உண்மை.

சர்க்கரை வள்ளிக்கிழங்கை முதன்முதலாக தண்ணீரில் கழுவித் தின்ன ஒரு தீவிலுள்ள ஒரு குரங்கு ஆரம்பித்த போது, மற்ற எல்லாக் குரங்குகளும் அதே

காரியத்தை செய்தன. இதைவிட ஆச்சரியம், ஆயிரம் மைலுக்கப்பால் இருக்கும் தீவிலுள்ள மற்ற சில குரங்குகளும் சிலமாதங்களில் இதே போலச் செய்ய ஆரம்பித்தன. இதுதான் சமுதாய மனவியல் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் தெரிந்துகொண்ட செய்தி. நமது எண்ணங்கள் — நம்மைப் போன்ற ஒரு சிலரது எண்ணங்கள் — இந்த சமுதாயத்தையே தொட முடியும், தொடுகின்றன என்பதுதான் அந்த உண்மை.

எண்ணங்கள் இன்று பரந்து நிற்கின்றன. தமிழ் நாடு இன்று கனிந்து வருகிறது; கனிந்து நிற்கிறது. சிறு தொழிலதிபர்களுக்கு மாத்திரமல்ல; பெருந் தொழிலிலும் கூட இதுதான் இன்றைய நிலை. திருப்பூரில் இன்று பல கோடீஸ்வரர்களை — கோடிக்கணக்கில் முதலீடு செய்த தொழில்களை — கடந்த இருபதாண்டு காலம் உருவாக்கி இருக்கிறது. இது நாடெங்கிலும் ஒரு விழிப்புணர்வை — எல்லோரையும் தூண்டும் நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த காலகட்டத்தில் மற்றோர் மகத்தான சாதனை தமிழ்நாட்டில் நிகழ்ந்திருக்கிறது. மற்றவற்றைப் போல இதற்கும் விதையிட்ட இடம் தமிழ்நாடு என்று நாம் பெருமைப்படலாம்.

எனது இனிய நண்பர், தெளிந்த அறிவும், தீர்க்க தரிசனமும், அதேசமயம், பூமியில் கால் ஊன்றி நடைமுறைத் திட்டங்களை வகுப்பவருமான டாக்டர் கே. ரெங்கசாமி, ஒரு ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் "பத்து கோடிப்பேருக்கு வேலை வாய்ப்பளிக்கலாம்.

நம் நாடு விவசாய நாடு. கி.பி. இரண்டாயிரத்தில் இந்தியாவை வளம் மிகுந்த நாடாக்கலாம்" என்று விளக்கி "சுபிட்சம்—2000" (PROSPERITY 2000) என்கிற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினார்; அது ஒரு திட்டம். அந்த திட்டம் அமெரிக்கா சென்று, அங்கே மிகவும் பாராட்டப்பட்டு, "இதை இந்தியத் தலைவர்கள் அல்லவா எடுத்துக் கொள்ளவேண்டும்!" என்று நமது இந்தியத் தலைவர்களுக்கு செய்தி சொல்ல, பிரதமர், பாரதத்தின் முன்னாள் உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம், வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, "இது நாட்டுக்கான திட்டமாக இருக்க வேண்டும்" எனத் தீர்மானித்தனர். இதன் விளைவாக இன்று நாடு பூராவும், சிறிதளவு தண்ணீர் இருக்கின்ற நிலங்கள் எல்லாம் — ஆயிரமாயிரம் ஏக்கர் நிலங்களும், முப்பது ஏக்கர் நிலங்களும், பழத்தோட்டம், காய்கறி, பூந்தோட்டம், தேக்கு போன்ற மரவகைகளைப் பயிரிட்டு வளர்க்கலாம் என்ற திட்டமாகவும் நாடு பூராவும் தொழிலாக வளர்ந்து விட்டது.

எங்கு பார்த்தாலும் ஒரு துடிப்பு.

எங்கு பார்த்தாலும் பணக்காரர்களாக வேண்டுமென்ற வேட்கை.

பணக்காரர்களாகக்கூடாது என்று யார் சொன்னது? "செய்க பொருளை" என்று தானே வள்ளுவர் சொன்னார்? நாம் நியாயமான வழிகளில் பொருள் சேர்க்க வேண்டும். அப்படி நியாயமான வழிகளில் பொருள் சேர்க்க இன்று ஆயிரம் வழிகள் இருக்கின்றன.

எனவேதான் இந்த நூல் "சொந்தக்காலில் நில்". "சார்ந்து நிற்காதே! ஏன் சார்ந்து நிற்கிறாய்? உன்னை நம்பு! உன்னால் முடி.யும்! கண்களை அகல விரித்துப்பார். ஆயிரமாயிரம் வாய்ப்புக்கள் தெரியும்" என்று சொல்கிறது.

ஆனால் ஒன்று,

"யாரும் திடீர்ப் பணக்காரனாக ஆனதில்லை! அப்படி ஆசைப்படாதே. அப்படி விரும்பினால் நீ லாட்டரிச் சீட்டை வாங்கு! கை முதலை இழ! பின் புத்தி வரட்டும். திடீர் பணக்காரனாவது இயற்கை நியதிகளுக்கு விரோதம், என்பதை உணர்ந்து கொண்டு பின்னால் இந்த வழிக்கு வா!" என்று சொல்கிறோம்.

பாரதியார் சொல்கிறார்.

"பக்தி உடையார் காரியத்தில் பதறார்.
வித்து முளைக்கும் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்தும் எனில்
சார்ந்த நமக்கு சஞ்சலமேன் ?"

ஆகா! இதைவிடவா பெரிய புத்திமதி வேண்டும்? இதை மனதில் வாங்கி உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

யாரை ஊரில் மதிக்கிறார்கள்?

பணக்காரர்களை! பணக்காரர்களாவதற்கு இன்றைய நல்ல வழி தொழில் செய்வதுதான். தொழில் செய்தால் ஒரு பத்து குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும்; ஒரு பத்து ஏழை

மாணவர்களைப் படிக்க வைக்கமுடியும். ஊருக்கும் நாட்டுக்கும் பல நன்மைகளைச் செய்யமுடியும். "நாம் நன்றாக இருப்பதுபோல் இந்த ஊரும் நன்றாக இருக்க வேண்டும்" என்று எண்ணுபவர்களால்தான் இந்த உலகம் உயர்ந்திருக்கிறது. போர்டு, கார்னகி போன்ற அமெரிக்கத் தொழிலதிபர்கள் அறக்கட்டளை நிறுவி உலகிற்கே நல்ல காரியங்களுக்கு உதவுகின்றனர். நம் நாட்டிலும் அப்படி பலர் செய்கிறார்கள். எனவே தமிழ்ச் சமுதாயம் தொழில் செய்ய முனைய வேண்டும். அமெரிக்க அரசின் கொள்கைகளைப் பெரிதும் உருவாக்கும் வல்லமையை நியுயார்க் நகரிலுள்ள சில யூத மக்கள் — பெருந் தொழிலதிபர்கள் — பெற்றிருக்கிறார்கள்.

நம் நாட்டுத் தொழிலதிபர்கள் ஏன் அந்த நிலைமையில் தங்களை வைத்துக்கொள்ளக்கூடாது? ஏன் இந்திய அரசியலின் தன்மையையே நாம் மாற்றி அமைக்கும் வல்லமை பெறக்கூடாது? மாற்ற முடியும்; நம் நாட்டுத் தொழிலதிபர்கள் **நேர்மையான வழியில் பணம் பண்ணும்போது** அதற்கான துணிவு பிறக்கும்.

"சொந்தக்காலில் நில்" என்றால் நீங்கள் தொழில் துவங்கி கடைசி வரை யாரையும் சேர்த்துக் கொள்ளாது, யாரிடமும் கடன் வாங்காது, நீங்கள் மட்டுமே தனித்து நிற்க வேண்டும் — "தனித்து நிற்கிறேன் பார்!" — என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்பதல்ல!

"நம் அறிவையும் திறமையையும் பிறருக்கு ஊழியம் செய்வதன் மூலம், எப்போதுமே, பிறருக்கு

அர்ப்பணித்துக் கொண்டிருக்காதீர்கள். அனுபவம் பெறுங்கள். தொழில் செய்யும் ஆர்வம் துளிர்க்கு மானால், நம்மிடமுள்ள திறமை, நம்மைத் தூண்டுகிறது என்பதை உணருங்கள், இறங்குங்கள்!" என்றுதான் சொல்கிறோம்.

குடும்பத்தில் எப்படி கணவன் மனைவியைச் சார்ந்தும், மனைவி கணவனைச் சார்ந்தும் வாழ்வு துவங்குகிறதோ, அதுபோல இவ்வுலகில், இப் பிரபஞ்சத்தில் எல்லாமே ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவைதான்; கூட்டாகச் செயல்படுபவைதான். எனவே கூட்டுணர்வை வளருங்கள்; அரவணைத்துச் செல்லும் குணத்தைக் கொள்ளுங்கள். தொழில் செய்பவனுக்கு யாருமே எதிரி அல்ல. நம்மால் முடியாத போது — நம்மிடம் அந்தப் பொருள் இல்லாத போது — நமது போட்டியாளர் கடைக்கு உங்கள் வாடிக்கையாளரை பெருமையுடன் அனுப்புங்கள். அதை அவர்களுக்கும் — போட்டியாளர்களுக்கும் — சிரித்துக்கொண்டே தெரிவியுங்கள்.

தொழில் செய்வோர், சொந்தக்காலில் நிற்க விரும்புபவர்கள், சில குணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒரு சமையல்காரர் என்றால் அவருக்குச் சில குணங்கள், திறமைகள் தேவை. ஒரு பாடகர் தன் இசையைத் தொழிலாக நடத்துகிறார் என்றால் அதற்கும் சில குணங்கள், திறமைகள் தேவை.

தொழிலில் வெற்றி பெறுவோருக்கு வேண்டிய குணங்கள் எனது "சிந்தனை தொழில் செல்வம்" என்ற

நூலிலும், "வெற்றிக்கு முதல் படி" என்ற நூலிலும், "சாதனைக்கோர் பாதை" என்ற நூலிலும், பொதுவாக "மனித உறவுகள்" என்ற நூலிலும் இருக்கின்றன.

யாருமே இந்த எல்லாக் கல்யாண குணங்களுடனும் பிறந்துவிடுவதில்லை! நாம்தான் நம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். நம்மால் இந்த குணங்களை வளர்த்துக்கொள்ள முடியும்.

என்ன அவை?

- "நான் செக்கு மாட்டு வாழ்க்கை வாழப் போவதில்லை!" என்று சொல்லிக் கொள்ளுங்கள்! 'இப்படியே இருக்கப் போவதில்லை' என்று தீர்மானியுங்கள். அப்படியே ஆவீர்கள்.

- "எதையும் சமாளிக்கும் இயல்பை என்னுள் வைத்துத்தான் ஆண்டவன் படைத்திருக்கிறான். என்னால் எதையும் சமாளிக்க முடியும்" என்று நம்புங்கள். சமாளியுங்கள். பயப்படாதீர்கள். இறங்குங்கள்.

- சவால்களை எடுத்துக்கொள்ளத் தயங்காதீர்கள். தொழிலதிபர் - வியாபாரி - எடுக்கும் கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் **"அதிகம் வெற்றி வாய்ப்புள்ளவை"**யாக இருக்கவேண்டும். இதை CALCULATED RISK என்பார்கள். ஒரு திட்டத்தை பரிசீலித்தால் — "இதில் நாற்பது சதவீத தோல்வி ஏற்படலாம்; அதாவது அறுபது சதவீத வெற்றி வாய்ப்பு இருக்கிறது. எனவே

வெற்றி வாய்ப்பு அதிகம்" என்பதை ஆராய்ந்து இறங்குங்கள். சில சமயம் சில தொழில்களின் வெற்றி வாய்ப்பு 90 சதம் இருக்கும்.

மறந்தும் லாட்டரிச் சீட்டு சூதாட்டம் போன்ற வெற்றி வாய்ப்பு குறைந்த தொழில் களை கண்ணெடுத்தும் பார்க்காதீர்கள்!

- நல்ல தொழிலதிபர்களின் வாழ்க்கை வரலாறுகள் உங்கள் கைவசம் இருக்கட்டும். அவற்றை அடிக்கடி படியுங்கள். அவர்கள் படத்தை அறையில் மாட்டி வையுங்கள். அவர்கள் உங்களுக்கு முன்மாதிரியாக — மானசீக குருவாக — இருக்கட்டும்.

- தொழிலில் 24 மணி நேரமும் கவனம் தேவை. உச்சிக்கு வந்துவிட்டோம் என்று, பெயரிலோ, புகழிலோ, சின்னவீட்டிலோ, பொறுப்பை பிறரிடம் கொடுத்துவிட்டோ இருக்கலாம் என்று மறந்தும் எண்ணிவிடாதீர்கள். உங்களுக்குத் தெரியாமலே தொழில் கீழ்நோக்கி வேகமாகப் போய் விடும். "கண்காணிப்பில்லாத தொழிலில், வீழ்ச்சியின் வித்து விதைக்கப் பட்டிருக்கிறது" என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

- தோல்வி வரும் - கலங்காதீர்கள். வாழைப் பழத் தோல் சறுக்கிவிடுகிறது. கீழே விழுந்து விடுகிறோம். அடி படுகிறது. அதற்காக அங்கேயா படுத்துக் கிடக்கிறோம்? இல்லையே! "கீழே விழுவதில் தவறில்லை; எழுந்து நிற்காதது தான் குறை" என்றான் ஒரு அறிஞன். இதை நினைவில் கொள்ளுங்கள்.

- "செய்யுந் தொழிலே தெய்வம்" என்பதை நம்புங்கள். தொழிலை தெய்வமாக பாவியுங்கள். குளித்து முழுகிவிட்டு எப்படி பக்தியுடன் பூஜை செய்கிறோமோ அப்படி, சில நெறிகளுடன் தொழில் செய்யுங்கள். ஒழுக்கம், உண்மை, தர்ம நியாயம், ஒழுங்கு, கட்டுப்பாடு இவை முக்கியம். இவைதான் உங்கள் தொழிலை கடவுளுக்கு அருகில் எடுத்துச் செல்கிறது.

- "என்ன நேர்ந்தாலும் நம் குடும்பத்தைக் காப்பாற்ற" என்று, ஒரு தேவைப்படும் தொகையை — சொத்தை — சம்பாதிக்கத் துவங்கியதும் — ஒதுக்கி வைத்துக்கொள்ள முயலுங்கள். சேமிப்பு அவசியம். தேவைக்கு மேற்பட்டதை அது வந்த இடத்திற்கே திருப்பி அனுப்புங்கள் — பொது மக்களிடமிருந்து வந்த லாபத்தை பொது மக்களுக்கே திருப்புங்கள்; தான தர்மமாகச் செய்யுங்கள்; அல்லது வேலை வாய்ப்பளிக்கும் பல தொழில்களைத் துவக்குங்கள்.

- கடன் வாங்குகிறீர்களோ இல்லையோ நல்ல வங்கிக்காரர்களுடன் நல்ல தொடர்புகள் வைத்திருங்கள். உங்கள் நிறுவனத்தைச் சுற்றிக் காட்டுங்கள். உங்கள் சாதனைகளை அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருங்கள்.

- தொழில் சரியில்லை என்றால் வேறு தொழிலை அல்லது வேறிடத்தில் தொழிலைத் துவக்க முனையுங்கள். இடம் மாறுவதைப் பற்றிப்

பயப்படாதீர்கள். கொத்தமங்கலம் சுப்புவின் பாடலை ஒரு சினிமாவில் ஒரு சர்க்கஸ் கம்பெனிக்காரராக என்.எஸ். கிருஷ்ணன் பாடுகிறார்:

“பட்டணத்துலே டேரா போட்டு கொட்டி
முழக்குவோம் !
பண வசூலு இல்லையானால் பொட்டியைத்
தூக்குவோம் !"

என்று.

இன்று தமிழ்நாட்டில் நாமக்கல், ஈரோடு, சேலம், கரூர், ஓசூர், மதுரை, திருச்சி, தேனி, நெல்லை, தூத்துக்குடி போன்ற இடங்கள் நிறைய வாய்ப்புக்களை உள்ளடக்கி இருக்கின்றன.

நான் அடிக்கடி சொல்வது, பணம் செய்ய விரும்புபவர்களுக்கு மூன்று விதிகள்:

- எங்கே பணம் புழங்குகிறதோ அங்கே செல்லுங்கள். (அந்த உற்சாகம், அந்த உணர்வு அந்த வாய்ப்பு உங்களையும் ஈர்த்து உதவும்.)
- யார் பணம் பண்ணுகிறார்களோ அவர்களுடன் பழகுங்கள்.
- தொழில் செய்வதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருங்கள். அதே நினைவாக ஒவ்வொரு வாய்ப்பையும் கவனியுங்கள்.

வேறென்ன வேண்டும்?

வெற்றி உங்களுக்குத்தான்!

வாழ்த்துக்கள்!

—எம்.எஸ். உதயமூர்த்தி

பொருளடக்கம்

1

சொந்தக் காலில் நில்!

தன் காலில் நிற்பவனுக்கு — தானே முயன்று முன்னேறப் பாடுபடுபவனுக்கு — கடவுள் உதவி செய்கிறார். தன் காலில் நிற்பவன் தன்னைப் பற்றிப் பெருமைப்படுகிறான். தன் சாதனையை எண்ணி மகிழ்கிறான். தன்னால் முடியும் என்ற நம்பிக்கை அவனிடம் பிறக்கிறது. அந்த நம்பிக்கை அவனுக்கு மகிழ்ச்சி தருகிறது. . அவனது தன்மானத்தை வளர்க்கிறது.

எனது நண்பர் பரஞ்சோதிக்கு அப்போது இளவயது. அப்போதுதான் திருமணம் செய்து கொண்டார். ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடத்தில் அவருக்கு வேலை கிடைத்தது. வாடகை வீடு கிடைத்தது. ஆனால், தண்ணீர்தான் இல்லை!

குடிப்பதற்கும் குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும், பாத்திரம் கழுவுவதற்கும் அவர் மனைவி நெடுந்தூரம் சென்று தண்ணீர் கொண்டு வரவேண்டி இருந்தது.

ஊர்க்குளம் வெகு தொலைவில். "வீட்டில் ஒரு கை பம்ப் போட்டுவிடலாம்; 400 ரூபாய்தான்

செலவாகும்" என்றார்கள். பணம் நாலு மாதத்திய சம்பளம்! வீடோ வாடகை வீடு. நாளைக்கு வேறு ஊருக்கு வேலை மாறினால், அடி குழாய் முழுவதுமாக எடுத்துக்கொண்டு போக முடியாது. தெருக்கோடியில் ஒரு பெரிய மனிதர் வீட்டில் தண்ணீர் பிடித்துக் கொள்ளலாம் என்றார்கள். ஆனால், அங்கே கூட்டம் அதிகம். ஒரு இளம் பெண் போகிறாற்போல இல்லை.

தன்னம்பிக்கை

பரஞ்சோதியும் அவர் மனைவியும் என்ன செய்தார்கள்? ஒரு மண்வெட்டியும் கடப்பாறையும் கூடையும் வாங்கினார்கள். மாலை வேளைகளில் தினமும் கொல்லையில் கிணறு தோண்டினார்கள் ஒரு மாதத்தில் 16 அடி ஆழத்தில் தண்ணீர் சலசலவென்று ஊறத் தொடங்கியது.

அவரோ ஆசிரியர். உடல் உழைப்பு அதிகம் செய்யும் பழக்கம் உடையவர் அல்ல. அவர் மனைவியோ நல்ல குடும்பத்தில், சற்று வசதியாக வாழ்ந்தவர். தண்ணீர் கொண்டுவர ஒரு ஆளைப் போட்டிருக்கலாம்.

ஆனால், மனிதர் செயலில் தானே இறங்கினார். யாரையும் எதிர்பார்க்கவில்லை. தன் கொல்லை யிலேயே தண்ணீரைக் கொண்டு வந்தார்!

சொந்தக் காலில் நிற்கும் ஆசை, மனதிற்குள் வேண்டும். "ஏன் முடியாது?" என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். அதைச் செயல்படுத்த வேண்டும்.

அவ்வளவுதான்! வீட்டிலே கங்கையை, காவிரியைக் கொண்டுவந்து விடலாம்!

அந்த ஆசிரியரோடு நான் கைகுலுக்கினேன். கைகள் எல்லாம்— உள்ளங்கையின் தோல் எல்லாம் கறடு தட்டிப் போயிருந்தன. "ஏன்?" என்று கேட்டேன். அப்போது தான் சொன்னார், இந்தக் கதையை.

அவரைப் பற்றிய என் மரியாதை பலமடங்கு கூடியது. யாரையும் எதிர்பார்க்கமாட்டார். "கிடைத்தால் நல்லது; இல்லாவிட்டால் நமது வண்டி தானே ஓடும்!" என்பார், சிரித்துக்கொண்டே.

பணம் கொடுங்கள் !

நமது நாட்டில் பெரும்பாலோர் தன்னால் முடியும் என்பதில் நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அல்லது உழைப்பது கேவலம் என்று "மதிப்பு"ப் பார்க்கிறார்கள். அல்லது மாமனாரோ பெற்றோர்களோ இனாமாகப் பணம் காசு கொடுத்தால் என்ன என்று எதிர்பார்க்கிறார்கள்.

நம்மால் முடியும் என்று ஒரு தொடர் கட்டுரை எழுதிய போது, ஒரு இளைஞர் எனக்கு எழுதியிருந்தார்- கும்பகோணத்திலிருந்து.

"ஐயா! 'நம்மால் முடியும்' என்பதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன். ஒரு இலட்ச ரூபாய் கடன் கொடுங்கள். இரண்டு ஆண்டுகளில் நான் இலட்சாதிபதியாக ஆக முடியும் என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன்" என்று எழுதி இருந்தார்.

எனக்கு சிரிப்புத்தான் வந்தது! யாராவது பணம் கொடுத்தால், இவரால் பணத்தை உண்டு பண்ண முடியுமாம்!

அமெரிக்கக் குடியேற்றம்!

எனக்கு 'மே பிளவர்' என்ற கப்பலில் முதன் முதலாக அமெரிக்காவுக்குக் குடியேற வந்த இருநூறு மக்களின் நினைவுதான் வந்தது. ஏதோ துணிமணி, பாத்திரம், துப்பாக்கி இவற்றைக் கொண்டு வந்திருக்கக்கூடும். அமெரிக்காவில் இறங்கிய காலமோ கடுங்குளிர் காலம். மரங்களை வெட்டி வீட்டைக் கட்டிக் கொண்டார்கள். உணவுக்கு மிருகங்களை வேட்டையாடிச் சாப்பிட்டார்கள். அன்று அப்படி தன் காலில் நிற்கும் சமுதாயமாகத்தான் அமெரிக்கா தொடங்கியது

"ஐயோ! இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே!" என்று யாரும் அழவில்லை; புலம்பவில்லை. 'என்ன செய்வேன், ஏது செய்வேன்' என்று கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க வில்லை.

"கவலைப்படாதே!" என்று அவன் தனக்குத் தானே சொல்லிக்கொள்கிறான்; தன் மனைவியைப் பார்த்து சொல்கிறான். வேலை செய்ய இறங்குகிறான். ஒரு புதிய வலிமை படைத்த நாட்டை தோற்றுவிக்கிறான்.

மனஉறுதி

அன்று அவனுக்கு என்ன இருந்தது? பொருள் என்று எதுவும் இல்லை. எல்லாப் பொருளையும்

தானே உருவாக்கினான். எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லாவற்றையும் உருவாக்க முடியும் என்ற மனம் இருந்தது; மனத்தெம்பு இருந்தது; மன உறுதி இருந்தது.

சாதனையின் மூலம்: மனத்தெம்புதான்; மனஉறுதிதான்.

பகீரத தவம் செய்தால் கங்கையைக்கூட கொண்டு வரமுடியும் என்று நமது புராணக் கதைகள் கூறுகின்றன. மனித மனம்தான் எல்லாவற்றிற்கும்-எல்லா சாதனைக்கும் காரணமாயிருக்கிறது.

அன்றாடம் நாம் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறோம். சிலர் மேலே மேலே முன்னேறிக் கொண்டே போகிறார்கள். சிலர் கையைப் பிசைந்து கொண்டு உட்கார்ந்த இடத்திலேயே இருக்கின்றனர்.

பலர் "அவன் பரம்பரையாகப் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன்" என்று அங்கலாய்க்கிறார்கள்.

"அவன் பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொண்டான். மாமியார் வீட்டுச் சொத்து வந்தது" என்று பேசுகிறார்கள்.

"எல்லாம் அவன் அதிருஷ்டம்! பழைய இரும்புக் கடைதான் வைத்திருந்தான். இரும்புக்கு தட்டுப்பாடு வந்தது. பழைய இரும்பை எல்லாம் தங்கத்தின் விலைக்கு விற்றான்" என்கிறார்கள்.

இவர்களை யார் பழைய இரும்பு சாமான் கடை வைக்க வேண்டாமென்று சொன்னார்கள்?

யார் தடுத்தது ?

"அவன் அபுதாபிக்குப் போனான்; அமெரிக்காவுக்குப் போனான்; ஆங்காங்கிற்குப் போனான்; பணக்காரனாய்த் திரும்பினான்!" என்று நொந்து போய் சமாதானம் சொல்கிறார்கள்.

இவர்களை யார் போகவேண்டாம் என்று தடுத்தார்கள்?

அவர்களே போகவில்லை! போக வேண்டும் என்று நினைக்கக்கூட இல்லை! ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற முதலில் பந்தயத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்பதுகூட அவர்களுக்குத் தெரிவதில்லை!

"எப்படி என்னால் முடியும்!" என்ற எண்ணம் மனிதனை முடக்கிவிடுகிறது. அதனால் பலரும் முயல்வதில்லை. "மந்திரத்தில் மாங்காய் விழும். தங்கத் தாம்பாளத்திலே இளவரசியை வைத்து திருமணம் செய்துகொள்'' என்று பிறர் சொல்வதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி எல்லாம் எதுவும் நடக்காது. அது இயற்கையும் அல்ல. உலக யதார்த்த நிலை அதுவல்ல. கதைகளில் மட்டுமே அப்படி நடக்கும்.

நானும் எதிர்பார்த்தேன் !

அந்தக் காலத்தில் திருவண்ணாமலையில் "எஸ்.வி.வி." என்றொரு வழக்கறிஞர் ஆங்கிலத்தில் அழகாக நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதுவார். அவரைத் தமிழில் கதைகள், கட்டுரைகள், எழுதச்

சொல்ல வேண்டுமென்று கல்கி அவர் வீட்டுக்கு சென்று இரவு பதினோரு மணிக்கு கதவைத் தட்டுகிறார். "தமிழில் எழுதவேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறார்.

இதைப் படித்தபோது நமது வீட்டுக்கும் பெரிய பத்திரிகாசிரியர்கள் வந்து கதவைத் தட்டுவார்கள். என்று நான் வெகுநாள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்! ஒரு ஆள் வரவில்லை! ஆகக்கூடி நானாகவே கிராமத்தில் இருந்து கொண்டு கதைகளை எழுதி அனுப்பிக் கொண்டிருந்தேன்.

நாம் உலக யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். எது சாதாரணமாக நடக்கும் என்ற உண்மை நிலவரம் புரிய வேண்டும். ஆசைப்படு பவர்கள் பலர் உலகின் உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்வதில்லை. உலக ஞானம் இருப்பதில்லை.

கட்டுப்பாடு

நமது வாழ்வின் எல்லா விஷயங்களையுமே வெளி உலகம்தான் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது என்று பலரும் எண்ணுகிறார்கள். அது உண்மையல்ல. நாம் அனுமதித்தால் தவிர, வெளி உலகம் நம்மைக் கட்டுப் படுத்தாது.

நமது உலகம். நமது எதிர் காலம், நம் கையில்தான் இருக்கிறது. பிறர் கையில் இல்லை. அது. பிறர் தருவதில்லை, அது. நாமேதான் நம்மை, நாம் விரும்பும் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்கிறோம்.

சொல்கிறார், ஒரு சங்க காலப் புலவர்- **"தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என்று.

தீமையும் சரி நன்மையும் சரி பிறர் தருவதில்லை. நாமேதான் உருவாக்கிக் கொள்கிறோம் என்கிறார்.

எப்படி?

பார்க்கும் விதத்தினால்!

மனம்போல வாழ்வு

தீமை என்று எண்ணி "ஐயோ! இப்படி நேர்ந்ததே எனக்கு" என்று புலம்பினால் அதுதான் நம் நிலையாக மாறும். அதற்கு மாறாக, "அதை முறியடிக்கிறேன். பார்!" என்று அதை சவாலாக எடுத்துக் கொண்டோ மானால், தீமை கூட நமக்கு நன்மை செய்யும் சந்தர்ப்பமாக- வாய்ப்பாக- மாறிவிடும். எல்லாம் நாம் பார்க்கும்விதத்தைப் பொருத்திருக்கிறது. எல்லாம் நாம் எடுத்துக்கொள்ளும் மனநிலையைப் பொருத்திருக் கிறது. "மனம் போல வாழ்வு" என்பார்களே!

ஜேம்சு ஆலன் என்ற தத்துவ ஞானி சொல்கிறார்- "தம்பீ! மகனே! இத்தனை நாள், மனிதன், 'எல்லாமே தன் தலையில் எழுதப்பட்டு விட்டது. எல்லாமே என் தலைவிதி' என்று தலைவிதியை எண்ணி நொந்து கொண்டிருந்தான். நாம் வாழும் இந்தக் காலத்தில் ஒரு புதிய ஒளி பிறந்தது. மனிதன் எப்படிப்பட்ட குணமுள்ளவனாக மாற விரும்புகிறானோ அப்படி அவன் தன்னை மாற்றிக் கொள்ள முடியும்- ஒரு சிற்பி தான் விரும்பும்வண்ணம் ஒரு சிலையைச் செதுக்கி உருவாக்குவது போல, தன்

வாழ்க்கையை தான் உருவாக்கிக்கொள்ள முடியும். அவன் விதியை அவன் தான் நிர்ணயிக்கிறான். பிறர் அல்ல" என்று எழுதுகிறார்.

நீங்களும் உங்கள் தலை விதியை மாற்றி எழுத முடியும். அதற்குச் சொந்தக் காலில் நில்லுங்கள். உங்களிடம் அற்புதமான இரண்டு கால்கள் இருக்கின்றன. அதை விட அற்புதமான எதையும் சாதிக்கும் மனம் இருக்கிறது. மனதைப் புரிந்து கொண்டால், தன்னம்பிக்கை பிறந்தால் சொந்தக் காலில் நிற்க முடியும்!

சொந்தக் காலில் நின்றால் எவ்வளவு சாதிக்க முடியும் தெரியுமா? என்னவெல்லாம் செய்ய முடியும் தெரியுமா? சொல்லுகிறேன்!

2

வேண்டாம், மன ஊனம்!

"நீ சுதந்திரமான மனிதனா? நீ சுதந்திரமாக இருக்க விரும்புகிறாயா?'' என்று யாரையாவது கேட்டுப் பாருங்கள்! எல்லோரும் "ஆமாம், ஆமாம்!" என்று தான் பதில் சொல்வார்கள்.

ஆனால், நடைமுறை வாழ்வில், நமது நாட்டு சூழ்நிலையும் சரி, மக்கள் மனோநிலையும் சரி, பிறரைச் சார்ந்து நிற்கிற நிலையில் தான் இருக்கிறது.

பிள்ளைகளைப் பள்ளியில் சேர்ப்பது முதல், படித்து முடித்து வேலை வாங்கும் வரை "யாரைப் பிடித்தால் நடக்கும் என்கிற சூழ்நிலை, நாட்டில். "நான் இன்னாருடைய மகன்; உறவினன்" என்ற முறையில், அதை வைத்துக்கொண்டு, உதவி கேட்கும் சார்பு நிலை. எங்காவது, யாரையாவது ரெயிலில் சந்தித்திருந்தால் கூட அதை வைத்துக்கொண்டு உதவி கேட்பவர்கள் உண்டு.

சூழ்நிலை அப்படி இருக்கிறது என்பது ஒரு பக்கம். நியாயமில்லாத வேலைகளைக்கூட முறை யில்லாத வழியில் யாரையாவது வைத்து

சாதித்துவிடலாம் என்கிற நம்பிக்கை- தவறான மனப்போக்கு. மற்றோர் பக்கம்.

இதுவன்றி பலருக்குச் சொந்தக் காலில் நிற்க பயம். அதற்காக ஒரு சுமைதாங்கியைத் தேடுகிறார்கள். இதன் காரணம் என்ன?

நான் தகுதியற்றவன்!

'நான் தகுதியற்றவன்' என்று நம் மீதே முத்திரை குத்திக்கொண்டு, பிறரைத் துணைக்கு அழைக்கும் குணம். 'நம்மால் முடியாது' என்று நம் மீதே நமக்கு அவநம்பிக்கை. என்னால் முடியுமா என்ற சந்தேகம். 'பாரத்தைப் பிறர் மீது போட்டுவிட்டால், நமக்குப் பளு குறைந்தது' என்று தப்பிக்கும் மனோபாவம்.

இப்படிப் பயப்படத் தேவை இல்லை. நம் மீது நம்பிக்கை வைத்து துணிந்து நின்றோமானால்- துணிந்து செய்தோமானால்- சூழ்நிலையே மாறிவிடும் என்பதுதான் மனவியல் கூறும் உண்மை; அனுபவம் காட்டும் உண்மை.

அதைவிட, நம்மை நாமே அறிந்துகொள்ள வில்லை; நமக்கு நாமே ஒரு சந்தர்ப்பம் அளித்து, உள்ளுக்குள்ளே எப்படிப்பட்ட ஆள் இருக்கிறார் என்பதை நாமே அறிந்து கொள்வதில்லை.

எதுவுமே முதலில் பயமாகத்தான் இருக்கும்; ஒரு வேலையை செய்யத் தொடங்கி, செயலில் இறங்கினோமானால் பிறகு அது எளிதாகிவிடும்; நமது பயம் விட்டுப்போகும்.

உங்களுக்குக் குதிரை சவாரி செய்ய ஆசை. ஆனால், குதிரை ஏறினால் கீழே தள்ளிவிடுமோ என்ற பயம். குதிரை மீது சவாரி செய்வது எப்படி என்று எவ்வளவு நாளைக்குத்தான் புத்தகங்களைப் படிப்பது? குதிரை கீழே தள்ளாமல், குதிரையை எப்படிக் கையாள்வது என்று எத்தனை நாளைக்கு நாம் 'குதிரை சவாரி' பயிற்சி கொடுப்பவனைக் கேட்டுக் கொண்டே இருக்க முடியும்? குதிரை மீது ஏறி, அதை சமாளிக்க முயலும் போதுதான் நமக்கு முழுமையாக விளங்கும். அனுபவம் ஏற்படும்.

குருவிக்கூடு

எங்கள் வீட்டு மரத்தில், மறைவான இடத்தில் ஒரு குருவி, கூடு கட்டி இருந்தது. கொஞ்சநாள் கழித்து குருவிக் குஞ்சுகள் சத்தம் போடத் தொடங்கிய பின்தான் அங்கே குருவிக் குஞ்சுகள் இருப்பது தெரிய வந்தது. தாய்க்குருவி தினந்தோறும் தன் குஞ்சுகளுக்கு இரை கொண்டுவந்து கொடுத்தது.

ஒருநாள் பார்த்தேன். ஒரு குருவிக்குஞ்சு கீழே விழுந்திருந்தது. உதவுவோம் என்று அருகில் சென்றபோது அது தத்தித் தத்தி நகர்ந்து என் பிடியிலிருந்து அப்பால் சென்றது. நானும் விடாமல் பிடிக்க முயற்சிக்கப் பறக்கத் தொடங்கியது.

பிறந்த குருவிக் குஞ்சைப் பார்த்து "நீ ஏன் பறக்க வில்லை. நீ ஏன் உன் காலில் நிற்கவில்லை?" என்று யாரும் கேட்பதில்லை. ஆனால், இறக்கை முளைத்தவுடன் அது தானே பறக்கத் தொடங்குகிறது. முதலில் தத்தித் தத்தி தாவுகிறது. பின் பறக்கிறது.

தேவை ஏற்படும் பொழுது, பறக்கத் தெரியா விட்டாலும், பறக்க முயற்சிக்கிறது. அதில் வெற்றியும் பெறுகிறது.

அதுபோல, நாம் முயன்றால், நம் காலிலே நிற்க முடியும். நமது பயம், நம்மால் முடியாது என்ற சந்தேகம் நம்மை முடக்கி வைத்திருக்கிறது.

நமக்கு நாமே ஒரு வாய்ப்புக் கொடுத்து, "என்ன, குடியா முழுகிவிடும்?" என்று எண்ணி இறங்குவ தில்லை. "பத்திரம்.... பத்திரம்" என்று பாதுகாப்பை நாடி, நாம் கூண்டுக்குள் பதுங்க முயற்சிக்கிறோம்.

எல்லை வேண்டாம்!

நாமாக நமக்குள் சில எல்லைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். "இவ்வளவுதான் என்னால் முடியும்" என்று வரையறுத்துக்கொள்ளுகிறோம். அது உண்மையல்ல-நீங்கள் முயன்று பார்க்காத வரை. நாம் முயன்றோமானால் நம்முள் பல்வேறு திறமைகள்-அசாதாரணமான குணங்கள் இருப்பது தெரியவரும். நமது முயற்சிகளுக்கு வானமே எல்லை.

குடும்பப் பெண்ணாக வாழ்ந்தவள்தான், கண்ணகி. எனினும் தேவை என்று வரும்போது நீதி கேட்டு அரசன் முன் நடக்கவில்லையா? நியாயம் கேட்டுப் போராடவில்லையா?

ஒரு கல்லூரி ஆசிரியர் சொன்னார்- "இதுவே வாழ்க்கை என்று, தினந்தோறும் சொல்லிக் கொடுத்த பாடத்தையே சொல்லிக் கொடுத்துக்கொண்டு, நாளை ஓட்டிக் கொண்டிருந்தேன். வாழ்க்கை சலித்தது.

வெளியில் இறங்க வேண்டுமென்ற ஆசை அதிகம் இருந்தது. ஆனால், பயம்.

படிப்பே இல்லாத கிராமத்து மனிதன்-எங்கள் வீட்டுக்குப் பால் ஊற்றுபவன், ஆந்திராவிலிருந்து மாம்பழங்களை வாங்கிக்கொண்டு வந்து விற்பதைப் பார்த்தேன். சாக்கு மூட்டைகளை தலையில் சுமந்தும், சைக்கிள் ரிக்ஷாவில் ஏற்றியும் வியாபாரம் செய்தவன், சில ஆண்டுகளில் கல்லாப்பெட்டிக்கு அருகே நின்று கொண்டு பழம் மொத்த வியாபாரம் செய்வதைக் கண்டேன்! தைரியத்தை வரவழைத்துக்கொண்டேன். இன்று தேங்காயைத் துருவி, காயவைத்து, தேங்காய்த் தூள் செய்து, அதைப் பாக்கெட்டில் போட்டு ஏற்றுமதி செய்து வருகிறேன்" என்றார்.

மக்கள் அவரை வியப்புடனும் மரியாதை யுடனும் அண்ணாந்து பார்க்கிறார்கள்.

"பயம்தான் மனிதர்களை முடக்கிவிடுகிறது. அதிலும் பிறர் என்ன சொல்வார்களோ என்கிற பயம்தான் மனிதனை அதிகம் முடக்கிவிடுகிறது" என்கிறார்கள், மனவியல் அறிஞர்கள்.

"சொந்தக் காலில் நில்" என்று சொல்லும்போது சொந்தக் காலில் நிற்க முடியாத இளங்குழந்தை களையோ, வயோதிகர்களையோ, ஊனமுற்றவர் களையோ நோயுற்றவர்களையோ நாம் ஏதும் கூறவில்லை. ஆனால்—

ஊனமுற்ற வழக்கறிஞர் ஒருவரை நான் அறிவேன். அவரால் நடக்க முடியாது. தள்ளுவண்டி யில் வைத்து நீதிமன்றத்துக்குத் தள்ளிக் கொண்டு

போவார்கள். நீதிபதி முன் வாதாடுவார். இதில் வேடிக்கை என்னவென்றால், அவர் வீட்டில் கை கால்களெல்லாம், கண், காது, மூக்கு, வாய் எல்லாம்—நன்கு விளங்கக்கூடிய மனிதர்கள் ஏராளமான பேர் அங்கே வரிசையாக அமர்ந்து அவருக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்!

உடல் ஊனம் அவரை எதுவும் செய்யவில்லை; அவரை ஒதுக்கிவிடவில்லை. ஏனெனில் அவரிடம் மன ஊனம் இல்லை. தன்னால் முடியும் என்ற நம்பிக்கை. அவருக்கு நிறைவு தந்தது; மரியாதை தந்தது; பெருமை தந்தது.

அன்றாட வாழ்வில் உடல் ஊனமுற்றவர்களை விட மன ஊனம் உற்றவர்களைத் தான் கோட்டு சூட்டுக்கு அடியிலும், வேட்டி சட்டை துண்டுகளுக்கு உள்ளேயும் பார்க்கிறோம்.

சாதனைக்கு எல்லை கிடையாது.

ஆனால் கொஞ்சங் கொஞ்சமாகத் தொடங்க வேண்டும். காலை ஊன்றி நடக்க வேண்டும், முதலில்.

உங்களுக்கு இறக்கை முளைத்துவிட்டதா என்று தடவிப் பாருங்கள். தத்தித் தத்தித் தாவமுடியுமா, பாருங்கள். பின் பறக்க முயலுங்கள்-குருவிக் குஞ்சு போல.

'வல்லூறு துரத்துமே' என்கிறீர்களா? அதற்கும் வழி இருக்கிறது.

3

சொந்தக்காலும் சுதந்திரமும்

"உலகின் ஆறு உண்மைகள்" என்றொரு புத்தகம் எழுதி இருக்கிறார் மார்ட்டிமர் ஆட்லர், ஆட்லர் அமெரிக்க கலைக் களஞ்சியத்தின் தலைமை ஆசிரியர். நிறையப் படித்தவர். நல்ல ஞானம்.

என்ன அந்த ஆறு உண்மைகள்? சுதந்திரம், சமத்துவம், ஒழுக்கம், நேர்மை, உண்மை, நல்லெண்ணம் என்பவைதான் அவை.

நம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய குணங்கள்— குறிப்பாக சொந்தக்காலில் நிற்க விரும்புபவர்களிடம் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள், இவை.

மனிதன் சுதந்திரமாக வாழத்தான் படைக்கப் பட்டிருக்கிறான். சமுதாயம், உலகம், பிரபஞ்சம் என்ற மாபெரும் அமைப்பில் நமக்கென்று நிறைய சுதந்திரம் இருக்கிறது. அந்த சுதந்திர வாழ்க்கையை நாம் வாழ்கிறோமா? சுதந்திரமாக சிந்திக்கிறோமா? சுதந்திரமாக செயல்படுகிறோமா?

கவிஞர்கள் அனைவரும் எல்லா நாட்டிலும் சுதந்திரப் பிரியர்கள். மரபுகளை மீறுவார்கள். கற்பனை சிறகடித்துப் பறக்கும். அவர்களுக்கு எல்லை கிடையாது; வானம் தான் எல்லை. 'காக்கை குருவி எங்கள் சாதி, நீள்கடலும் மலையுமெங்கள் தோட்டம்' என்பார்கள். 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென் பதில்லையே' என்பார்கள். புரட்சிகளுக்கெல்லாம் வித்திடுவார்கள். "ஏன் கூடாது?", "ஏன் முடியாது?" என்ற கேள்விகளை சதா எழுப்புவார்கள். அவர்களால் தான் இவ்வுலகின் பரிணாமவளர்ச்சி மாற்றம், முன்னேற்றம் நிகழ்கிறது.

அந்த சுதந்திரத்தன்மை நம் ஒவ்வொருவருள்ளும் ஓரளவாவது இருக்க வேண்டும். அதுவும் சொந்தத் தொழில் செய்பவர்களிடம் அபரிதமிதமாக இருக்க வேண்டிய குணம். இது. நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்பு இது. ஏனெனில் சுதந்திரமாக செயல்படும்போது பிறருடைய நெருக்கடிகள், எதிர்பார்ப்புகள் எல்லாம், நம்மை ஒன்றும் செய்வதில்லை. இதன்விளைவாக, நம்மை நம்பி, நாம் இறங்குகிறோம். நம்மை நம்பி நாம் இறங்கும்போது, நமக்குள்ளே இருக்கும் எல்லாத் திறமைகளும் வெளிவருகின்றன. "எனக்குள் இவ்வளவு திறமையா? துணிச்சலா?" என்று நம்மைப் பார்த்து நாமே ஆச்சரியப்படுகிறோம்.

சுதந்திரமாய் நிற்க, செயல்பட, மனிதனுக்கு துணிவு வேண்டும். துணிவு, கடையில் வாங்கும் பொருளல்ல. அது மனத்தில் பிறக்கிறது. 'நான் எதற்கும்

அஞ்சப் போவதில்லை' 'சங்கடங்கள்- தோல்விகள் என்னைக் கீழே தள்ள முடியாது' என்று சவால் விடும் துணிவு. அந்தத் துணிவு நமக்குள்ளே இருக்கிறது.

பயிற்சிகள்

'என்னால் முடியாது' என்ற பயத்தை விரட்ட 'என்னால் முடியுமா?' என்ற சந்தேகத்தை- விரட்ட செயலில் இறங்குவதற்கு ஈடாக எதுவுமே கிடையாது. கீழே சில பயிற்சிகளைத் தருகிறேன். அவற்றைச் செய்து பாருங்கள்.

உங்கள் வீட்டுத் தோட்டத்தை- கொல்லையை- கொத்திப் பாருங்கள். கொத்தி முடிந்தவுடன் வியர்த்திருக்கும்; களைத்திருக்கும். இது தற்காலிகம். ஆனால், "செய்து முடித்தேன்" என்ற திருப்தி இருக்கிறதே. 'நான் செய்துவிட்டேன்' என்ற பெருமை இருக்கிறதே, 'இது எங்கள் வீட்டுத் தோட்டத்தில் காய்த்த கத்தரிக்காய்' என்று சொல்லும்போது, 'இது நானும் என் மனைவியும் சேர்ந்து வெட்டிய கிணறு' என்று காட்டும் போது, "இது கடைச் சாப்பாடல்ல, வீட்டில் நான் செய்த சமையல்" என்று பரிமாறும் போது ஏற்படும் மகிழ்ச்சி இருக்கிறதே, அதற்கு ஈடு இணை கிடையாது. ஒவ்வொரு சிறிய சாதனைக்கும் பின்னால், நம்மால் முடியும் என்ற நம்பிக்கை வளர்கிறது.

யாரையும் இனி நீங்கள் சார்ந்து நிற்கவேண்டிய தில்லை. முயன்றால் முடியும்.

உங்களுக்கும் சரி, உங்கள் குழந்தைகளுக்கும் சரி, தொடக்க கட்டத்தில் சிறு சிறு வேலைகளாகக்

கொடுத்துக் கொள்ளுங்கள். ஆர்வர்டு பல்கலைக் கழகத்தின் பிரபல மனவியல் பேராசிரியர் டேவிட் மெக்கிலண்ட் என்பவர்-

"சிறிய சிறிய வேலைகளை எடுத்துக்கொண்டு அதில் வெற்றி காணுங்கள். இது நல்ல மனப் பயிற்சி. நாளடைவில் பெரிய வேலைகளைக்கூட தயங்காமல் உங்களால் சாதிக்கமுடியும்" என்கின்றார்.

பயத்துக்கு மருந்து வேலையில் இறங்குவதுதான், செயல்தான், நம்மைப் பற்றிய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வழி முயன்று பார்ப்பதுதான்.

ஏற்றத்தாழ்வு

இரண்டாவதாக-

மனிதர்களுக்கிடையே காணும் ஏற்றத்தாழ்வு கீழே இருக்கும் மனிதனை முடக்கி விடுகிறது. "அவனுக்கென்ன, பணக்காரன் மாளிகையில் பிறந்தவன்" என்கிறோம். "அவர் பெரிய பதவியில் இருப்பவர்" என்று பலரும் வாய்பொத்தி கைகட்டி நிற்கின்றனர். பணம், பதவி புகழ் என்று எதுவாக இருந்தாலும், அது நம்மை முடக்க- பயமுறுத்த அனுமதிக்கக் கூடாது; அனுமதிக்கத் தேவை இல்லை.

அவர்களுக்கு மரியாதை செலுத்தலாம். அது தவறல்ல. ஆனால், அதற்காக உங்களைத் தாழ்த்திக் கொள்கிறீர்களே, அதுதான் தவறு; மகத்தான பாவம்; உங்கள் தன்மானத்திற்கு நீங்கள் இழைக்கும் கொடுமை.

தன்மானம் என்ற 'தன்னைப் பற்றிய பெருமை' எல்லோரிடத்திலும், குழந்தைகளிடமிருந்து பெண்

களிடமிருந்து, ஏழைகளிடமிருந்து எல்லோரிடமும் இருக்க வேண்டிய ஒரு ஆன்ம நிலை. அதைத் தவறியும், மறந்தும் கேவலப்படுத்தாதீர்கள். அதேபோல பிறர் உங்களது தன்மானத்தை இழிவுபடுத்தும் எந்த செயலையும் செய்ய அனுமதிக்காதீர்கள்.

சொந்தக் காலில் நிற்க விரும்புபவன் எல்லோரையும் சக பயணியாகத்தான் பார்க்கிறான். பிறரை மதிக்கிறான்— ஆனால், தன்னைத் தாழ்த்திக் கொள்வதில்லை!

பள்ளிக் குழந்தைகள் வயதில், உருவில் சிறிய வனாயிருக்கிறான் அல்லது சிறியவளாயிருக்கிறாள் என்று எந்த ஆசிரியருக்கும் அவர்களைக் கேவலமாகத் திட்ட உரிமை கிடையாது. அவர்கள் நமக்குப் பின்னால் பிறந்துவிட்டார்கள்! அவ்வளவுதான்! கேவலப் படுத்தும்போது மனிதனின் அந்தரங்க ஆன்மாவைச் சிதைக்கிறீர்கள். "செய்யாதீர்கள்!" என்கிறார்கள், இன்றைய ஆன்மீக மனவியல் அறிஞர்கள்.

சங்ககாலப் பாடல் ஒன்று கூறுகிறது:

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே."

என்று.

"பெரியோர்களை — பணக்காரர்களை — ஆட்சியில் இருப்போரை, நடித்துப் புகழ்பெற்றவர் களை — நாங்கள் ஆகா ஓகோ என்று பாராட்டுவதில்லை; புகழ்வதில்லை; 'கட்அவுட்' வைப்பதில்லை. அதேபோல சிறியவர்களை,

அடிமட்டத்து மனிதர்களை — ஏழைகளை இகழ்வதுமில்லை; கேவலப்படுத்துவதுமில்லை" என்ன உயர் பண்பு!

"பெரியவர் சிறியவர் என்ற இரண்டு பேரையுமே சமநோக்குடன்தான் பார்க்கிறோம்" என்று சொல்லாமல் சொல்கிறது. பாடல்.

நேர்முகப் பேட்டி

சொந்தக் காலில் நிற்பவனுக்கு எல்லோருடைய தயவும் நல்லெண்ணமும் தேவை. இப்படி சமமாக மற்றவர்களை நடத்துவதன் மூலம் பெரியவர்களுடனும் சிறியவர்களுடனும் அவனால் இயல்பாகப் பேச முடிகிறது; பழக முடிகிறது; தனது சுதந்திரத்தை காப்பாற்றிக்கொள்ள முடிகிறது.

சிலர் நேர்முகப் பேட்டிக்குச் செல்லும்போது நடுங்குகிறார்கள். அதிகாரிகள் என்றால் அஞ்சுகிறார்கள். இதைப்போக்க சில மனப் பயிற்சிகளை நீங்கள் வீட்டிலேயே செய்து பார்க்கலாம். இதை மன ஒத்திகை என்று சொல்லலாம்.

யார் யாரைக் கண்டு நீங்கள் வேலை முடிக்க வேண்டுமோ - யார் யாரைக் கண்டு பயப்படுகிறீர்களோ - அவர்களை மனக்கண் முன் கொண்டு வாருங்கள். புன்னகை மலர வணக்கம் தெரிவியுங்கள். அவர் உட்காரச் சொல்வது போலவும், நீங்கள் உட்கார்வது போலவும்; அவருடன் இயல்பாகப் பேசுவது போலவும்; அவர் .முகத்தில் உங்களைக் கண்டதில் மகிழ்ச்சி பரவுவது போலவும்;

ஒரு முழு நாடகத்தை மனதில் நடத்துங்கள். ஒரு நான்கைந்து முறை இப்படி ஒத்திகை செய்தபின் நடைமுறையில் சென்று அவரை சந்தித்துப் பாருங்கள்! சொந்தக் காலில் நின்று, பெருமையுடன் வெற்றியுடன் வெளிவருவீர்கள்! சொந்தக் காலில் நிற்பவர்கள் சுதந்திர மனப்பான்மை கொண்டவர்கள். சாதனை புரிபவர்கள். யாரையும் கண்டு அஞ்சுவதில்லை. எல்லோரையும் சமமாக நடத்தும் பழக்கம் கொண்டவர்கள். அவர்கள் வெற்றிக்கு இது முக்கிய காரணம்.

அடிமை விலங்கை ஒடித்துத்தான் 48 ஆண்டு ஆயிற்றே, இனியுமா அடிமைத்தனம்? "வியத்தலும் இலமே இகழ்தல் அதனிலும் இலமே" என்கிற பாடலை அடிக்கடி முணுமுணுத்துப் பாருங்கள்.

4

உங்களிடம் உண்டா அந்தக் குணங்கள்?

பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் ஒரு காலத்தில் சிறிய நிறுவனமாக இருந்தவைதான். ஒரு தனி மனிதன் தொடங்கியவைதான். அவனும் அவனுக்கு உதவியாக அவன் மனைவியும் உழைத்து உயர்த்தியதுதான்; அப்பாவும் பிள்ளையுமாக கஷ்டப்பட்டு உருவாக்கியதுதான்.

ஆனால், தொழிலைத் தொடங்குவதற்கும் சரி, தொழிலைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கும் சரி, சில அடிப்படைக் குணங்கள் தேவை. அந்தக் குணங்கள் இருக்கும்போதுதான் தொழில் வளர்கிறது; வெற்றி அடைகிறது.

பலரும் பொதுப்படையில் - மேம்போக்காக - சிந்திக்கிறார்கள்.

இதோ மளிகைக்கடை. பொருளை வாங்கி லாபம் வைத்து விற்கவேண்டியது தான்; வேலை முடிந்து விட்டது; வியாபாரம் ஓடும் என்று எண்ணுகிறார்கள்.

"இதோ காப்பி கிளப். நம்ம மனைவி நன்றாக சமைப்பார். நிச்சயமாக சாப்பாட்டுக் கடை வைத்து விடலாம் அல்லது உணவுப் பண்டங்களைத் தயாரித்து விற்றுவிடலாம்" என்று நினைக்கிறார்கள்.

இது மேம்போக்கான சிந்தனை.

தொழில்நுட்பம்

தொழில் என்பதில்— வியாபாரம் என்பதில் எத்தனையோ நெளிவு சுளிவுகள் இருக்கின்றன. அவை எல்லாம்- ஒன்று நமக்கு நன்கு தெரிந்திருக்கவேண்டும்; இல்லாவிடில் அந்தத் தொழிலில் கூட்டாளியாக அல்லது சம்பளம் பெறும் நிர்வாகியாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிலிலும் அதற்கே உரிய தனித்தனி விஷயங்கள் - தொழில் நுட்பங்கள் இருக்கின்றன. அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதனால்தான் படித்த அல்லது வயதுவந்த இளைஞர்களைப் பார்க்கும் போது அவர்களுக்கு தொழில் அனுபவம் உண்டா என்று நான் கேட்பதுண்டு. "இல்லை தொழில் பற்றி நிறையப் படித்திருக்கிறேன்!" என்பார்கள்.

"நல்லது! எனினும் எங்காவது அனுபவம் பெறுங்கள்! ஓரிரு இடத்தில் வேலையில் சேர்ந்து குறைந்தது நான்கைந்து ஆண்டு வேலை பாருங்கள். எந்தத் தொழிலில் ஈடுபட விரும்புகிறீர்களோ அதில் ஒரு இரண்டாண்டு அனுபவம் பெறுங்கள்" என்று சொல்வதுண்டு.

அனுபவத்திற்கு — நமது சொந்த அனுபவத்திற்கு ஈடானது எதுவுமில்லை. "முட்டாள்கள் அனுபவம் என்ற பள்ளியில்தான் கற்றுக் கொள்கிறார்கள்" என்பது பழமொழி. ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கும்போது அங்குள்ள அனுபவசாலிகளிட மிருந்து செய்முறைகளை நாம் கற்றுக்கொள்கிறோம். அதாவது - அவர்களுடைய செலவில் நாம் அனுபவம் பெறுகிறோம். சொந்தத் தொழில் தொடங்கும்போது இது மிகவும் உதவும்.

பயிற்சி முகாம்

சில இளைஞர்கள் தொழில் செய்வது எப்படி என்று இரண்டு நாள் பயிற்சி முகாம் போய்விட்டு "நான் தொழில் தொடங்கப் போகிறேன்" என்று துடிப்புடன் பேசுவதைப் பார்க்கிறேன்.

"எனக்கு 23 வயதாகி விட்டது. இனியும் நான் காத்திருக்க விரும்பவில்லை" என்றார், ஓர் இளைஞர்.

"என்ன உங்கள் அனுபவம்?" என்று கேட்டேன்.

"பட்டப்படிப்புக்குப் பின் ஒரு கம்பெனியில் 9 மாதமாக வேலை செய்து வருகிறேன்" என்றார். அவர் தொடங்க இருக்கும் தொழிலுக்கும் அவர் வேலை பார்க்கும் அனுபவத்திற்கும் தொடர்பு இல்லை. எனினும் இளைஞர் மிகவும் அவசரப்படுபவராக இருந்தார்.

"தலையெல்லாம் நரை. கை எல்லாம் சுருக்கம். முகத்தில் வயதான கோடுகள். நீங்கள் 23 வயதாகிய

பின்னும் காத்திருக்கக் கூடாதுதான்!" என்று கிண்டல் செய்தேன்.

காரணம், இப்படி அவசரப்பட்டு தோற்றவர்களை நான் அறிவேன். தகுந்த அறிவோ, அனுபவமோ, உலக ஞானமோ, தொழில் நுட்பமோ, போதுமான மூலதனமோ இல்லாமல் சொந்தத் தொழில் தொடங்கி தோற்றவர்களை நான் அறிவேன்.

அனுபவம் இல்லாதவர்

ஒரு சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டுக் கொண்டு சில நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வயது 30 இருக்கும்.

ஒருவர் ஆயத்த ஆடைக்கடை வைத்திருந்தார்.

"இந்த ஊரில் சாப்பிட ஒரு நல்ல ஓட்டல் இல்லை" என்றார், ஒருவர்.

"ஆமாம்!" என்று எல்லோரும் ஆமோதித்தார்கள்.

"நல்ல ஓட்டல் திறந்தால் பணம் கொட்டும்" என்றார் ஒருவர். எல்லோரும் "ஆமாம்" என்றார்கள்.

இதன் விளைவாக - உற்சாகமான பேச்சின் முடிவாக, ஆடைக்கடை வியாபாரி, ஓட்டல் தொழிலில் இறங்கினார். ஓட்டல் தொழிலில் அனுபவமில்லாதவர். தனது சாப்பாட்டு ஞானத்தை மட்டுமே நம்பி தனது துணிக்கடை வியாபார அனுபவத்தை மட்டுமே நம்பி ஓட்டல் திறந்தார்.

ஒரு பெரிய இடம். இரண்டொரு சமையல்காரர்கள்; நல்ல நாற்காலி மேசைகள் இருந்தால் போதும் என்று எண்ணி எல்லாம் வாங்கிப் போட்டார்.

"எப்படிப்பட்ட எண்ணெயைப் பயன்படுத்த வேண்டும் என்பதிலிருந்து, எங்கு புதிய பால் கிடைக்கும் என்பதுவரை" எதுவும் அறியாதவராய், மூன்று இலட்சம் இழப்பில் மூன்று மாதத்தில் கடையை மூடினார்.

அவசரப்படுவதில் அர்த்தம் இருக்க வேண்டும்! தொழில் என்பது பணத்தை ஆற்றில் கொட்டுவது அல்ல! தொழில் என்பது ஒரு கணக்கு. வெற்றிபெறும் வாய்ப்பு. எதில் அதிகம் இருக்கிறது என்று கணக்குப் போடும் ஒரு அனுமானம். வெற்றிபெறும் குணங்கள் நம்மிடம் இருக்கின்றனவா. தொழில்நுட்பம், நிர்வாக அறிவு நம்மிடம் இருக்கிறதா என்று யோசித்து மிக கவனமுடன் இறங்கவேண்டிய விஷயம்.

கொஞ்சம் கவனம் தவறினால் நமது சேமிப்பெல்லாம், மனைவியின் நகையை விற்று பெற்ற பணமெல்லாம், வெகு விரைவில் மறைந்து விடும்; கரைந்துவிடும்.

வலுவான அடிப்படை

நாம் அடிப்படையை நன்றாக... வலுவுள்ளதாக அமைக்க வேண்டும். இல்லாவிடில் மேலே கோபுரம் நிற்காது.

உடனடியாகப் பணம் பண்ணுவதில் குறி வைப்பதை விடுத்து, "நிரந்தரமான நல்ல தொழிலை

நான் செய்ய வேண்டும்" என்ற எண்ணம்— நிலைத்து நிற்க வேண்டும் என்ற உறுதி இருக்க வேண்டும்.

நம்மிடம் சில குணங்கள் இல்லாமல் இருக்கலாம். அவற்றை கவனமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவிதங்களிலும் தயார் செய்து கொள்ளாத நிலையில் இறங்குபவர்களுக்கு அதிர்ச்சி காத்திருக்கிறது; ஏமாற்றத்தில் அவர்கள் கதை முடிகிறது.

சிறிய காப்பி கடைக்கும் அதுதான் உண்மை. பெரிய கம்பெனிக்கும் அதே பாடம்தான்.

ஏமாந்தார்கள்

அமெரிக்க நாட்டில் ஒரு பெரிய சோப்பு கம்பெனி இருந்தது. மிகப்பெரிய கம்பெனி. "அவர்கள் எதையும் விற்றுவிடுவார்கள். அவ்வளவு திறமைசாலி கள்" என்று எல்லோரும் பாராட்டுவார்கள். அந்த சோப்பு கம்பெனிக்காரரர்கள் இதை நம்பி ஒரு பெரிய செண்ட் தயாரிக்கும் கம்பெனியை வாங்கினார்கள். செண்ட் — வாசனைப் பொருட்களை — சோப்பு விற்பது போல வீட்டுக்கு வீடு விற்றுவிடலாம் என்று எண்ணினார்கள்.

நல்லியில் விற்கவேண்டிய பட்டுச்சேலைகளை எப்படி சைனாபஜார் பிளாட்பாரத்தில் போட்டு விற்க முடியாதோ, அதே போல, பணக்கார வீட்டுப் பெண்கள் வாங்கும் வாசனைப் பொருட்களை துணிக்குப் போடும் சோப் விற்பது போல விற்க

முடியாது என்று தெரிந்து கொண்ட போது விளம்பரத்தில் பணம் ஏராளமாக செலவாகி இருந்தது.

பழைய விற்பனை முறையை மாற்றியதால் பழைய இடங்களிலிருந்து வரும் வருமானம் நின்றுவிட்டது. சுருக்கமாகச் சொன்னால் 125 மில்லியன் டாலருக்கு வாங்கிய கம்பெனியை ஐந்து மில்லியன் டாலருக்கு மூன்றாண்டு கழித்து விற்று கையைக் கழுவிக் கொண்டார்கள்.

தொழில் பத்திரிகைகளிலே பெருத்த தலைப்புடன் அவர்களது தோல்வியைப் பற்றிய கட்டுரை வந்தது. தலைப்பு? "புத்தி கொள்முதல்!" என்று.

இப்படி அதிக செலவில் ஒரு பெரிய அனுபவமிக்க கம்பெனியே புத்தி கொள்முதல் செய்ததென்றால், மற்றவர்கள் "அனுபவமில்லாத துறைகளில் இறங்குவது ஆபத்து" என்று சொல்லவும் வேண்டுமா?

பிறரின் அனுபவங்களை எல்லாம் காசு செலவில்லாமல் நீங்கள் கொள்முதல் செய்யுங்கள். பிறகு சொந்தத் தொழில் தொடங்குங்கள்.

5

வளர்த்துக்கொள்ள வேண்டிய குணங்கள்!

தொழில் செய்வதற்குத் தேவையான அடிப் படைக் குணங்கள் சில இருக்கின்றன. முதலில் அவற்றைப் பற்றித் தெரிந்துகொண்டோமானால், பிறகு அவற்றை நம்மிடம் வளர்த்துக்கொள்ளலாம்.

கார் மெக்கானிசத்தில் பயிற்சி பெறாமல் எப்படி நாம் கார் பழுது பார்ப்பது முடியாதோ, அது போலத்தான் இதுவும். நல்ல பயிற்சியும், நல்ல அனுபவமும் எங்காவது வேலை செய்து நாம் பெற்றிருப்பதுதான் முதல் அடிப்படைத் தேவை.

மற்றபடி சில கவலைகள். சில விஷயங்களைப் பற்றிய விழிப்புணர்வு, சில மனோபாவங்கள், தொலை நோக்குப் பார்வை போன்ற சில விஷயங்கள் நமக்குத் தேவை.

மக்கள் கணிப்பு

முதலாவதாக எந்தப் பொருளை உற்பத்தி செய்து விற்க விரும்புகிறோமோ அந்தப் பொருளைப் பற்றிய மக்களது கணிப்பு தேவை.

அந்தப் பொருளை வாங்கும் மக்கள் என்ன சொல்கிறார்கள்? விரும்புகிறார்கள்? என்ன மாற்றத்தை விரும்புகிறார்கள்? ஏன்? என்பன போன்ற தகவல்கள் நமக்கு வேண்டும். அதாவது வாடிக்கையாளர்களின் மனப்போக்கு, எப்படி இருக்கிறது என்பது பற்றிய தெளிவு நமக்குத் தேவை; விவரம் தேவை.

பொருளை வாங்குபவர்தான் நமது எஜமான். அவர் வாங்கினால்தான் நாம் அதை உற்பத்தி செய்ய முடியும். ஆகவே, பொருளை வாங்குபவர் என்ன எதிர்பார்க்கிறார் என்பது பற்றிய தகவல்கள் நமக்குத் தேவை.

அவர்கள் தரமான பொருளை விரும்புகிறார்களா, மலிவான விலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களா என்பன போன்ற விவரங்கள் நமக்குத் தேவை.

ஒரு பெரிய கடையில் ஒரு பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டிலை வாங்கச் சென்றிருந்தேன். விற்பனையாளர், பொறுமையாக பல பாட்டில்களைக் காட்டினார். ஒவ்வொன்றின் விலையையும் தரத்தையும் விளக்கிச் சொன்னார். எனக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது - இவ்வளவு விஷயம் தெரிந்த விற்பனையாளரை நாம் எந்தக் கடையிலும் பார்த்ததில்லையே என்று!

"ஐயா நீங்கள் எத்தனை ஆண்டாக இங்கே வேலை பார்க்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் பதில் சொன்னார்: "ஐயா! இங்கு நான் விற்பனையாளன் அல்ல; இந்தப் பொருளைத்

தயாரிக்கும் பொறியாளர் நான். மக்கள் எதை விரும்புகிறார்கள்.. ஏன் விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள இங்கே ஒரு வாரம் எங்கள் நிறுவனம் என்னை அனுப்பியது!"

பொருளை வாங்கும் அடிமட்டத்து மக்களுடன் நமக்குத் தொடர்பு இருக்க வேண்டும். அவர்களது நாடியைப் பிடித்து அடிக்கடி நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள்தான் நம் எஜமானர்கள்.

தன்னம்பிக்கை

இரண்டாவதாக-

தொழிலில் இறங்குபவர்களுக்கு எப்போதும் சுதந்திர மனப்பான்மை உண்டு. இவர்கள் கைகட்டி பணி செய்யும் பரம்பரை அல்ல. பயப்படுபவர்கள் அல்ல. இழப்பு வரக்கூடும் என்று தெரிந்தாலும் துணிந்து இறங்குவார்கள். இழப்பை ஆதாயமாக்கிக் காட்டுகிறேன் என்று சவால்விடும் குணம்-தன்னம்பிக்கை இவர்களிடம் உண்டு.

முயற்சி செய்யத் தயங்கமாட்டார்கள். "பண்ணிப் பார்ப்போமே" என்பார்கள்: செய்து பார்ப்பார்கள். "தவறுகள் செய்தால்தான் எது செய்யக்கூடாது என்ற ஞானம் வரும்" என்று சொல்வார்கள்.

"பணத்தை மனிதன்தான் உண்டு பண்ணுகிறான். என்னால் முடியும்!" என்ற அசாத்தியத் தன்னம்பிக்கை இவர்களிடம் உண்டு.

ஓட்டப்பந்தய வீரர்கள் போல இவர்கள் ஓடிப் பார்க்கத் தயங்கமாட்டார்கள். இந்தக் குணத்தின் காரணமாக, எடுக்கும் வேலைகள் வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமாகும்.

கோழைகள் அல்ல. இவர்கள்; வீரர்கள்! கடலில் குளிக்கும்போது எப்போது தலையைத் தூக்க வேண்டும். எப்போது கடல் அலைக்குள் தலையைத் தாழ்த்த வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

தத்துவம் பேசமாட்டார்கள் !

மூன்றாவதாக-

அவர்கள் அதிகம் தத்துவம் பேசமாட்டார்கள் விளக்க உரை நிகழ்த்த மாட்டார்கள்.

அவர்கள் பேசுவதைவிட செயலில் ஆர்வம் காட்டுவார்கள். ஒருவரைப் போய்ப் பார்க்க வேண்டுமென்றால் உடனே கிளம்புவார்கள். அவர்கள் அணுகுமுறை எப்போதும். "செயல், செயல், செயல்" என்றிருக்கும். சிந்தனைகூட எப்படிச் செயல்படுவது என்பது பற்றியே இருக்கும். "செய். சிக்கலை எப்படியாவது சரிபண்ணு" என்ற முறையில் இருக்கும். பலரை ஆலோசனை கேட்பார்கள். முட்டி மோதி, மூச்சைப் பிடித்துக்கொண்டு வேலையை முடிப்பதில் வல்லவர்கள்.

ஒருமுறை ஆவடியில் காங்கிரசு மாநாடு நடந்த போது அதை ஏற்பாடு செய்து நிர்வகிக்கும் பொறுப்பை தலைவர் காமராசர் ஜெமினிவாசன் அவர்களிடம் கொடுத்திருந்தார். ஜெமினிவாசன்

அதை அற்புதமாகச் செய்து முடித்து, பலத்த பாராட்டைப் பெற்றார். தொழிலில் வெற்றி பெறுபவர்கள் வேலை முடிப்பவர்கள்.

நம் ஊரில் இப்போது பல நிறுவனங்கள் சில ஏக்கர் நிலங்களில் தேக்கு, மா, புளி போன்றவற்றை பயிர் செய்து அதை மக்களுக்கு விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு இளைஞர் இவர்களது தேவையை நிறைவேற்ற செய்யும் மா, புளி, தேக்கு போன்ற பல கன்றுகளைத் தயார் செய்யும் நாற்றுப் பண்ணை ஒன்றைத் தொடங்கினார். இது எப்படிப் பட்ட யோசனை என்பதையும் எப்படி உடனடியாக செயல்பட்டார் என்பதையும் கவனியுங்கள்.

குறைந்த ஆட்கள்

நான்காவதாக-

இவர்கள் குறைந்த ஆட்களை வைத்துக்கொண்டு போதுமான இடத்தை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு தொழிலைத் தொடங்குகின்றனர்: வளர்க்கின்றனர். அவர்கள் கண்ணோட்டமும் செயலும் 'சிக்கனம்' என்பதுதான். அநாவசியமாக அவர்கள் செலவு செய்யமாட்டார்கள். 'பந்தா' பண்ணமாட்டார்கள். வேலையில் குறியா யிருப்பார்கள்.

தொழில்தான் அவர்களது குறி. எனவே சொந்த சுகபோகங்களைத் தியாகம் செய்யத் தயங்க மாட்டார்கள். திருநெல்வேலிப் பக்கத்திலிருந்து

வருகின்ற மக்களிடம் இத்தகைய குணங்களை அதிகம் காணலாம்.

மதிப்பார்கள்

ஐந்தாவதாக-

தங்களிடம் வேலை பார்ப்பவர்களை அவர்கள் மனிதர்களாக மதிப்பார்கள். வேலை பார்ப்பவர்களிடம், கச்சாப் பொருளை வாங்கும் போதும், அதைப் பொதுமக்களிடம் விற்கும்போதும், அதில் ஈடுபட்டுள்ளவர்களிடம் அதிகம் மரியாதை காட்டுவார்கள். அவர்கள் கூறும் யோசனைகளைக் காது கொடுத்துக் கேட்பார்கள். குறிப்பாக தங்களிடம் வேலை செய்பவர்களை மிக முக்கிய மனிதர்களாக நடத்துவார்கள்.

மனவியலில் சொல்லுவார்கள்- "நீ ஒருவனை முதல்தர மனிதனாக நடத்தும்போது உனக்கு அவனிடமிருந்து முதல்தர பணி கிடைக்கிறது" என்று. நம்மிடம் சிலர் வேலை செய்கிறார்கள் என்பதனால், அவர்கள் நமக்குங்கீழ் என்றோ 'அவர்கள் தாழ்ந்தவர்கள்' என்றோ ஆகிவிடுவதில்லை! மனிதர்களிடமும் சரி மற்ற உயிர்களிடமும் சரி, அவர்களுள் இருக்கும் ஆத்மாவைப் பார்க்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

வெற்றி பெற்றவர்கள் சொல்லித் தரும் பாடங்கள் இவை: நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்; கடைப் பிடிக்க வேண்டும்; வெற்றி பெற.

6

கண்ணுக்குத் தெரியாத உண்மைகள்!

"இவர்தான் மிகப் பெரிய வெற்றிபெற்று, வளரும் இந்தப் புதிய நிறுவனத்தை நடத்துபவர்" என்று சொல்லி அவரை எனக்கு அறிமுகப் படுத்தினார்கள். அவரைப் பார்த்தேன். அகன்ற நெற்றி; கருணை வடியும் முகம். எங்கோ பார்க்கின்ற கண்கள். ஒரு வித்தியாசமான உருவம்.

பேசத் தொடங்கினார். என்னால் நம்ப முடியவில்லை. காரணம் அவர், மனதைப் பற்றிப் பேசினார்; வாழ்க்கை நெறிகளைப் பற்றிப் பேசினார்; ஆன்மீகத்தைப் பற்றிப் பேசினார். எனக்கு வியப்பு மேலிட்டது. "எப்படித் தொழில் தொடங்கி முன்னேறினேன்?" என்று பேசியிருந்தாரானால் எனக்கு அதிர்ச்சி இருந்திருக்காது.

"வாழ்க்கையின் நோக்கம் என்ன?" என்று தொடங்கினார் இந்த முதலாளி. "எல்லோரும் சமம்" என்றார். "தோட்டியும் தொண்டைமானும் ஒன்று" என்றார். "கஷ்டப்பட்டு வேறுவழியே இல்லை என்று நான் நம்பிக்கை இழந்த போது கடவுள் மனித உருவில் வந்து உதவினார்" என்றார்.

அப்போதுதான் புரிந்து கொண்டேன்.

"இவர் சாதாரண வியாபாரியல்ல; சாதாரண தொழிலதிபர் அல்ல" என்ற எண்ணம் என்னுள் வேரூன்றியது.

வெற்றி தோல்வி

பல தொழில்களைப் பார்த்திருக்கிறேன். பல பணக்காரர்களைப் பார்த்திருக்கிறேன். எல்லோர் வாழ்விலும் ஏறுமுகம் இருக்கும். இறங்குமுகம் இருக்கும்; வெற்றி இருக்கும், கொஞ்ச நாள் கழித்து தோல்வி இருக்கும். பலபேர் இப்படிப் பாதிக்கப்பட்டு கடையையே, தொழிலையே மூடிவிட்டுப் போய்விடுகிறார்கள்.

இவரோ மேலே மேலே தொடர்ந்து தொழிலில் வெற்றி பெற்றுக்கொண்டு இருந்தார். பல நிறுவனங்கள் நிரந்தரமாக, தலைமுறை தலைமுறையாக வெற்றி பெற்றுக் கொண்டிருக்கின்றன.

"என்ன சூட்சுமம்?" என்று என் மனம் ஆராயத் தொடங்கியது.

"சொந்தக்காலில் நின்று தொழிலில் வெற்றிபெற வேண்டுமானால், இந்த பிரபஞ்சத்தைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும்" என்று அவர் சொன்னார்.

"பணம் காசு, நகை நட்டு, கார் வீடு, நிலம், நீச்சு என்று இவ்வுலகில் நாம் கண்ணுக்குப் புலப்படக்கூடிய விஷயங்களில்தான் ஆசை வைக்கிறோம். இவை எல்லாம் கண்ணுக்குப் புலனாகாத ஒரு உலகத்தி லிருந்து, உங்கள் மனதில் எழும் எண்ணங்களிலிருந்து,

நீங்கள் விரும்புகிற ஆசைகளிலிருந்து எழுகின்றன. நம் கண்ணுக்குத் தெரியாத அந்த உலகின் இயல்புகளைப் புரிந்து கொண்டால், கண்ணுக்குத் தெரிகிற இந்த உலகில் எல்லாவற்றையும் சாதிக்கலாம்!" என்றார்.

"அடே அப்பா! அப்படியா? அவ்வளவு சுலபமா?" என்றேன்.

"நமக்குத் தெரிந்ததைத்தான் பார்க்கிறோம். நம் பார்வைக்குத் தெரியாததைப் பற்றி பேசுவதில்லை; சிந்திப்பதில்லை. பணம் ஒரு பொருள். காசு நோட்டு, தங்கம் வெள்ளி என்று எல்லாமே பொருள்தான். நிலம் ஒரு பொருள். இதை கண்ணுக்குத் தெரியாத உலகத்திலிருந்து உருவாக்கலாம்."

"அந்த வித்தை உங்களுக்குத் தெரியுமா? எனக்கு சொல்லிக் கொடுக்க முடியுமா?" என்று கேட்கத் துடித்தேன்.

தரமான பொருள்

அவர் பேசினார்!

"பணம் வேண்டுமென்றால் பணத்தைப் பற்றி எண்ணாதீர்கள். பணத்தை உண்டு பண்ணும் அந்த சக்தியை — 'அந்த விஷய'த்தை — எண்ணிப் பாருங்கள். தரமான பொருளை உற்பத்தி செய்வேன் என்று பாடுபடுங்கள். பயனுள்ள — எல்லோருக்கும் பயன்படக்கூடிய பொருளை உற்பத்தி செய்வேன் என்று பாடுபடுங்கள். வாங்குவோர் மனதில் ஏற்படும் திருப்திதான் எனக்கு முக்கியம் என்று எண்ணுங்கள். வாங்குகின்ற மக்களின் மனதில் ஏற்படும் திருப்தி

இருக்கிறதே. அது என்ன பொருளா? பொருள் இல்லை. ஆனால், அதுதான் உங்களுக்கு மேலும் மேலும் பொருளை வாங்கத் தூண்டி பணத்தைக் கொண்டு வருகிறது. கண்ணுக்குத் தெரியாத விஷயம்தான் கண்ணுக்குத் தெரிகிற காசு பணத்தை வாரிக் கொண்டு வருகிறது.

“ஒரு உதாரணம் சொல்லுகிறேன். காரை உற்பத்தி செய்த என்ரிபோர்டு கோடீசுவரர் ஆனார். அவர் மனதில் நான் பணக்காரனாகப் போகிறேன். அதற்காகக் காரை உற்பத்தி செய்கிறேன்” என்று நினைக்கவில்லை. “விரைவாக செல்லக்கூடிய கார். ஒவ்வொருவரிடமும் இருந்தால் எல்லோருக்கும் எவ்வளவு வசதியாயிருக்கும்” என்று எண்ணினார். காரை உற்பத்தி செய்தார். பணம் தானே வந்தது. பிறருக்கு-மற்றவருக்கு ஏற்படும் நன்மை-அதில் குறிவையுங்கள். பணம் நாய்க்குட்டி போல தானே உங்கள் பின்னால் வரும்”.

அதே போல கார்னகி என்பர் இரும்பை உருக்கும் பெரிய தொழிற்சாலை ஒன்றை விலைக்கு வாங்கினார். “இரும்பை எப்படி விற்பேன்?” என்று அவர் கவலைப்படவில்லை. அப்போதெல்லாம் ஆற்றைக் கடக்க மரப்பாலங்கள் தான் இருந்தன. அவை அடிக்கடி வீணாக மக்கிப் போயின. “அடாடா! இரும்பிலே பாலம் கட்டினால் நெடுநாளைக்கு வருமே” என்று எண்ணினார். சொன்னார். பிறர் நன்மையைக் கருதினார். இரும்பு டன் டன்னாக விற்பனை ஆயிற்று.

கலைஞன்

"ஒரு கலைஞன் ஒரு படம் தீட்டுகிறான்- தன் கற்பனையை- தன் உழைப்பை- தன் நேரத்தை- தன் ஆத்மாவையே அதில் கொட்டுகிறான். அது என்ன விலைக்குப் போகும் என்பது அவனுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவன் கவலைப் படவும் இல்லை.

சிறந்த ஓவியத்தை- ஒரு அமர ஓவியத்தை வரைந்து பார்க்க, பிறருக்குக் காட்ட ஆசைப் படுகிறான். அவன் ஆத்மா- அவனது உயிர்- அதிலே ஒளிவிடுகிறது. அது இலட்சோப இலட்சம் ரூபாயைக் கொண்டுவருகிறது.

ஒரு நடிகரைப் பாருங்கள். காசுக்குத்தான் நடிக்கிறார். ஆனால், நடிக்கத் தொடங்கியதும் காசை மறந்துவிடுகிறார். தன் உயிரைக் கொடுத்து நடிக்கிறார். கதாபாத்திரமாகவே மாறிக் காட்டுகிறார். 'வேதம் புதிது' படம் பார்த்தேன். அதில் சத்தியராஜும் சரி, சாருகாசனும் சரி, பாரதிராசாவும் சரி, கொஞ்சம் யோசித்து பாருங்கள்-வெறும் காசுக்கா வேலை செய்தார்கள்?

நீங்கள் விரும்பியதை- மனமாரக் காதலிப்பதை செய்யுங்கள். காசு தானே வரும்.

மறந்து விடுங்கள் !

காசை மறந்துவிடுங்கள்!

காசைக் கொண்டுவருகிற மூலத்தில் கருத்தை வையுங்கள். எத்தனையோ காப்பிக் கடைகள் இருக்கின்றன. "சரவணபவன்" மாத்திரம் ஏன் இப்படி

அள்ளிக் குவிக்கிறது? மேலும் மேலும் கிளைகளைத் திறக்கிறார்கள்? நீங்கள் அங்கே போய் சாப்பிட்டுப் பார்த்தால், தெரியும்! சாப்பிட வருகிறவர்களை முழுமையாகத் திருப்திப்படுத்துகிறார்கள். சுவை, சுத்தம், சுகாதாரம், பரிவு எல்லாமே இருக்கின்றன.

செய்யும் பொருளின் மீது காதல்- ஈடுபாடு. அது பணமல்ல! ஆனால், அது தான் பணத்தைக் கொண்டு வருகிறது!

அதனால்தான் "செய்யும் தொழிலே தெய்வம்" என்று பாரதியார் பாடுகிறார்- "செய்யும் தொழில் உன் தொழிலே காண்."

"செய்கிறேனே இந்தப் பொருளை, இதை மனிதர் களுக்காகத்தான் நான் செய்கிறேன். ஆனால், உண்மையில் இதை உனக்கு (ஆண்டவனுக்கு) அர்ப்பணிப்பதற்காகவே செய்கிறேன்" என்கிறார்கள்! அதுதான் உண்மை!

அப்போது மனிதன், தன் எல்லைகளை எல்லாம் மீறுகிறான். அவன் செய்வதெல்லாம் அற்புதமாகி விடுகிறது. ஏனெனில், அது அப்போது இறைவனின் படைப்பாக மாறிவிடுகிறது.

உதாரணமாக எம்.எஸ். பாடுகிறார் என்றால், அல்லது பத்மா ஆடுகிறார் என்றால், அவர்கள் காசுக்காகவா பாடுகிறார்கள்? ஆடுகிறார்கள்? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

அவர்கள் தன்னை மறந்து பாடுகிறார்கள்; ஆடுகிறார்கள். தன்னை முழுவதும் கொட்டி- தன்னை அதில் ஐக்கியமாக்கிக்கொண்டு- அதை செய்கிறார்கள்.

அந்த உயர்வை, அந்த அழகை அந்த அற்புதத்தை நாம் செய்யும் சிறு ஊசியால் கொண்டுவரலாம்! ஏழு மாடிக் கட்டிடத்தில் கொண்டு வரலாம்!

வாழ்வு என்பது ஒரு பயணம்.

அது உன்னதத்தை நோக்கிய ஒரு பயணமாக இருக்க வேண்டும். தொழில் வெற்றியின் இரகசியம் இதுதான்!

7

தயார் ஆகுங்கள்!

தொழில் செய்ய இறங்கும் முன்பாக உங்களை நீங்கள் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஓட்டப்பந்தயக்காரன் பல நாள் ஓடி ஓடி- தன் காலின் வலிமையை அதிகரித்துக் கொள்கிறான்; களைத்துப் போவதை சமாளிக்கும் திறமை பெறுகிறான்; தினமும் ஓடுவதன் மூலம் தன்னால் முடியும் என்ற நம்பிக்கை பெறுகிறான்; மனத்தாலும் உடலாலும் தன்னைத் தயார் செய்து கொள்கிறான்.

மத்தளம் தட்டத் தெரிந்த ஒருவன் மறுநாளே கச்சேரியில் பக்கவாத்தியம் வாசிக்க முடியாது. அவன் பலகாலப் பயிற்சியின் மூலம் தன்னை கச்சேரி வாசிக்கத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

ஒரு நடனப் பெண்மணியாகட்டும், ஒரு ஓவியனாகட்டும். ஒரு எழுத்தாளனாகட்டும், அவர்கள் அனைவரும் முதலில் தங்களைப் படிப்பாலும், பயிற்சியாலும், அனுபவத்தாலும் தயார் செய்து கொள்கிறார்கள். அதன்பின் அந்தத் தொழிலில் இறங்குகிறார்கள்.

நிலையான வெற்றி

வாழ்க்கையை அற்புதமான வாழ்க்கையாக வாழ்வதற்கும் சரி, தொழிலில் இறங்குவதாக இருந்தாலும் சரி சில குணங்களை, சில மனோபாவங்களை, சில பழக்க வழக்கங்களை, சில அடிப்படைப் பண்புகளை ஒருவர் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஒரு மனிதன் நிலையான வெற்றிபெற முடியும்.; நிலைத்த வெற்றிபெற முடியும்.

அப்படிப்பட்ட அடிப்படை அஸ்திவாரம் இல்லாவிட்டால், தொழில் விரைவில் ஆட்டம் காணத் தொடங்கிவிடும். நீங்கள் நிலைகுலைந்து போவீர்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், தான் நிலைகுலைந்து போனதற்கு- தொழிலில் மீளமுடியாத அடி பெற்றதற்கான காரணத்தை அவன் அறிவதில்லை. சில அடிப்படைகளை கோட்டை விட்டுவிட்டோம். என்பதை அவன் உணர்வதில்லை. இவ்வுலகையும், இப்பிரபஞ்சத்தையும் சில அடிப்படை உண்மைகள்தான் இயக்குகின்றன என்பதை உணர்ந்துகொள்வதில்லை. எனவே, இப்படிப்பட்ட மனிதன் அஸ்திவாரம் இல்லாமலே வீடு கட்டியவன். எனவே, அதன் பலனை அனுபவிக்கிறான்.

"பொருளை வாங்கி விற்பதுதான் வியாபாரம்; அதில் லாபம் வைத்து விற்றால் பணம் வரும்" என்பது மட்டுமல்ல வியாபாரம். "நல்ல பொருளை உற்பத்தி செய்தேன். இது எல்லோருக்கும் தேவையான பொருள். எனவே, என் நிறுவனம் பணத்தைக் குவிக்கப்

போகிறது" என்ற சாதாரண விஷயத்தில் அடங்கி விடுவது அல்ல, தொழில்.

வாழ்வின் அடிப்படை உண்மைகளை- தொழிலின் அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொண்டு தன்னைத் தயார் செய்துகொள்ளாதவன் விரைவில் துன்பத்திற்கு, சங்கடங்களுக்கு, தோல்வி களுக்கு, நட்டத்திற்கு ஆளாகிறான்.

தொழில் சிறக்கும்

தயார் நிலை என்பது; படிப்பு, பயிற்சி, அனுபவம். அவற்றை அன்றாட வாழ்வில் கடைப் பிடிக்கும் குணங்களாக மாற்றும்போது தொழில் சிறக்கிறது.

மருத்துவர் தயாராய் இல்லாவிட்டால் 'அறுவை' செய்ய முடியாது. மருத்துவருக்கு வேண்டிய எல்லாக் கருவிகளையும் நர்சு எடுத்து வைக்கிறார். அதே போல மருந்துகளால் சுத்தம் செய்யப்பட்ட அங்கிகளையும் கை உறைகளையும் போட்டுக் கொண்டு மருத்துவர் அறுவைக்குத் தன்னைத் தயார் செய்துகொள்கிறார். அவர் இத்தனை நாள் படித்த படிப்பும், அனுபவமும், அவருக்கு உதவுகின்றன.

பெனிசிலினைக் கண்டு பிடித்த அலெக்சாண்டர் பிளெமிங் என்ற விஞ்ஞானி கிருமிகளை வளர்க்கும் ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். கிருமிகளைப் பற்றியும் அவற்றை வளர்ப்பது பற்றியுமான முழுமையான அறிவு அவரிடம் இருந்தது. அப்படி வளர்த்த கிருமிகளை இரண்டு நாள் கழித்து வந்து

பார்த்தபோது அவை செத்துப் போயிருந்தன. கிருமிகள் வளர்ந்த அந்த கிண்ணத்தில் காளான் முளைத்திருந்தது.

இதே நிகழ்ச்சி ஒரு சாதாரண மனிதனுக்கு ஏற்பட்டிருந்தால் அவன் அதை "பூஞ்சைக் காளான் வந்துவிட்டது. வீணாகிவிட்டது" என்று குப்பையில் கொட்டியிருப்பான். விஞ்ஞானப் பயிற்சியில்லாத மனிதன் அதைத்தான் செய்திருப்பான். ஆனால், பிளெமிங் என்ன செய்தார்?

அவர் விஞ்ஞானியாகத் தன்னை தயார் செய்து கொண்டவர். எனவே, "காளானிலிருந்து புறப்பட்ட திரவம் இந்தக் கிருமிகளைக் கொன்றிருக்கிறது" என்ற முடிவுக்கு வந்தார். கிருமிகளைக் கொல்லும் இந்தக் காளான் திரவத்தைப் பற்றி ஆராயத் தொடங்கினார். 'பெனிசிலின்' பிறந்தது.

"சீடன் தயாராக இருக்கும்போது குரு தோன்றுவார்" என்று ஞானிகள் கூறுவார்கள். அதாவது, ஆன்மீகம் பற்றிய தேடல்—கடவுளைப் பற்றி அறியும் அவா—உயிர்த் துடிப்பாக நம்முள் எழும்போது கடவுள் வழிகாட்டுவார்; குரு தோன்றுவார்" என்பதுதான் இதன் பொருள்; இதுதான் உண்மை.

நம்மை நாம் முழுமையாக ஒரு தொழிலுக்குத் தயார் செய்து கொண்டு விட்டோமானால் தானே வழிபிறக்கும்; நல்ல பாதை தென்படும். எல்லாக் கதவுகளும் திறக்கும்.

எது சரியான தொழில் ?

எந்தத் தொழில் செய்வது என்று பல தொழில்களையும் ஆராய்ந்து அதன் தராதரம், முதலீடு, மக்கள் தேவை என்று அதிலே தேடிக்கொண்டிருக்கும் போது "எந்தத் தொழில் நமக்கு சரியான தொழில்?" என்பது, தானே தெரியவரும்.

அதேபோல எந்த ஊரில் தொடங்கலாம் என்பதில் இருந்து எல்லாப் பிரச்சினைகளையும் நன்கு அறிந்து ஆராய்ந்தோமானால், முடிவில் நமக்குச் சரியான வழி தென்படுகிறது.

ஆகவே "தயார் நிலை"தான் விஞ்ஞானிக்கும் வழிகாட்டுகிறது; ஞானத்தைத் தேடும் சீடனுக்கும் குருவை அவனிடம் கொண்டு வருகிறது. தொழிலைப் பற்றிய எல்லாத் தகவல்களும் எல்லாக் கோணங்களி லிருந்தும், சொந்த அனுபவத்துடனும் அனுபவசாலி களின் உதவியுடனும் ஆராயப்பட வேண்டும். அப்படி ஆராய்ந்து முட்டி மோதிக் கொண்டிருக்கும்போது திடீரென்று நமக்குத் தெளிவு ஏற்படும்.

உள்ளுணர்வு

இப்படி ஏற்படும் தெளிவைத்தான் 'உள்ளுணர்வு' என்கிறோம். 'எனக்கு இப்படிப்படுகிறது' என்று சொல்வார்கள். 'ஏதோ ஒன்று சொல்கிறது இப்படி செய்யக்கூடாது' என்பார்கள். நமக்குள்ளே நமக்கு வழிகாட்டும் ஒரு பேரறிவு இருக்கிறது. அந்தப் பேரறிவு நாம் தயார் நிலையில் இருக்கும்போது உதவுகிறது.

அமெரிக்க நாடுகளில் இன்று அதிகம் பேசப்படுவதும் பயன்படுவதும் "உள்ளுணர்வு காட்டும் வழி" என்னும் முறைதான்.

'உள்மனம்' அல்லது நமக்குள்ளே இருக்கும் ஒரு மனிதன்- ஒரு பேரறிவு- எதைச் சொல்கிறதோ அதைக் கேட்டு செயல்பட்டவர்கள்தான் வெற்றிபெறுகிறார் கள்.

அதனால்தான் இன்றைய மனவியல் அறிஞர்களும் எழுத்தாளர்களும் தொழில் தொடங்க ஆசைப்படும் நமக்குச் சொல்கிறார்கள்; "எதில் உன் மனம் ஈடுபடுகிறதோ- எதை உன் மனம் ஆசைப்படுகிறதோ அந்தத் தொழிலில் இறங்கு" என்று திரும்பத் திரும்ப எழுதுகிறார்கள்.

ஆர்வம்

எனக்குத் தெரிந்த ஒருவர் பொறியியல் நிபுணராக நெய்வேலியில் பணியாற்றினார். பெரிய வேலை. நல்ல சம்பளம். கண் பார்வையில் ஏதோ கோளாறு. மருத்துவரிடம் போனார். கண் கோளாறு சரியானது. கண் குணமாகியது. எனினும் அதிலிருந்து கண்கள் பற்றிய ஆர்வம் அவர் மனத்தில் தணியாத தாகமாக எழுந்தது. இதன் விளைவாகக் கண்களின் தன்மை அறிந்தார். "இயற்கை வைத்தியத்தின் மூலம் இருபது வயதுக்கு கீழ் உள்ள அனைவருக்கும் மூக்குக் கண்ணாடி போடாமலே கண்களை சில பயிற்சிகளின் மூலம் குணப்படுத்தலாம்" என்ற முடிவுக்கு வந்தார். இன்று பொறியியல் வேலையை விட்டு விட்டு சொந்தமாக கண் வைத்தியமனை நடத்துகிறார்!

தன் ஆழ்மனம் எதை அவாவுகிறதோ அதில் இறங்கினார்: வெற்றி பெற்றார். கண் வைத்தியம் பற்றி முழுமையாகத் தன்னைத் தயார் செய்துகொண்ட போது ஆங்கில மருத்துவர்கள் கூட இவரிடம் வந்தார்கள்.

நமது உள்ளுணர்வு—நமது ஆழ்மன ஆசைதான் நமக்கு வழிகாட்டுகிறது; ஒரு துறையில் நம்மை இறக்குகிறது. நாம் எவ்வளவு முழுமையாகத் தயார் நிலையில் இருக்கிறோம் என்பதில்தான் வெற்றி இருக்கிறது. தயார் நிலைதான் வெற்றிக்கு வழிகாட்டுகிறது.

8

எப்படியும் பணம் சம்பாதிக்கலாம்!

ஒரு ஊரில் குடியேறுவதற்காக ஒரு மனிதர் வந்தார். தெருமுனையில் இருக்கும் கடைக்காரரிடம் விசாரிக்கலாம் என நினைத்து, "அய்யா! இந்த ஊர் எப்படி? இந்த ஊர் மக்கள் எப்படி? நல்லவர்களா? இந்த ஊரில் வசிக்கலாம் என்று வந்திருக்கிறேன்!" என்றார்.

"அப்படியா!" என்று சொல்லிவிட்டு "அய்யா! நீங்கள் முன்பிருந்த ஊர் எப்படி?" என்று கேட்டார்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்! எல்லோருமே சண்டைக்காரர்கள். சதா சண்டைதான். நிறையப் பொய்யர்கள். அசந்தால் நம்மை சாப்பிட்டு விடுவார்கள். அதனால்தான் ஊர் பிடிக்காமல் இங்கு வந்தேன்!" என்று கூறினார்.

கடைக்காரர் சொன்னார்: "அய்யா! இந்த ஊர் சுத்தமோசம். குண்டர்கள் இந்த ஊரில் நிறைய இருக்கிறார்கள். வன்முறை அதிகம். திருட்டுப் பயம் ரொம்ப இருக்கிறது. நானே ஊரைவிட்டுப் போகலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்." கேட்டவர் மூட்டையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்.

சிறிது நேரத்தில் அந்தக் கடைக்கு மற்றொருவர் வந்தார். அதேபோல "இந்த ஊர் எப்படி?" என்றார். கடைக்காரரர் பதிலுக்கு "நீங்கள் முன்பு இருந்த ஊர் எப்படி?" என்று கேட்டார்.

வந்தவர் சொன்னார்: "அய்யா! நான் இருந்த ஊர் அற்புதமான ஊர். நல்ல மக்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்வார்கள். ஊர் சுத்தமாக இருக்கும். நல்ல பள்ளிக்கூடம்.." என்று சொல்லிக் கொண்டே போனார்.

கடைக்காரர் இடைமறித்து "அய்யா! இந்த ஊரும் அப்படித்தான். மக்கள் ரொம்ப நல்லவர்கள். அன்பாகப் பழகுவார்கள். உதவுவார்கள். இங்கும் நல்ல பள்ளிக்கூடம் இருக்கிறது. நீங்கள் இங்கே குடி வாருங்கள். என்ன உதவி வேண்டுமோ நான் அதைச் செய்கிறேன்!" என்றார்.

பெரிய உண்மை!

நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்களோ அப்படித்தான் உண்மை அமையும். "இவன் திருடனா யிருப்பானோ?" என்று சந்தேகத்துடன் பார்த்தீர்களானால், உங்கள் எண்ணம் உங்கள் முகத்தில் தெரிய, "இவனிடம் திருடினால் என்ன?" என்று மற்றவனை எண்ண வைக்கும். இதுதான் மனவியலின் மிகப்பெரிய உண்மை.

"சனியன்! மழை பெய்கிறதே. சாலையில் காலெடுத்து வைக்க முடியவில்லை" என்று கரித்துக் கொட்டலாம். மாறாக, "ஆகா! மழை வந்தது! இந்த

மழை விவசாயத்திற்கு நல்லது; பயிர் பச்சைக்கு நல்லது. குடிதண்ணீருக்குப் பஞ்சம் இருக்காது'' என்றும் எண்ணலாம்.

இதுபற்றி ஞானிகளும், மனவியல் அறிஞர்களும் என்ன சொல்கிறார்கள்?

''நல்லதை நினை! நல்லது நடக்கும்!'' என்கிறார்கள்.

பலர் கெட்டதைப் பெரிது படுத்துகிறார்கள். உலகில் நல்லதும் உண்டு; கெட்டதும் உண்டு. கெட்டது நேரும் போது நாம் அழுது புலம்பக் கூடாது. "இது என்னை ஒன்றும் செய்யாது" என்று சொல்லலாம். அல்லது ''இத்துடன் போயிற்றே! இதைவிட மோசமாய்க் கூடப் போயிருக்கலாம்! நான் ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்றும் பெருமைப்படலாம்.

"இரவு பகல் என்பது போல, இறப்பு பிறப்பு என்பது போல, நன்மை தீமை என்பது போல இலாபநட்டம் என்பது இல்லாமல் போகுமா? சரிவு, தோல்வி, துன்பம் இதெல்லாம் இயல்பு தான்" என்று சமாதானம் சொல்லிக்கொண்டு, துன்பத்தைச் சுலபமாக எடுத்துக்கொள்ளலாம். சுலபமாக எடுத்துக் கொள்வது தான் வாழ்க்கை.

வாழ்க்கையாகட்டும், தொழிலாகட்டும், வியாபாரம் ஆகட்டும் லாபநட்டம், இன்ப துன்பம், சுகம் துக்கம் என்ற இரண்டும் வரும். நாம் எவ்வளவு சுலபமாக எடுத்துக் கொண்டு அதை சமாளிக்க முன்வருகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு

துன்பத்தின் பளு- சுமை- குறையும். இதுதான் இலாப நட்டங்களைச் சமாளிக்கும் வழி.

“நட்டம் ஏற்படும், துன்பம் ஏற்படும்” என்று முன்பே தெரியும்போது நமக்கு அதனால் அதிர்ச்சி ஏற்படுவதில்லை. அதை சமாளிக்க முன்கூட்டியே மனம் தயாராய்விடுகிறது.

கடற்கரையில் இரண்டு நண்பர்கள் நிற்கிறார்கள்.

ஒருவன் “கடல் பேராபத்து. தண்ணீரில் மாட்டிக் கொண்டால் திரும்பி வரவே முடியாது” என்கிறான்.

மற்றொருவன் கடற்கரையில் படுத்துக்கொண்டு “அலைவீசும் கடலே! நுரை பொங்கும் கடலே! என் காலைக் கழுவி முத்தமிடும் கடலே!'' என்று பாடுகிறான்.

இருவருக்கும் கடல் ஒன்றுதான். ஆனால், இருவரும் பார்க்கும் விதம் வித்தியாசப்படுகிறது.

சந்தேகப் பிராணி

ஒரு மனிதன் தன் மனைவியை வீட்டில் விட்டுவிட்டுப் போகக்கூட பயப்படுகிறான். சந்தேகப் பிராணி. மற்றொருவன் தன் மனைவியை ஆண்கள் நிறைய வேலை செய்யும் இடத்தில் வேலை செய்வதற்கு அனுமதிக்கிறான்.

இருவரும் பார்க்கும் விதத்தில் வித்தியாசப் படுகிறார்கள். ஒருவன் சந்தேகப் பிராணி. மற்றவன் நம்பிக்கை கொண்டவன்.

இரண்டு இடங்களிலும் பெண்மணிகள்தான். ஒருவன் தன்னுடைய சந்தேகம் என்ற ஆடைகளை அந்தப் பெண்ணுக்கு அணிவிக்கிறான். மற்றொருவன் தனது நம்பிக்கை என்ற ஆடைகளை அணிவிக்கிறான். நாம் நம் நினைப்புக்கள் என்ற துணிகளை அணிவிக்கிறோம்.

இதன் விளைவாக நினைப்புக்கேற்றவாறு காரியங்கள் நிகழ்கின்றன.

உள்ளே எப்படியோ அப்படித்தான் வெளி சூழ்நிலை அமையும். ஆகவே, முதலில் உங்கள் மன எண்ணங்களை சரி செய்யுங்கள். இதைத்தான் மனவியல் அறிஞர்கள் திரும்பத் திரும்ப சொல்கிறார்கள்.

உலகில் பொருள்-பணம் வேண்டுமானால்-அதற்கேற்ப நம் எண்ணங்களை மனத்தில் விதைக்க வேண்டும்.

பேராசை !

தொழில் செய்து பணம் வர ஆரம்பித்த உடன், பலர் நிலைதடுமாறிப் போகிறார்கள். பேராசை பலரைப் பிடித்துக் கொள்கிறது. பொருளுக்கு அதிக விலை வைத்து விற்கிறார்கள். "நியாயமில்லாத காரியங்களைச் செய்தாலும் பணம் தான் முக்கியம்" என்று தவறான வழிகளில் பணம் சம்பாதிக்க எண்ணுகிறார்கள். பலர் திடீர்க் குபேரனாகிவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

நாம் பேராசைப்பட்டு சம்பாதிக்க முயன்றோ மானால், அப்படி பேராசைப் படுவோர்களை எல்லாம் நம் மனம் ஈர்க்கும். நம்மைச் சுற்றி நம்மைப் போலவே பேராசைப்படுபவர்கள் நிறைய வந்து சேர்ந்து நம்மிடம் தங்கள் கைவரிசையைக் காட்டுவார்கள். பேராசை பேராசை கொண்டவர் களை ஈர்க்கும்.

"போட்டியாக தொழில் தொடங்கிவிட்டான். அவன் தொலைந்தானானால் என் தொழில் கொடிகட்டிப் பறக்கும்!" என்று எண்ணினீர்களானால் நம்மைத் தொலைக்க நான்கு பேர் வர நாளாகாது. எதை அனுப்புகிறோமோ அதுதான் வந்து சேரும். இது மனவியல் உண்மை.

எனவே, நல்லதை எண்ணுங்கள். நல்லது நடக்கும் என்று நம்புங்கள். மாறாக கெட்டது நடக்குமானால் அதற்கும் உங்களை மன அளவில் தயார் செய்து கொள்ளுங்கள்.

எனவே, மனத்திலிருந்து சாதனைபுரியும் எண்ணங்களை, நியாயமான எண்ணங்களை, எல்லோரும் வாழ வேண்டும் என்ற எண்ணங்களை அனுப்புங்கள்.

திடீர்ப் பணக்காரனாகி விடுவது என்ப தெல்லாம் இயற்கைக்கு எதிரான விதி. யாராவது லாட்டரிச்சீட்டில் கோடி ரூபாய் பரிசு விழுந்து பெரிய கோடீசுவரராக நிரந்தரமாக இருந்தவர்களைப் பார்த்திருக்கிறீர்களா? கிடையாது. லாட்டரிச்சீட்டு பரிசு விழும்; அதைத்தான் கேள்விப்படுவோம். அவர்கள் நிரந்தரமாக பணக்காரர்களாக வாழ்ந்ததில்லை.

உழைத்து சம்பாதி; நியாயமாக சம்பாதி. பேராசைப்படாதே; போட்டியாகத் தொழில் செய்பவர்களை வெறுக்காதே; அவர்களுக்குத் தீங்கு எண்ணாதே. பிறரது மன நிறைவில்- மற்றவர்களது மகிழ்வில்தான் நம் வியாபாரம் நடக்கிறது என்பதை நன்றாக உணர்ந்து கொள்.

ஆரம்பப் பாடம்!

"இவை எல்லாம் ஏதோ ஐந்தாம் வகுப்புப் பாடம்; வாழ்க்கைக்கு தேவை இல்லை" என்று எண்ணாதே. இவை எல்லாம் ஆரம்ப பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் சொல்லிக் கொடுக்கப் பட்டிருக்கலாம். ஆனால், இவை அனைத்தும் ஆயுள் பூராவும் நாம் உபயோகிக்க வேண்டிய பாடங்கள். கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.

பணம் சம்பாதிக்கிற மோகத்தில், "பணம் பணம்" என்று பணம் சம்பாதிக்க எதையும் செய்யலாம் என்று பலர் இறங்குகிறார்கள். பின்னால் எழுந்திருக்க முடியாத அடி விழும்போதுதான் விழித்துக் கொள்கிறார்கள்.

ஆரம்ப காலத்திலிருந்தே தொழில் செய்ய முனைபவர்கள் "நல்ல நெறிமுறைகளைக் கடைப் பிடிப்பேன்" என்று சொல்லிக்கொண்டு இறங்கு வார்களானால், தொழில் அவர்களுக்கு பணத்தை வாரிவழங்கும். நாமும் பல நல்ல காரியங்களை நமக்கும் பிறருக்குமாகச் செய்யலாம்.

ஆரம்ப பாடங்கள் — அவசியமான பாடங்கள்!

9

வீரத்தை விதையுங்கள்!

வெற்றிபெறுவதற்கு சில மனப் பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வெற்றி என்பது ஒரு படிப்படியான சிந்தனை முறை. எண்ண முறை.

திருப்பதி மலை ஏற, படிப்படியாக ஏறுகிறோம். "ஆயிரம் மைல் பயணம் முதல் படியில் தொடங்குகிறது" என்பார்கள். காரை ஓட்ட வேண்டும் என்றால் முதலில் சாவியைப் போட்டு திருகுகிறோம்; பின் பெட்ரோல் பெடலை மிதித்து எரிசக்தி கொடுக்கிறோம். பிறகு உந்து விசையை ஓட்ட நிலைக்கு மாற்றுகிறோம். படிப்படியாக வரிசையாக பல காரியங்களைச் செய்தபிறகு தான் கார் ஓடத் தொடங்குகிறது.

சுய கட்டுப்பாடு!

அதேபோல் நாம் சில எண்ணங்களை அடிக்கடி சிந்தித்து அவற்றை நமது பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அதாவது "நான் சுய கட்டுப்பாடு உடையவனாய் இருக்கப் போகிறேன்" என்று நீங்கள் தீர்மானம் செய்கிறீர்கள் என்றால் உடனே அதை

நடைமுறையில் கொண்டு வரவேண்டும். அதாவது "இனி காலை 5 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவேன்" என்று சொல்லிக் கொள்வதைச் செயலில் காட்ட வேண்டும். தினந்தோறும் காலையில் 5 மணிக்கு எழுந்திருப்பதை ஒரு பழக்கமாக மாற்ற வேண்டும்.

அப்போதுதான் நீங்கள் உங்களைப் பற்றிப் பெருமைப்பட முடியும். சுய கட்டுப்பாடு என்பது உங்களிடம் இருக்கும். சுய கட்டுப்பாட்டை இன்னொரு வகையிலும் காட்டலாம். "நான் அளவோடுதான் சாப்பிடுவேன்" என்று நீங்கள் சொல்லிக் கொள்ளலாம். 'அடுத்து எங்காவது விருந்தினர் வீட்டுக்குப் போகும்போது உங்களை வலுக் கட்டாயப்படுத்துகிறார்கள் என்றால் "நான் மூன்று இட்லிதான் சாப்பிடுவேன். சாப்பிட்டுவிட்டேன். இனி சாப்பிட முடியாது" என்று பக்குவமாக சொல்ல வேண்டும்; புரியும்படி சொல்ல வேண்டும்; கொஞ்சம் கண்டிப்புடன் சொல்ல வேண்டும்; உங்கள் சுயகட்டுப் பாட்டிற்கு சோதனை வரும்!

"ஒரே ஒரு தோசை!" என்பார்கள். "ரவா தோசை எங்கள் வீட்டில் நன்றாக இருக்கும் சாப்பிட்டுப் பாருங்கள்!" என்பார்கள். "கொஞ்சம் பொங்கல்" என்பார்கள். கடைசியில் "ஒரே ஒரு ஸ்வீட்!" என்பார்கள்! நம்மை நிலைகுலைய வைக்கப் பாடுபடுவார்கள்!

சோதனைக் காலம்!

நமது சுயகட்டுப்பாட்டிற்கு சோதனைக் காலம் இது! நீங்கள் வெற்றிபெறுவதில்தான் உங்களைப்

பற்றிய பெருமை இருக்கிறது. அப்போதுதான் ''அளவோடு சாப்பிடுவேன்'' என்பதை நீங்கள் பழக்கமாக்கி இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

என்று நாம் இப்படிப் பட்ட பல நெறிகளையும், நல்ல குணங்களையும், நாம் விரும்பும் எண்ணங் களையும் நமது பழக்கங்களாக மாற்றுகிறோமோ அன்று நாம் நினைத்ததெல்லாம் நடக்கும்; சொல்வதெல்லாம் பலிக்கும். காரணம்: மன உறுதி. உங்கள் மன உறுதி காரியத்தை சாதிக்கும் வரை ஓயாது. தொழில் செய்பவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய மனப் பழக்கங்கள் சில இருக்கின்றன.

தொழில் செய்ய முனைபவர்கள் எதைப் பார்த்துவிட்டு தொழில் செய்ய இறங்குகிறார்கள்?

"சார்! அவரிடம் இருந்த பணம் நாற்பதினாயிரம் ரூபாய்தான். இன்று 175 கோடிக்கு அதிபதியாகி இருக்கிறார்'' என்பதைக் கேள்விப்படுகிறார்கள்.

''எங்கள் தெருவில்தான் இருந்தார். தினம் காலையில் 5 மணிக்கு பால் வாங்க வருவார். பார்த்திருக்கிறேன். இன்று காரில் போகிறார்'' என்பதைக் கேள்விப்படுவார்கள்; பார்ப்பார்கள்.

திடீர் பணக்காரர்கள்!

பணக்காரரும் தொழிலதிபரும் ஏதோ சுலபமாக பணம் சம்பாதித்து விட்டார் என்றும், எல்லாரும் மனது வைத்தால் திடீர்ப் பணக்காரர்கள் ஆகிவிட முடியும் என்றும். பலரும் நம்புகிறார்கள்.

இது உண்மை அல்ல!

மேம்போக்காகப் பேசுபவர்கள் இவர்கள். ஆழமான அறிவோ அனுபவமோ இல்லாதவர்கள். பல சங்கடங்களைத் தாண்டித்தான் ஒரு மனிதன் தொழில் அதிபராகிறார்.

தொழிலில் ஒரு மனிதனுடைய எல்லாத் திறமைகளும் வெளிவருகின்றன. ஆகவேதான் தொழில் செய்வதை சிபாரிசு செய்கிறேன்.

எப்போது ஒரு மனிதனது திறமைகள் வெளிவருகின்றன?

அவனுக்குச் சோதனைகள் வரும்போது! அவனுக்குச் சங்கடங்கள், தொல்லைகள் துன்பங்கள், பிரச்சினைகள் என்று வரும்போதுதான் ஒரு மனிதனுடைய முழுத் திறமையும்-எல்லாத் திறமைகளும் வெளிவருகின்றன.

வாழ்வா சாவா ?

துன்பங்களும் சங்கடங்களும் தொழில் செய்பவனை மரணப் போராட்டத்தில் இறக்கி விடுகின்றன. பல சமயம் “வாழ்வா சாவா?” என்ற வாழ்வின் விளிம்புக்கே போய்விடுகிறான்.

அந்தச் சமயத்தில் மனதில் பயத்தை மீறிய வைராக்கியம் ஏற்படுகிறது. “கடைசிவரை பார்ப்போம்” என்று போராடுகிறான். அப்படி மனம் சளைக்காமல் போராடுபவனுக்கு, “உதவி” உடனே கிடைக்கிறது. நாளடைவில் அவனிடம் போராட்டங் களை சமாளிக்கும் திறமை வளர்ந்து, அவனது மனம் இயல்பாகிறது.

எதையும் சமாளிக்கும் அந்த மனஇயல்பை நாம் தொழிலில் இறங்கு முன்பே வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? வாழ்க்கையை ஒரு வாய்ப்பாகக் கருத வேண்டும். என்னால் எதையும் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். எந்தெந்த வழிகளில் உழைக்க முடியுமோ அந்தந்த வழிகளில் நாம் சதா பாடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

உலகின் மாபெரும் உண்மை என்னவென்றால், தோல்விகள் எல்லாம் வெற்றிக்கு வழிகாட்டும் அனுபவங்கள் என்பதுதான்! இந்தக் கருத்தை நாம் மனதில் வாங்கிக்கொண்டால், தோல்வியைக் கண்டு, நட்டத்தைக் கண்டு பயப்படமாட்டோம். பயப்படமாட்டோம் என்றால், "பயம் இருக்கும் அந்த பயம் அதிகமாக நம்மைப் பயமுறுத்தாது. எல்லாம் சரியாகிவிடும் விரைவில்" என்ற ஒரு மனோபாவம்-ஒரு மனப்பழக்கம் நம்மிடம் ஏற்படும்.

விழிப்புணர்வு!

"எல்லாம் சரியாகிவிடும், சரியாக நடக்கும்" என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். ஆனால், அதே சமயம் "எல்லாம் சரிவர நடக்கிறதா? நாம் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டோமா?" என்கிற விழிப்புணர்வு நம்மிடம் சதா இருந்துகொண்டிருக்க வேண்டும். "எல்லாம் சரியாக நடக்கும்" என்ற நம்பிக்கையுடன் நடக்கும் விஷயங்களைப் பற்றிய கவனமும் தேவை.

"எல்லாம் சரியாக நடக்கும்" என்ற நம்பிக்கை உங்கள் ஆழ்மனத்தில் அடி நீரோட்டமாக இருக்க வேண்டும் என்று ஏன் சொல்கிறோம்?

ஏனெனில் மனதில் எதைப் போடுகிறோமோ அதுதான் வெளிஉலகில் நம் சூழ்நிலையாக மாறுகிறது. சுருக்கமாகச் சொன்னால் "நல்லவிதமாக நடக்கும்" என்று நம்பி செயல்பட்டீர்களானால் நல்லவிதமாக அது நடக்கும்.. இந்த மனவியல் உண்மையைத்தான் நமது முன்னோர்கள் 2,500 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்து நமக்கு சொன்னார்கள். "எதை உள்மனதில் எண்ணுகிறாயோ அது வெளிஉலகில் நிகழும்" என்று.

"எல்லாம் சரியாக நடக்கும்" என்று எண்ணுவது சுலபமான விஷயமாயிற்றே என்று நீங்கள் எண்ணக் கூடும். சுலபம்தான். ஆனால், பெரும்பாலான மனிதர்கள் அப்படி எண்ணுவதில்லை!

தெருவில் செல்லும் பொதுமக்களிடம் பேச்சுக் கொடுத்துப் பாருங்கள். "நாட்டில் ஊழல் மலிந்து விட்டது. லஞ்சம் பெருத்து விட்டது. மந்திரிகள் எல்லாம் திருடர்களாய், கொள்ளைக் காரர்களாய், குண்டர்களை வைத்திருக்கும் அடியாள் தலைவனாய் இருக்கிறார்கள். இந்த நாடு மாறாது. ஒரு நாளும் மாறாது. நாம் என்ன செய்ய முடியும்? எல்லாம் நாட்டின் தலைவிதி!" என்று நொந்து ஆத்திரத்துடன் பேசுவதைத்தான் பார்க்கிறோம்.

மாற்று வழி !

இவர்கள் இதற்கு மாற்று வழி கண்டுபிடிப்பதைப் பற்றி பேசுவதில்லை. "மாற்ற வேண்டும். நாம் ஏதாவது

செய்ய வேண்டும்" என்று பேசுவதில்லை. எனவே என்ன பேசுகிறார்களோ அது துக்கம். அந்தக் கொடுமை தொடர்கிறது பொதுவாழ்வில். ஏனெனில் "என்ன எண்ணுகிறீர்களோ அதுவாக நீங்கள் மாறுகிறீர்கள்; அதேவிதமான நிலைமையை நீங்கள் ஈர்க்கிறீர்கள்" என்பதுதான் உபநிடதம் கூறும் மகா உண்மை.

மாறாக ஒரு தொழில் செய்பவனைப் பாருங்கள். அவனுக்கு தோல்வி வந்திருக்கும். மீளமுடியாது என்று எண்ணியிருப்பான். ஆனால், அதைப்பற்றி அதிகம் பேச மாட்டான். எப்படி இதைச் சமாளிப்பது என்பதில் அவன் மனம் ஈடுபட்டிருக்கும்.

தனக்கு ஏற்பட்டிருக்கும் குறைகளைச் சொல்லி புலம்பிக் கொண்டிருக்கமாட்டான்; அழுது கொண்டிருக்க மாட்டான். "கொஞ்சம் இப்போது சங்கடம். விரைவில் சரியாகிவிடும்" என்பான்!

அதுதான் அவனுக்கு நேரும். அப்படிப் பல பல படிகளைத் தங்கள் மனப் பழக்கங்களால் தாண்டியவர் களைத்தான் நீங்கள் பல்வேறு தொழில் நிறுவனங் களில் பல சாதனையாளர்களைப் பார்க்கிறீர்கள்.

நல்லதை எண்ணும், வீரத்தை எண்ணும், 'சமாளித்துவிடுவேன்' என்ற நம்பிக்கையும் குணமும் இனி உங்களுடையதாக இருக்கட்டும்.

மறந்தும் குறைகளைச் சொல்லி புலம்பிக் கொண்டிருக்காதீர்கள்!

10

உலகம் உங்களை அழைக்கிறது!

கற்பனை செய்யுங்கள்!

ஊருக்கு அப்பால் உங்கள் தொழிற்சாலை மாடமாளிகை போல எழுந்து நிற்கிறது. கம்பீரமான 'கேட்டு'க்குள்ளே உங்கள் கார் நுழைகிறது. வாசலில் நிற்கும் கூர்க்கா உங்களுக்கு சல்யூட் அடிக்கிறார்.

மற்றொரு பக்கம் உற்பத்தியான பொருட்கள் லாரிகளில் ஏற்றப்படுகின்றன. எங்கும் துடிப்பு! எங்கும் சாதனையின் முத்திரை'!

நீங்கள் உற்பத்தி செய்யும் பொருள்- மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படும் பொருள்- அழகாக உங்கள் மேசை மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்கள்! பலர் உங்களைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கின்றனர்...

இப்படி கற்பனையை ஓடவிடுங்கள். "முடியுமா? இதெல்லாம் நடக்குமா?'' என்று கேட்காதீர்கள். இப்படி கற்பனை செய்து, கனவுகளை மெய்யாக் கியவர்கள் இன்று திருப்பூரிலே ஆயிரம் பேருக்குமேல்

இருக்கிறார்கள். எல்லா ஊர்களிலும் எல்லா மாநிலங்களிலும் ஏராளமான பேர்- ஏராளமானவர்கள்!

உங்களுக்கு இந்தச் சிறப்பை அளிக்கக்கூடாது என்பது கடவுளின் நோக்கமல்ல. ஏழ்மை கடவுளின் விருப்பமல்ல. கனவு காண்பது தவறல்ல. சாதனைபுரியும் ஒரு சில மனிதர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? கனவை நனவாக்குவதில்தான் அவர்கள் வேறுபடுகிறார்கள். அதுதான் வித்தியாசம்.

ஆசை இருக்கு...

எல்லோருக்கும் ஆசை இருக்கிறது. பணக்காரனாக வேண்டும்; தொழிலதிபனாக வேண்டும், கார் வேண்டும், மாளிகை வேண்டும் என்ற ஆசைகள் பலருக்கும் அளவுகடந்து இருக்கின்றன. ஆசைப்படுகிற பலரும் அதை எப்படி நனவாக்குவது என்பதைப் புரிந்து கொள்வதில்லை.

எப்படி ஒரு விதையைப் போட்டால் அது வெடித்துக் கிளம்பி, பூத்துக் காயாகி கனி தர காலம் ஆகிறதோ அதுபோல கனவுகள் கைகூடக் காலம் தேவைப்படுகிறது.

பிறர் உழைப்பில் பணக்காரனாகிவிடலாம் என்று சிலர் எண்ணுகிறார்கள். பணக்கார வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் போதும்; பெரிய பதவியில் இருப்பவர்களது வளர்ப்பு மகனாக இருந்தால் போதும்; செல்வம் கொழிக்கும் என்று எண்ணுகிறார்கள்.

இது உண்மையல்ல, தவறான சிந்தனை. ஏனெனில், அவர்கள் தங்கள் காலில் நிற்காமல் பிறரைச் சார்ந்து அவர்கள் தயவில் வாழ விரும்புகிறார்கள். மனைவிக்கு பெற்றோர் வீட்டுச் சொத்து வருகிறது என்றால், அது மனைவியின் சொத்து; அவளது உரிமை. அதை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்று எண்ணுபவனுக்கு சொந்தத் தொழில் செய்யும் தகுதி இல்லாமல் போய்விடுகிறது. அவன் தன்னம்பிக்கை இல்லாதவன்; துணிவில்லாதவன்.

பணம்! பணம்!!

அதேபோல "பணம்... பணம்" என்று பணத்தின் மீது நம்பிக்கை வைப்பவன் அவசரப்படுவான்; பொறுமை அவனைவிட்டுப் போய்விடும். பொருளின் தரத்தில் கவனம் செலுத்த மாட்டான். தொழிலைச் சரியாகச் செய்யமாட்டான். எனவே தோல்வி பெறுவான்.

பணம் என்பது தானே வரும் ஒரு பொருள். தேங்காய் எண்ணெய் தயாரிக்கத் தேங்காய் வாங்குகிறார்கள். மட்டையை உரிக்கிறார்கள். உடைக்கிறார்கள். கொட்டாங்கச்சியிலிருந்து தேங்காயைப் பிரித்தெடுக்கிறார்கள். காயவைக்கிறார்கள். பின் செக்கில் ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள்.

நாம் விரும்புவது எண்ணெய்தான். ஆனால், எண்ணெய் மட்டும் கிடைப்பதில்லை. அங்கே தென்னை மட்டை கிடைக்கிறது; தென்னை நார் எடுக்கிறார்கள். கொட்டாங்கச்சி கிடைக்கிறது; (அது

அற்புதமான எரிபொருள்.) தேங்காய்த் தண்ணீர் கிடைக்கிறது; அதைக் காய்ச்சி நல்ல விலைபோகும் ஒரு சர்க்கரைப் பொருள் தயாரிக்கிறார்கள். எண்ணெய் ஆட்டியபின் தேங்காய்ப் புண்ணாக்கு கிடைக்கிறது; உரமாகவும் உணவாகவும் பயன்படும் பொருள், அது.

எப்படி தேங்காய் எண்ணெய் தயாரிப்பில் எத்தனையோ துணைப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அதுபோல பணம் காசு, வீடு கார், மாளிகை எல்லாம் தொழில் செய்யும்போது நமக்கு தானே கிடைக்கும் துணைப் பொருட்கள்.

நாம் பணத்தின் மீது குறிவைக்கக்கூடாது. ஏனெனில் துணைப் பொருளுக்காக-தென்னை மட்டைக்காக அல்லது கொட்டாங்கச்சிக்காக யாரும் எண்ணெய் ஆட்டுவதில்லை. அதுபோல, நாம் நம் முக்கிய தொழிலைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செய்தால், பணம் தானாக வரும்.

நடிகர்கள்

நமது ஊர் நடிகர் நடிகைகளைப் பாருங்கள். எல்லோரும் பணத்தை நாடியா சினிமாத்துறை அலுவலகங்களில் ஏறி இறங்குகிறார்கள்? 'ஒரு சின்ன 'ரோல்' கொடுங்கள்!'', "நடிக்க 'சான்ஸ்' கொடுங்கள்'' என்றுதான் கேட்கிறார்கள்.

எவ்வளவு சம்பளம் கொடுப்பீர்கள் என்று சம்பளத்தையா முதலில் பேசுகிறார்கள்? இல்லை. உள்ளே நுழைபவர்கள் தங்கள் திறமைக்கு ஒரு வாய்ப்பைத்தான் நாடுகிறார்கள்.

அதேபோல உங்கள் திறமைக்கு ஒரு வாய்ப்பாக தொழிலைத் தேர்ந்தெடுங்கள். பணமும், புகழும், பெயரும் தானே வரும். அதிகாரம், செல்வாக்கு, பணம் எல்லாம் வரும்-தென்னை மட்டை, கொட்டாங்கச்சி, புண்ணாக்கு போல!

தாகம்

ஒரு மனிதனை தொழில் செய்யும் ஆர்வம் ஏன் துரத்துகிறது என்பதைக் கொஞ்சம் சிந்தியுங்கள்.

தாகம் எடுக்கிறது; நமக்குத் தண்ணீர் தேவை.

பசி எடுக்கிறது; நமக்கு உணவு தேவை.

தூக்கம் வருகிறது; நமக்கு ஓய்வு தேவை. ஆனால், ஒரு மனிதன் வேலை செய்ய வேண்டும், உழைக்க வேண்டும் என்று ஏன் ஆசைப்படுகிறான்?

"பணம் சம்பாதிப்பதற்கு" என்று சொல்வீர்களா? அப்படியானால் நிறையப் பணம் சம்பாதித்த பின்னும் மேலும் பணம் சம்பாதிக்க உழைக்கிறானே, ஏன்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

பணம் வைத்திருப்பவன் அத்துடன் திருப்தி அடையாமல் தர்ம காரியங்கள் செய்கிறான். ஏழைக் குழந்தைகளைப் படிக்க வைக்கிறான். அநாதை ஆசிரமங்கள் அமைக்கிறான். மருத்துவமனை கட்டுகிறான். அரசியலில் இறங்குகிறான். ஊர் நன்மைக்காகப் பாடுபடுகிறான். ஏன் இதை எல்லாம் ஒரு மனிதன் பணம் பெற்றபின் செய்கிறான்?

மனிதனுக்கு சில தாகங்கள் இருக்கின்றன. பிறரால் மதிக்கப்பட வேண்டும்; பிறரால் பாராட்டப்பட வேண்டும், செத்தபின்னும் பிறரால் நினைக்கப்பட வேண்டும் என்று சமுதாய தேவைகள் அவனிடம் இருக்கின்றன. இந்த அடிப்படைத் தாகங்கள்தான் அவனைத் துரத்துகின்றன; விரட்டு கின்றன.

வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், அவன் தன்னைத் தனக்கே நிரூபித்துக் காட்ட விரும்பு கிறான்!

இதுதான் உண்மையான காரணம்.

செக்குமாடு வாழ்க்கை

மற்றோர் விஷயத்தை சிந்தித்துப் பாருங்கள். சாதனைகளை, வாய்ப்புள்ள இடத்தில்தான் செய்ய முடியும். செக்குமாட்டு வாழ்க்கை வாழ்பவன் "ஏதோ வேலை செய்தோம், சம்பாதித்தோம் குடும்பம் நடத்தினோம்" என்று எண்ணுபவன் எதையும் சாதிப் பதில்லை.

"என்னை உலகுக்குக் காட்டாமல் நான் போகப் போவதில்லை" என்று சொல்லிக் கொள்கிறானே, அவன்தான் சாதனைபுரிகிறான். அது உயிரோட்ட மாக அவனை இயக்குகிறது.

அப்படிப்பட்ட உயிரோட்டத்துக்கு நல்ல சாதனைபுரிய ஏற்ற இடம்—சொந்தக்காலில் நின்று தொழில்புரிவதுதான். இதுதான் அவர்களைத் தொழில் செய்ய விரட்டுகிறது.

நான், அமெரிக்காவில் உயர்பட்டமான 'டாக்டர்' பட்டத்தை எடுத்தேன். நான் பாரம்பரியமாக தொழில் செய்கின்ற குடும்பத்தில் பிறந்ததாலோ என்னவோ, ஏதோ ஒன்று என்னை விரட்டிக் கொண்டிருந்தது. "உன் முழுத் திறமையும் ஆசிரியர் பணியில் வெளிவராது. தொழிலில் இறங்கு" என்ற குரல் எனக்குள் கேட்டுக்கொண்டே இருந்தது. இரண்டுமுறை தொழில் செய்து தோற்றுப்போன அனுபவம், தன்னை நிரூபிக்குமாறு என்னுள் சவால் விட்டுக் கொண்டிருந்தது. எனவே பேராசிரியர் பதவியைவிட்டு தொழிலில் இறங்கினேன்.

அனுபவசாலிகள் கூறுகிறார்கள்– "சொந்தமாகத் தொழில் செய்வது (Sex) செக்சைவிடப் பலம் வாய்ந்தது. குடும்பத்தை, மனைவி மக்களை, வீட்டைக்கூட மறந்துவிடுவீர்கள், உங்களை நிரூபிக்கும் முயற்சியில்" என்கிறார்கள்.

அப்படிப்பட்டவன் புதிய புதிய பொருட்களைக் கொண்டுவர ஆசைப்படுகிறான்; புதிய சவால்களை மேற்கொள்ள ஆசைப்படுகிறான்; போட்டிகளைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொள்கிறான். "கஷ்டம் வந்தாலும் சரி நஷ்டம் வந்தாலும் சரி கடைசிவரை போராடி வெற்றிபெறுவேன்" என்று சொல்லிக் கொள்கிறான். ஒவ்வொரு கட்டத்திலும் அவன் பெறும் வெற்றி அவனுக்கு பெருமகிழ்ச்சி தருகிறது. அவனை முன்னோக்கிச் செல்ல உந்துகிறது.

எப்போதும் நிறுவனத்தின் ஆட்கள் அவனைச் சுற்றி நிற்கிறார்கள். அவன் அவர்களுள் ஒருவன்.

எனினும் அவன் தனித்து உயர்ந்து நிற்கிறான். ஏனெனில் அவன் தலைவன். பல நட்சத்திரங்களிடையே அவன் ஒரு சூரியன்.

இந்த தாகம் உங்களிடம் இருக்கிறதா, ஆழமாக? இல்லாவிட்டால் அந்த தாகத்தை, சாதனைபுரிய வேண்டும் என்ற மனோ பாவத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்!

உலகம் உங்களை அழைக்கிறது!

11

வேலையை விடு! தொழில் தொடங்கு!!

வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம். அறிவுபெற அனுபவம் பெற, தன்னை அறிய, தன் முழுத் திறமைகளை வெளிப்படுத்த, தனக்கும் பிறருக்குமாக வாழ ஒரு வாய்ப்பைத் தரும் பயிற்சிக்கூடம், அது.

சொந்தத் தொழில் அல்லது வியாபாரம் செய்வதை 'ரிஸ்க்' என்று சிலர் நினைக்கிறார்கள். அதில் ஆதாயமும் உண்டு; இழப்பும் உண்டு. நிரந்தர வருமானம் என்றும் சொல்ல முடியாது. எனவே, மாதச் சம்பளத்துக்கு வேலைக்குப் போகிறார்கள். குறிப்பாகப் படித்தவர்கள்- வெள்ளைச்சட்டைக்காரர்கள் மாதச் சம்பளத்தையே விரும்புகிறார்கள். வேலைக்குப் போகிறார்கள். அரசாங்க வேலையை அதிகம் விரும்புகிறார்கள்.

செக்குமாடு வாழ்க்கை !

"சொந்தக் காலில் நில்!" என்று சொல்லும்போது நீங்கள் அரசாங்கத்திலோ ஒரு நிறுவனத்திலோ வேலை பார்க்கக்கூடாது; எல்லோரும் சொந்தத் தொழில் செய்ய வேண்டும் என்று பொருள்படாது.

எல்லோரும் தொழில் செய்யப் போய்விட்டால் ஊழியம் செய்ய ஆளுக்கு எங்கே போவது? அரசை நடத்த ஆள் வேண்டும் அல்லவா?

வருமானம் உள்ள எல்லாமே சொந்தக் காலில் நிற்பது போன்றதுதான். ஆனால், அது மாத வருமான மாக இல்லாமல் சொந்த வருமானமாக இருந்தால், உங்கள் வாழ்க்கை, செக்கு மாடு போல ஒரு வட்டத்துள் இருக்காது. வானவெளியில் சுதந்திரமாகப் பறக்கும் சிட்டுக்குருவி போல இருக்கும்.

"சொந்தக் காலில் நில்" என்றால், பிறரைச் சாராமல் நில் என்றுதான் பொருள். உங்களுக்கு யாரும் முட்டுக் கொடுக்கத் தேவையில்லை.

மேலும், எல்லோருக்கும் சொந்தத் தொழில் செய்யும் ஆர்வம் இருக்காது; சொந்தத் தொழில் செய்வதற்கு வேண்டிய குணங்களும் பலருக்கு இருக்காது. வசதியும் இருக்காது. யாரிடமாவது வேலை செய்யும் போதும், நாம் தனித்துத்தான்– சுதந்திரமாகத் தான் நிற்கிறோம். கையேந்தி நிற்பதில்லை. நமது உழைப்பை ஈடாகக் கொடுக்கிறோம். சம்பளம் பெறுகிறோம். இனாமாக எதையும் பெறுவதில்லை.

வருத்தம்

நிரந்தரமான சம்பளம் பெற்று நிம்மதியாக இருக்கலாம் என்று அரசாங்க வேலையில் சேர்ந்து காலங்கழிக்கும் சிலர், பின்பு வருத்தப்படுகிறார்கள்.

"அடாடா! என் திறமைகளை எல்லாம் வெளிக் கொணராமல் போய்விட்டேனே! எனக்கு நான் ஒரு வாய்ப்பைக் கொடுக்கவில்லையே!" என்று உணரும் போது, ஓய்வுபெறும் வயது வந்துவிடுகிறது. அவர்களின் வாழ்க்கை முடியும் தருவாய்க்கு வந்துவிடுகிறது.

ஆனால், சில புத்திசாலிகள் அரசாங்க வேலை பார்த்துக்கொண்டே, சொந்தத் தொழிலும் செய்கிறார்கள்! சொந்தத் தொழில் நன்றாக வேரூன்றியதும், அரசாங்க வேலையை விட்டுவிட்டு, முழுக்க முழுக்கத் தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

அரசாங்க வேலையிலிருந்து ஓய்வுபெற்ற சிலர் கூடச் சொந்தத் தொழிலோ, சொந்த வியாபாரமோ தொடங்குகிறார்கள். எனக்குத் தெரிந்து ஒரு நண்பர், வியாபாரக் குடும்பத்தில் பிறந்தவர், அப்படித்தான் சொந்தமாக ஒரு பலசரக்குக் கடை வைத்தார். கொத்தவால்சாவடிக்குப் போய் வீட்டுக்கு சாமான்கள் வாங்கிய அனுபவம் அவருக்குக் கைகொடுத்தது. இரண்டே ஆண்டில், அரசாங்கத்தில் கிடைத்த மாதச் சம்பளத்தைவிட அதிக அளவில் கடையில் சம்பாதிக்கத் தொடங்கி விட்டார்! அரசாங்க ஓய்வூதியம் வேறு வந்து கொண்டிருக்கிறது.

சிலர் அரசாங்க வேலையை விட்டுவிட்டு தொழிலில், வியாபாரத்தில் இறங்குவார்கள். இதற்கு நல்ல கூட்டாளிகளும் கிடைப்பார்கள்.

சொந்தத் தொழில், வியாபாரம் செய்வது 'ரிஸ்க்'தான். ஆனால், செய்யும் முறையுடன் செய்தால், இழப்பே இருக்காது. நிச்சயம் ஆதாயந்தான் கிடைக்கும். ஒரு சாமானை ரூ.10-க்கு வாங்கி, ரூ.12-க்கு விற்கும் பொழுது எப்படி நட்டம் ஏற்படும்? நட்டம் ஏற்படுகிறது என்றால், அது வியாபாரத்தில் அல்ல' எங்கோ கோளாறு இருக்கிறது. அந்த ஓட்டையை அடைக்க வேண்டும்.

அனுபவம்

ஒரு கடையில் வேலை பார்ப்பவர், ஒரு தொழிற்சாலையில் பணியாற்றுகிறவர், ஒரு நிறுவனத்தில் நல்ல நிலையில் இருப்பவர், சில ஆண்டு கழித்ததும், தானே சொந்தமாகத் தொழில் செய்யத் தொடங்கிவிடுவார்.

அவருக்கு அந்தத் தொழிலில்-வியாபாரத்தில் அனுபவம் ஏற்பட்டு இருக்கும். சொந்தமாகச் செய்யப் பணமும் சேர்ந்திருக்கும். அல்லது பணம் படைத்த ஒருவர் கூட்டாளியாக வருவார். இப்படிப்பட்ட வர்கள் மிக விரைவில் வெற்றி பெறுவார்கள். இவர்கள் ஏற்கனவே பெற்ற அனுபவந்தான் இதற்குக் காரணம்.

சிலபேர் கையைச் சுட்டுக் கொள்ளுவதும் உண்டு. பண நிர்வாகம் சரியாக இருக்காது; நிர்வகிக்கத் தெரியாது; ஊழியர்களிடம் வேலை வாங்கத்

தெரியாது; விற்பனை செய்யத் தெரியாது. இப்படிப் பல காரணங்களால்தான் இழப்பு ஏற்படும். நான் ஏற்கனவே சொன்னபடி, நிர்வாகம் செய்ய, தொழிலாளர்களிடம் வேலை வாங்க, உற்பத்திப் பொருளை விற்பனை செய்யப் பழகிக்கொண்டால், இழப்பைத் தடுக்க முடியும். ஆதாயம் காணவும் முடியும்.

சுக வாழ்வு !

இவ்வுலகில் நாம் பிறருக்குச் சுமையாக இருக்கக் கூடாது. அதாவது பிறர் உழைப்பில் சுகங் காண முயல்வது தவறு. இதுதான் நாம் உணர வேண்டிய முக்கிய பாடம்.

பெற்றோருடன், அவர்கள் வளர்ப்பில், அவர்கள் பணத்தில், அவர்கள் ஆலோசனையில், மணம் செய்துகொண்ட பின்னும் அவர்கள் வீட்டில் என்றும் வாழ்க்கை நடத்துகிறோம். சிலர் மாமனார் வீட்டில் சுகம் காண்கிறார்கள். எதுவும் செய்யாமல், அதிகம் உழைக்காமல் சுகமாக காலந்தள்ளுவதுதான் சிலருக்கு வாழ்க்கையாக இருக்கிறது.

ஆனால், இது மனித வாழ்க்கை அல்ல; மிருக வாழ்க்கை. செல்லப் பிராணி வாழ்க்கை, செல்லப் பிள்ளையாக- வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக் கொள்ளுகிறார்கள்.

நாம் மனிதனாக வாழ வேண்டாமா? மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டாமா? நாம் சொந்தக் காலில் நின்றால்தான் அது முடியும்.

வீட்டுக்கு வெளியில் போய் நாலு காசு சம்பாதித்துக் கொண்டு வரும் ஆண் பிள்ளையைத்தான் தாலி கட்டிய மனைவிகூட மதிப்பாள்!

சொந்தக் காலில் நிற்கும் பொழுதுதான் சமுதாயத்தில் உங்களுக்கு ஒரு மரியாதை ஏற்படுகிறது.

12

தமிழ்நாடு எப்போது வெளிச்சத்திற்கு வரும்?

நமது சமுதாய நிலை நம்மை பாதிக்கிறது. நமது சமுதாய சிந்தனைகளும், பழக்கவழக்கங்களும், பயங்களும் நம்மைப் பாதிக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்தே நம் மனதில் சிந்தனைகள் தோன்றுகின்றன.

தமிழ்நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் பத்திரமாக-பாதுகாப்பாக, வாழ்க்கை நடத்த விரும்புகின்றனர், எனவே, "எங்கு வேலை கிடைக்கும்? எங்கு மாதா மாதம் சம்பளம் கிடைக்கும்? அதிலே இறங்கி பத்திரமாக குடும்பம் நடத்துவதுதான் நல்லது!" என்று பலரும் தீர்மானிக்கிறார்கள்.

பத்திரமும் பாதுகாப்பும் தேவைதான். அதற்காகத் தான் இடி மின்னல், மழை வெள்ளம், புயல் பூகம்பம் இவற்றிலிருந்தும், பிராணிகளிட மிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மனிதன் வீடு என்ற ஒன்றைக் கட்டினான். பத்திரமாக வாழ்ந்தான். அது அவசியம். அதுதான் புத்திசாலித் தனம்.

அதற்குமேல் அவன் என்ன செய்தான்?

பயம்! பயம்!!

தன் காலிலே நின்று தன் வருமானத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை அவனிடம் இல்லாமல் போய்விட்டது! பயம்! ஒரு மாதம் வருமானம் வராவிட்டால் என்ன செய்வது என்ற பயம்! "தானும் குடும்பமும் அல்லவா கஷ்டப்படவேண்டி வரும்" என்ற பயம்!

"பிறரிடம் வேலை செய்யக்கூடாது" என்று யாரும் சொல்லவில்லை. தொடக்க காலத்தில் அனுபவம் கொண்ட நிறுவனங்களிலும் மனிதர்களிடமும் பணிபுரியும் போதுதான் நமக்கு நல்ல அனுபவம் கிடைக்கும். சொந்தத் தொழில் செய்வோர் அனைவரும் அப்படிப் பிறரிடம் பயிற்சி பெற்றவர்கள் தான். ஆகவே "வேலை செய்யாதீர்கள்" என்று யாரும் சொல்லவில்லை.

ஆனால், பலரும் என்ன செய்கிறார்கள்?

ஒரு பத்திரமான- மாதா மாதம் சம்பளம் வரும் வேலையைப் பெற்றதும் "இதுவே கதி! இது போதும்! நிம்மதியாய் இருப்போம்" என்று தீர்மானித்து, ஒரு செக்குமாட்டு வாழ்க்கையை வாழ்கின்றனர். அதாவது அந்த வேலை பழகிவிடுகிறது. "ஏன் புதிய பரிசோதனை?" என்று தாங்களாகவே தங்களை முடக்கிக்கொள்கின்றனர்.

தங்களிடமுள்ள அற்புத திறமைகளை எல்லாம், அபாரமான புத்திசாலித்தனங்களை எல்லாம்,

உலகுக்குக் காட்டாமலே-காட்டுவதற்கான வாய்ப்பைப் பெறாமலே போய்விடுகின்றனர், பலர்.

துறவி

சமீபத்தில் மலேசியாவில் உள்ள 42 வயதே ஆன இளைஞர்- மிகப்பெரிய தொழிலதிபர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். சிறுவயதில் இராமகிருஷ்ண மடத்திலே பிரமசாரியாக ஆறு ஆண்டு துறவியாக வாழ்ந்தவர். இவர், "நீ போய் குடும்பம் நடத்து" என்று அங்குள்ள தலைவர் சொன்னதன்பேரில், இன்று தொழிலதிபராய் தொழில் நடத்துகிறார். அவர் தொழிலில் எந்த நேரத்திலும் எந்த நாட்டிலும் பொய் பேசாமல், திருட்டு புரட்டு செய்யாமல், லஞ்சம் கொடுக்காமல் தொழில் செய்கிறார். இந்தோனேசியா வில் இந்தியா போல லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் ஆகும் என்பார்கள். அந்த நாட்டுடன், எந்தவிதமான லஞ்சமும் ஏமாற்று வேலையும் இல்லாமல் நேர்மையுடன் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மூலம் தொழில் செய்கிறார்.

"இந்தியாவில் அப்படி எல்லாம் தொழில் செய்ய முடியாது" என்பவர்கள் இதை யோசித்துப் பார்க்க வேண்டும். 'அப்படியெல்லாம் முடியாது' என்று சொல்லும்போது, தங்களால் அப்படி இருக்க முடியாது என்று தீர்மானித்துவிடுகின்றனர்! "நமக்குள்ளே 'முடியாது' என்று சொல்லும் மனிதன் இருக்கும்போது அந்த எண்ணம்தான் மேவும்" என்கிறார்கள் மனவியல் அறிஞர்கள். "லஞ்சம் கொடுக்காமல் என்னால் தொழில் செய்யமுடியும்"

என்று எண்ணுபவர்கள் அதேபோல் செய்கிறார்கள். "உள்ளே எப்படிப்பட்ட மனிதன் இருக்கிறான்?" என்பதுதான் கேள்வி.

இந்த மலேசிய தமிழ்த் தொழிலதிபர் சொன்னார்– "பலரும் தங்களுக்குள் எத்தனை பெரிய மகத்தான சக்தி இருக்கிறது என்பதை உணராமலே– பயன்படுத்தாமலே வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றனர். இதுதான் பரிதாபம்!"

சீனாக்காரர்

முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் மற்றொரு வருடன் பெரிய ஓட்டலில் உள்ள 32-வது மாடியிலுள்ள எனது அறைக்கு 'லிப்டி'ல் சென்று கொண்டிருந்தேன்.

"இந்த ஓட்டல் யாருக்குச் சொந்தம்?" என்று கேட்டேன்.

"சீனக்காரர் ஒருவர் இதன் சொந்தக்காரர்!" என்றார்.

அது, பெரிய ஓட்டல்; 54 மாடி கொண்ட ஓட்டல். சிவப்புக் கருங்கல்லிலே இழைத்து இழைத்து கட்டப்பட்ட வானளாவிய கட்டிடம்! அழகான அறைகள்! மகிழ்வும் பிரமிப்பும் எனக்கு ஏற்பட்டது. அமெரிக்காவில் எத்தனையோ, இதைவிடப் பெரிய ஓட்டல்களைப் பார்த்திருந்தும் 'இந்த சின்ன மலேசியா இப்படி வேகமாக வளர்ந்து வருகிறதே. சக்கைப்போடு போடுகிறதே' என்ற பிரமிப்பில் இருந்தேன்.

இதைக் கண்ட நண்பர் கூறினார்- "எல்லா பெரிய ஓட்டல்களுக்கும் பெரும்பாலும் சீனர்கள் அல்லது மலாய்காரர்கள் தான் சொந்தக்காரர்கள்! தமிழர்களால் 'இவ்வளவு பெரிய ஓட்டலைக் கட்டலாம்; கட்டமுடியும்; நாமும் சொந்தக்காரராக முடியும் என்று எண்ணவே முடிவதில்லை!" என்றார்.

அவர் சொன்ன விஷயத்தை- தமிழனது மனோபாவத்தைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன். பெரிய பேச்சாளர், அவர். ஒரே வாக்கியத்தில் தன் மனப் பொறுமலை, ஆதங்கத்தை வெளிப்படுத்திவிட்டு, பேசாமலிருந்தார்.

கங்கைகொண்டான்

கங்கைகொண்டான் கடாரம் கொண்டான் என்றெல்லாம் பேசுகிறோம். 'கடாரம்' என்பது மலேசியாவில் கெடா என்று என்று அழைக்கப்படும் மாநிலம். அதை தமிழ்நாட்டிலிருந்து கடல்கடந்து வந்து நம் தமிழ் மன்னன் ஒரு காலத்தில் கைப்பற்றி இருக்கிறான். அவன் நம்மவன்.

"நமது வீரப் பரம்பரையை எல்லாம் மறந்துவிட்டோம். நாம் யாரென்று நாம் புரிந்துகொள்ளவில்லை. நமக்குள்ளே யாருடைய குருதி ஓடுகிறது என்பதைச் சொல்லிப் புரிய வைக்கக்கூட ஆளில்லை!" என்றார்.

என் கண்கள் கலங்கவில்லை; ஆனால், மனம் கலங்கியது; மனம் குமுறிக் கொண்டிருந்தது. "தமிழ் நாட்டில் நம்மை நாம் உணரவில்லை! எங்கோ

போயிருக்கவேண்டிய தமிழினத்தை எங்கோ அழைத்துச் சென்றுவிட்டார்கள், தன்னலப் பேய்கள். அரசியல்வாதிகள் ஊரைக் கொள்ளையடித்து வாழும் நிலைக்கு நாம் அனுமதித்து விட்டோம். நம்மை நாம் உணரவில்லை!"

அயோக்கியர்களை விரட்டக்கூட நமக்குத் திராணியில்லை! நம்முள் ஒற்றுமையில்லை.

இந்த உலகில் யாரை மக்கள் மதிக்கிறார்கள்? எந்த நாட்டை மக்கள் மதிக்கிறார்கள்? பணம் படைத்த அமெரிக்காவை, பணம் படைத்த ஜப்பானை, பணம் படைத்த துபாய்-குவைத்தை, ஆஸ்திரேலியாவை, கொரியாவை, தைவானை, சிங்கப்பூரை.

"நம் தமிழ் மக்கள் பணக்காரர்களாக வேண்டும்."

நடிகர்கள்

பல இளைஞர்கள் மலேசியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, சினிமா பின்னால் செல்கிறார்கள். 'தளபதி' சினிமா பார்த்து விட்டு மலேசியாவில் அதே போன்று வன்முறையில் இறங்கி இருக்கிறார்கள். சினிமா போதை உண்மையான வாழ்க்கையை மூடி மறைக்கும் அளவுக்கு பிரமாண்ட விசுவரூபம் எடுத்து தமிழ் மக்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. இதில் குளிர் காய்கிறார்கள். அரசியல்வாதிகள்.

"தமிழனின் வாழ்வு படிப்பாலும், திறமையாலும், உழைப்பாலும் தொழிலாலும் புதிய பொருளை

உற்பத்தி செய்து உலகுக்கு அனுப்புவதாலும் மட்டுமே முன்னேறுமே தவிர, சினிமா நடிகைகளை மோகிப்பதாலும் சினிமா நடிகர்களுக்கு ஆரத்தி எடுப்பதாலும் வராது."

"சரியான வழிகாட்டத் தவறிவிட்டோம். அவர்கள் எந்தப் பரம்பரை என்று சொல்லத் தவறிவிட்டோம்."

கூத்தாடியும் கலைஞன் தான். ஆனால், கலைஞன் கலைஞனாக இருக்கட்டும்; போற்றுவோம். ஆனால், கலைஞன் அறிஞனாக தன்னைக் கொண்டால் உலகம் ஏற்காது. கலைஞன் தொழிலில் இறங்கி அனுபவம் பெற்றால் ஒழிய தொழிலதிபனாக முடியாது; தொழிலில் தோற்றுப் போவான். கலைஞன் ராஜ தந்திரத்திலும் நிர்வாகத்திலும் நிறையப் பயிற்சி பெற்றிருந்தால் ஒழிய அவன் ஒரு நிறுவனத்தை, ஒரு அரசை நிர்வகிக்க முடியாது. தோற்றுப்போவான். அவனது தோல்வியை நாடு அனுபவிக்கும்.

தங்களை சகலகலா வல்லவர்களாக சினிமாவில் காட்டிக் கொள்பவர்களை, 'இவர்களால் எதையும் செய்ய முடியும்!' என்று நம்பும் முட்டாள்தனம் தமிழ் மக்களுக்கு எங்கிருந்து வந்தது?

இது கொடுமை

"இது கொடுமை."

இது பொறுப்பதில்லை. தம்பீ!

எரிதழல் கொண்டுவா என்று கர்ச்சித்தானே பீமன், அதைப்போல் நல்லவர்களும், படித்த

இளைஞர்களும், எழுந்து முழங்க வேண்டிய காலம் வந்து விட்டது.

நீங்களும் நானும் என்ன செய்யப் போகிறோம்?

மக்களை-குறிப்பாக இளைஞர்களை-அவர்கள் யார் என்று தெரிந்து கொள்ளச் செய்யவேண்டும். அவர்களிடமுள்ள மகத்தான சக்திகளுக்கு, இலட்சியங் களுக்கு வடிகால்களாக அறிவும் பயிற்சியும், தொழிலும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

"கலைஞன் அந்த விழிப்புணர்வைத் தன் கலைமூலம் ஏற்படுத்தி உதவ முடியும். அப்படி அவன் உதவாவிட்டால் அவன் குழந்தைகளே தங்களை உணராமல், அறியாமையில் மூழ்கி நிற்கும் அடுத்த தலை முறையைத்தான் அவன் பெறுவான்!" என்றார், அந்த நண்பர்.

அவர் முகத்தில் ஆவேசம் தென்பட்டது. அது தர்மத்தின் ஆவேசம். அவர் கண்களில் தீப்பொறி தென்பட்டது; தமிழ் மனத்தின் அழுக்குகளையும் ஏமாற்று வித்தைகளையும் சாகசங்களையும் சுட்டு எரித்துச் சாம்பலாக்கும் தீப்பொறி, அது!

விழிப்புணர்வு

இளைஞர்கள் விழிப்புணர்வு பெற்றார்கள். தங்கள் திறமைகளை அற்ப விஷயங்களில், பேச்சில், பொறாமையில், வெறுப்பில், தன்னலத்தில் இனி செலவழிக்கப் போவதில்லை. இளைஞர் சமுதாயம் எழுகிறது. தங்கள் பாரம்பரியத்தை மீண்டும் நிலை நிறுத்தப் போகிறது.

"'இனி செய்வோம்' என்று யாரும் சொல்லமாட்டோம். 'செய்கிறோம் செய்கிறோம்' என்று சொல்வோம். அறிஞர்கள் நிபுணர்களைப் பயன் படுத்திக் கொள்ளட்டும். ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டி உதவியாக இருப்போம்! இருப்போம்!" என்று அவருக்குப் பதில் கூறவேண்டும் போலிருந்தது.

'டாண்' என்ற மணி ஓசை கேட்டது. நாங்கள் இறங்கவேண்டிய இடம் என்பதை 'லிப்டி'ன் ஒலி அறிவித்தது. 'லிப்ட்' எனப்படும் நாலு மரச் சுவர்களால் ஒடுக்கப்பட்ட சிறிய அறையிலிருந்து, 32—வது மாடி என்ற வெளிச்சம் மிகுந்த புதிய தளத்தில் காலடி எடுத்து வைத்தோம்!

தமிழ்நாடு எப்போது வெளிச்சத்துக்கு வரும்?

13

சிந்தனைகளை மாற்றுங்கள்!

நம் குழந்தைகளிடம் அடிக்கடி நாம் சொல்லுவது- "மகனே படி! நன்றாகப் படி. படித்தால்தான் நல்ல வேலை கிடைக்கும். படித்தால்தான் நல்ல வேலைக்குப் போகலாம்."

எல்லாப் பெற்றோரும் திரும்பத் திரும்ப இதையே சொல்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு சுவிஸ் நாட்டுக் குடும்பத்தினரை நான் சந்தித்தேன். அவர் வீட்டுக்கு என்னை அழைத்திருந்தார். சென்றேன். மகனை அறிமுகப் படுத்தினார்; மனைவியை அறிமுகப் படுத்தினார். சிறிது நேரம் கழித்து அவர் மகன், "அப்பா, எது நல்ல வேலை?" என்று கேட்டான். அவர் சொன்னார்- "மகனே! மாத சம்பளம் வாங்கிப் பணக்காரன் ஆனவனை நான் பார்த்ததில்லை! நீ உன் எதிர்காலத்தைப் பற்றி எண்ணு. பணம் பண்ணும் நல்ல தொழில் துறைகள் எவை எவை— அதில் எப்படி இறங்கலாம் என்பது பற்றி யோசி."

அவர் தன் மகனுக்குக் கூறிய அறிவுரை என்னை விழிப்படையச் செய்தது.

உங்கள் மகன் வந்து அப்படிக் கேட்டிருந்தால், "மகனே! கம்ப்யூட்டருக்குத்தான் எதிர்காலத்தில் நிறைய தேவை இருக்கும். கம்ப்யூட்டர் படி" என்றோ, அல்லது "என்ஜினியருக்குப் படி, வேலை வாய்ப்பு உண்டு" என்றோ சொல்லி இருப்பீர்கள்.

அந்த சுவிஸ் நாட்டு மனிதர் 'எது நல்ல வேலை' என்ற கேள்வியைப் பார்க்கவில்லை. "ஒரு மனிதன் எதற்கு வேலை தேடுகிறான்? குடும்பத்துடன் சுகமாக வாழ! சுகமாக வாழ வேலை தேடித்தான் பிழைக்க வேண்டுமா? இல்லை. ஆயிரம் வழிகள், பணம் பண்ணும் வழிகள் இருக்கின்றன" என்று அதைப்பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

சுவிட்சர்லாந்து ஒரு சின்ன நாடு. எந்த இயற்கை வளமும் கிடையாது. ஆனாலும், உலகெங்கும் விற்கப் படுவது கடிகாரம் சுவிஸ் கடிகாரம்தான். உலகெங்கும் உள்ள பணக்காரர்கள் தங்கள் பணத்தை இரகசியமாகப் போட்டு வைத்துக் கொள்ளத் தேடும் வங்கி, சுவிஸ் வங்கிதான். உலகின் தலைசிறந்த வங்கி யாளர்கள், சுவிஸ்காரர்கள்தான். அமெரிக்காவுக்கு சமமான பணவளம், ஜப்பானுக்குச் சமமான வாழ்க்கைத் தரம். அப்படி அந்த நாட்டு மக்கள் அனைவரும் வாழ வழி செய்தது எது? கொஞ்சம் யோசியுங்கள்.

அங்கே இருக்கிற மக்கள் நம்மைப் போல் சிந்திப்பதில்லை. நம்மைப் போல் நடந்து கொள்வ தில்லை. துணிவுமிக்கவர்கள். "நமக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம். அதை சிறப்பாக-

யாரையும்விடப் பிரமாதமாகச் செய்ய முடியும்" என்று தங்களைப் பற்றிய நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரேல்

சுவிட்சர்லாந்து மட்டும் இப்படி முன்னேறிவிட வில்லை. இஸ்ரேல் நாட்டைப் பாருங்கள். வெறும் பாலைவனம். தண்ணீர் கிடையாது. எண்ணெய் கிடையாது. கனிவளம் ஏதும் இல்லை. இருந்தும் உலகின் பலநாடுகளுக்கும் தொழில் நுட்பங்களை விற்கும் நாடு இஸ்ரேல். மணலுக்கடியில் தண்ணீர் இறங்கிவிடாமல் இருக்க 'பிளாஸ்டிக்' ஏடுகளைப் போட்டு மேலிருக்கும் மண்ணில் காய்கறி பயிரிடுகிறார்கள். கடல் நீரைக் குடிநீராக்குகிறார்கள். தண்ணீர்த் தொட்டிகளில் பூவும் செடியும் வளர்த்து ஏற்றுமதி செய்கிறார்கள்.

அவர்கள் யூதர்கள். நியூயார்க் நகரில் யூதர்கள் அதிகம். படிக்கும் யூத இளைஞனைப் பார்த்து "நீ என்ன வேலைக்குப் போகப் போகிறாய்?" என்று கேட்டுப் பாருங்கள்! அவன் சொல்வான்- "நாங்கள் யூதர்கள். நாங்கள் யாரிடமும் வேலை செய்ய மாட்டோம்! சொந்தத் தொழில்தான் இறங்குவேன்- அனுபவம் பெற்றபின்" என்பான்.

அந்த மொத்த இனத்தின் எண்ண ஓட்டங்களைக் கவனியுங்கள். ஒரு பயல்கூட, "நான் சினிமா நடிகனாகப் போகிறேன்! நான் ரசிகர் மன்றம் தொடங்கப் போகிறேன்! ரசிகர் மன்றத் தலைவர் ஆகப் போகிறேன்" என்றோ, "சினிமா நட்சத்திரம் ஜில்ஜில் மோகினியின் அகில உலக ரசிகர் மன்றத்

தலைவன், நான்'' என்றோ யாரும் அங்கே சொல்வதில்லை. நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை.

அங்கே அவனவனும் தன்னை நிரூபிக்க-தன்னால் சாதிக்க முடியும் என்று உலகிற்கு தன்னைக் காட்டத் துடிக்கிறான்; அதை நோக்கி உழைக்கிறான். இங்கோ நாம் 'கட்அவுட்'டுகளுக்கு ஆரத்தி எடுக்கும் பேண்ட் போட்ட இளைஞர்களைப் பார்க்கிறோம்.

இந்நாடு எங்கே போகும் என்பதற்கோ, எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கோ-கைப் புண்ணுக்கு கண்ணாடியா வேண்டும்? சோசியரையா கேட்க வேண்டும்?

'மேக்கப்' அழகிகள் !

நம்மால் எதையுமே சாதிக்க முடியும். அவ்வளவு திறமை நம்மிடம் இருக்கும் போது ஏன் நாம் பயப்படுகிறோம்? ஏன் நாம் சினிமா நட்சத்திரங்களின் நிழலில் சார்ந்து நிற்க விரும்புகிறோம்?

உங்கள் அத்தை மகளைவிட-மாமன் மகளைவிட இந்த ஜில்ஜில் மோகினிகள் எந்த விதத்தில் சிறந்தவர்கள்? எல்லாம் 'மேக்கப்'தானே? மேக்கப் இல்லாமல் நீங்கள் அவர்களைப் பார்த்ததுண்டா?

நம் நாட்டு இளைஞர்களுக்கு பயம்; தன்னைப் பற்றிய பயம். தன்னால் முடியுமா என்ற பயம். ஆகவே கற்பனை உலகில்-வேஷ உலகில் வாழ்கிறார்கள்.

பயம் எப்படிப் போகும்?

துணிந்து இறங்கி வேலை செய்தோமானால் பயம் தானே போய்விடும். இறங்காமல், குருட்டு யோசனை பண்ணும் வரை, பயம்தான் நம்மை விரட்டும்.

இரண்டாவது, 'என்னிடம் பணமில்லையே' என்ற அழுகுரல். உலகில் வந்த முதல் மனிதனிடமும் சரி, அமெரிக்காவில் குடியேறிய வெள்ளைக்காரர் களும் சரி, தங்கத்தையும் வெள்ளியையும் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டா இறங்கினார்கள்? இல்லை!

அவர்களிடம் தன்னம்பிக்கை இருந்தது; உழைக்கும் மனம் இருந்தது. உழைத்தார்கள்; பாடுபட்டார்கள்; பணத்தை உண்டு பண்ணினார்கள்.

நீங்களும் முடியுமென்று நம்பினால், மண்ணி லிருந்து கூட பணம் பண்ணலாம்- காளவாய் போட்டு! செங்கல் அறுத்து!

நீங்கள் முழு மனதுடன் இறங்கினீர்களானால் புல்லிலிருந்துகூட காசு பண்ணலாம். அருகம்புல் ஜூஸ் ஒரு கோப்பை இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. காய்ந்த அருகம்புல் பொடி செய்யப்பட்டு பொட்டலமாக விற்பனையாகிறது.

இவையெல்லாம் உதாரணங்கள். உங்களுக்கு மனத்துணிவும், உங்கள் மீது நம்பிக்கையும் இருக்குமானால் பணம் பண்ண பத்து வழிகள் மட்டுமில்லை; பத்தாயிரம் வழிகள் இருக்கின்றன; தென்படும்.

தொழிலில் வருகின்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் ஒவ்வொரு கேள்வியுடனும் சந்தேகத்துடனும் மற்றவர்களை அணுகுபவர்களா? அல்லது நீங்களே முட்டி மோதி விடைகாண முயலும் தன் காலில் நிற்பவர்களா? இதுதான் கேள்வி.

மூன்றாவதாக, நம் இளைஞர்களும் சரி, பெரியவர்களும் சரி, 'ரிஸ்க்' எடுக்கப் பயப்படுகிறார்கள். தங்கள் மீதே நம்பிக்கை இல்லாதவர்கள், இவர்கள்.

நினைவில் கொள்ளுங்கள். யாரோ ஒரு பெண்ணையோ ஆணையோ திருமணம் செய்து கொள்கிறார்கள். "ஒத்து வருவாரா? ஓடுகாலியா? குடிகாரரா? பக்கத்து வீட்டைப் பார்த்து பல்லிளிப்பவரா?" என்றெல்லாம் யோசித்தால், யாரும் திருமணமே செய்துகொள்ள மாட்டார்கள்! அப்படிப் பட்ட வாழ்க்கை விஷயங்களில் எல்லாம் 'ரிஸ்க்' எடுக்கும் நாம், ஏன் பயப்படுகிறோம்? பயப்படத் தேவை இல்லை!

நம்மிடம் உலக ஞானம் இருக்கிறது. எதையும் சரிக்கட்டி சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பின் ஏன் தயக்கம்?

இறங்குங்கள்!

வானம்தான் எல்லை!

14

உள்ளுணர்வும் தொழில் வெற்றியும்

"ஏதோ ஒன்று சொல்லியது. எனவே என் விமானப் பயணத்தை இரத்து செய்துவிட்டேன்" என்கிறார் ஒரு பயணி. விமான நிலையத்திற்கு காரில் பாதி வழி போனவர் காரைத் திருப்பிக் கொண்டு வீட்டுக்குப் போகிறார் அன்றிரவு அந்த விமானம் கீழே விழுந்து நொறுங்கியதாகச் செய்தி வருகிறது.

யார் சொன்னார்கள் இப்படி நடக்குமென்று?

எங்கிருந்து வந்தது இந்தச் செய்தி?

உள்ளுணர்வு !

திடீரென்று ஒரு எண்ணம், ஒரு தீர்வு, ஒரு கண்டுபிடிப்பு மனதில் பளிச்சென்று தோன்றலாம். அல்லது ஒரு எண்ணம் நம் மனதில் நம்மை விடாமல் திரும்பத் திரும்ப ஒரு குறிப்பிட்ட கால அளவில் தோன்றிக் கொண்டிருக்கும். இதுதான் உள்ளுணர்வு.

இவை எல்லாம் எப்படி நேர்கின்றன? அனேகமாக மனிதன் தயார் நிலையில் இருக்கும்போது தான் இப்படிப்பட்ட திடீர் முடிவுகள், திடீர் 'பளிச்' ஞானோதயம் ஏற்படுகிறது.

அதாவது ஒரு விஷயத்தைப் பற்றி மனிதன் மிகவும் அக்கறைப்படுகிறான்; பிரச்சினை தீருவதற்காக எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்கிறான். சிந்திக்கிறான், அதுபற்றிய எல்லாத் தகவல்களும் சேகரிக்கிறான்; அலசுகிறான்; ஆராய்கிறான். பிறகு அதை விட்டு விடுகிறான்- என்ன செய்வதென்று தெரியாமல். அப்படிப்பட்ட நிலையில் நமக்கு ஒரு எண்ணம், ஒரு யோசனை, ஒரு ஞானோதயம் ஏற்படுகிறது.

விஞ்ஞானிகளான நியூட்டனுக்கும், ஐன்ஸ் டைனுக்கும் இப்படித்தான் ஏற்பட்டது.

புத்தருக்கும் இப்படித் தான் வாழ்க்கையைப் பற்றி-ஏன் வயோதிகம், பிணி, மூப்பு? என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்த போது கிடைத்தது.

இப்படி உள்ளுணர்வின் மூலம்தான் பல தொழில் அதிபர்கள் பெரிய நிறுவனங்களை மிகப்பெரும் நிறுவனங்களாக மாற்றி இருக்கின்றனர். மிகச் சிறிய வியாபாரத்திலிருந்து மிகப் பெரிய தொழிலதிபர்களாக மாறி இருக்கிறார்கள்.

இந்த உள்ளுணர்வைப் புரிந்து கொண்டால் நிலைத்து நம் பழக்கத்திற்கு கொண்டு வந்தால் நாம் எடுத்த காரியங்களை உள்ளுணர்வின் சொற்படி கேட்டு வெற்றி பெற முடியும்.

இதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. அபாயமும் இருக்கிறது.

அதைத்தான் இந்த கட்டுரை விளக்கப் போகிறது.

எதிர்பார்ப்பு!

பல விஷயங்களை நாம் அடைய வேண்டுமென ஆசைப்படுகிறோம். பல சமயங்களில் நமது ஆசை ஏக்கமாகவும் எதிர்பார்ப்பாகவும் மாறிவிடுகிறது.

சில சமயம் இப்படி நமது உள்ளுணர்வு இதைச் சொல்கிறதா அல்லது நமது மனதின் ஆசையா என்று நமக்கு வித்தியாசம் புரிவதில்லை. காரணம், இந்த விஷயம் நாம் விரும்புகிறபடி நடக்க வேண்டும் என்கிற தாக்கம். பல சமயம் 'நமது உள்ளுணர்வு சொல்கிறது' என்று எடுத்துக்கொள்ளும்படி ஆகிவிடுகிறது.

சொல்லப் போனால் நம்முடைய ஆசைகளுடன் நாம் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் நமது சிந்தனை அந்த ஆசையால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. உள்ளே இருக்கிற உண்மை தெரிவதில்லை.

உதாரணமாக திருப்பூரில் ஒரு நிறுவனம், மாதம் மூவாயிரம் ரூபாய் கட்டினால் உங்களுக்கு குலுக்கல் முறையில் கிட்டத்தட்ட பாதி விலையில் கார் கிடைக்கும், மோட்டார் சைக்கிள் கிடைக்கும். குளிர்சாதனப் பெட்டி கிடைக்கும் என்று விளம்பரம் செய்தார்கள். காரணம் சொன்னார்கள் தாங்கள் ஏராளமாக கார்களையும் குளிர்சாதனப் பெட்டிகளையும் மொத்தமாக வாங்குவதால் பாதி விலைக்குப் பெறுவதாக முதலில் இரண்டு மூன்று பெரிய மனிதர்களுக்கும் அதிகாரிகளுக்கும் காவல் துறையினருக்கும் இப்படிப் பரிசுகள் வழங்கினார்கள்.

ஒரு சாதாரண மனிதன் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டும் என ஆசைப்படுகிறான்.

திடீரென்று பாதி விலையில் சில சமயம் இரண்டு மூன்று மாதங்களில் மோட்டார் சைக்கிள் கிடைக்கும் என்ற விளம்பரத்தைப் பார்த்து, "கடவுளே எனக்காக இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறார்!" என்று நம்புகிறான்.

இதைக் கடவுள் செய்யவில்லை. இரண்டு திருடர்கள் ஊரைக் கொள்ளையடிக்க இந்த திட்டம் போட்டனர். ஒரு நான்கு மாதத்தில் கோடிக்கணக்கில் பணம் சேர்ந்தபிறகு ஆட்கள் காணாமல் போய்விட்டார்கள்!

அதாவது உள்ளுணர்வு என்று நம்பி நம் எதிர் பார்ப்பைப் பூர்த்தி செய்து கொள்ளும்போது பணக்காரன் தன் பணத்தைப் பறிகொடுக்கிறான். இதுதான் பாடம்.

இந்த உலகில் திடீர் இட்லி, திடீர் புளியோதரை செய்து விடலாம். ஆனால் திடீர் பணக்காரனாவது நிலையல்ல; ஆளைக் கவிழ்த்துவிடும்.

பங்குச் சந்தை!

ஸ்டாக் மார்க்கெட்டில் லிவர்மூர் என்பவர் தொட்டதெல்லாம் பொன்னாயிற்று. ஒரு நிறுவனத்தின் பங்கை குறைந்த விலை விற்கும் போது வாங்குவார். அவர் வாங்கியபின் அந்த நிறுவனத்திற்கு பெரிய வெளிநாட்டு ஆர்டர் கிடைக்கும். உடனே வாங்கிய பங்குகளின் விலை எக்கச்சக்கமாக உயரும். இதனால் இவர் பெரும் பணக்காரர் ஆனார்.

இப்படி இரண்டு மூன்று ஆண்டுகள் பங்குச் சந்தை எனப்படும் 'பங்கு வியாபாரம்' செய்து பணக்காரர் ஆனார்.

அவருடைய நண்பர்கள் எல்லோரும் சொன்னார்கள். "அவர் அதிருஷ்டசாலி" என்று. "நாளை என்ன நடக்கும்?" என்று துல்லியமாக எதையும் கணிக்கும் ஒரு அசாதாரணத் திறமை அவரிடம் இருப்பதாகப் புகழ்ந்தார்கள்.

நாளாக ஆக அவரும் இதை உண்மை என்று நம்பினார். தன்னிடம் இந்த அசாதாரணத் திறமை இருப்பதாக எண்ணத் தொடங்கினார்.

முடிவில் ஒரு நாள் இரண்டு மாத்திரைகளைப் போட்டுக்கொண்டு சுட்டுக் கொண்டு செத்தார். அவர் இறந்தபோது அவருக்கு ஏகப்பட்ட கடன்கள், அளவிட முடியாத பிரச்சினைகள் இருந்தன.

அதிருஷ்டசாலி!

அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடிக்கும் இதுதான் ஏற்பட்டது. அமெரிக்க ஜனாதிபதியாக ஒரு கத்தோலிக்கர் அதுவரை அமெரிக்காவில் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஜான் கென்னடி இப்படி வெற்றி பெற்றதும் எல்லா பத்திரிகைகளும் எழுதின அவர் அதிருஷ்டசாலி என.

அவருக்கு அழகான மனைவி. புத்திசாலியான குழந்தைகள். பணக்காரரான அப்பா. எந்தப் பதவிக்கு நின்றாலும், சட்டசபை பாராளுமன்றம் ஜனாதிபதி என்று எல்லாவற்றிலும் தொடர்ந்து வெற்றி பெற்றவர்.

தோல்வியே காணாதவர். “அவர் எதைத் தொட்டாலும் பொன்னாகும்” என்று பத்திரிகைகள் பத்தி பத்தியாக அவரைப்பற்றி எழுதின.

ஆர்ப்பாட்டம் !

அதன் விளைவு அவரும் அதை உண்மை என நம்பினார். அண்டை நாடான சிறிய தீவான கியூபாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைப் பிடித்தபோது கியூபா மக்கள் அந்த ஆட்சிக்கு எதிராக கொஞ்ச நாளில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அமெரிக்க அரசாங்கம் கியூபா மீது படை எடுக்கத் தீர்மானித்தது. “எதை எடுத்தாலும் வெற்றிபெறும்” என்ற எண்ணத்தில் அமெரிக்கப் படையை அனுப்பினார். அமெரிக்கப் படை பாரசூட்டிலிருந்து ஒரு சதுப்பு நிலத்தில் இறங்கி மாட்டிக் கொண்டது. கென்னடிக்குப் பெரிய தோல்வி.

உள்ளுணர்வு என்பது உண்மை. அதை உபயோகிக்க முடியும். ஆசையும் இறுமாப்பும் நம் கண்களை மறைத்து விடும்போது உள்ளுணர்வு வெளிப்படுவதில்லை. உள்ளுணர்வைத் தவறாக புரிந்து கொள்ளுகிறோம்.

ஆசையும் இறுமாப்பும் மட்டுமல்ல தொழிலில் ஒரு மனிதனைக் குழிபறிப்பது. நியாயமற்ற முறையில் திடீர்ப்பணக்காரனாக வேண்டும் என்ற எண்ணமும் தான்!

15

வெற்றிக்கான விதைகள்

வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பு; அது உன்னதத்தை நோக்கிய ஒரு பயணம் என்பதை நாம் எப்போதும் நினைவில்கொள்ள வேண்டும்.

தொழிலில் வெற்றி பெறுபவர்கள் முதலில் பணக்காரர்கள் ஆகிறார்கள். பணம்தான் அவர்களது குறி. ஆனால், அதை முன்நிறுத்தாமல் பணத்தைக் கொண்டுவரும் பல தொழில்களில் நாட்டம் செலுத்துகிறார்கள்.

'எப்படி இவர்கள் தொழிலதிபர்கள் ஆனார்கள்? என்னால் ஆகமுடியுமா?' என நீங்கள் கேட்கலாம்.

முடியும். நிச்சயமாக முடியும்!

தொழிலில் வெற்றி பெற்றவர்கள் பல்வேறு காரணங்களால் முன்னேறி இருக்கிறார்கள். டாம் பீட்டர்சு என்ற ஒரு விளம்பர நிறுவனத்தின் நிர்வாகி "தொழிலில் உன்னதத்தைத் தேடி" என்ற ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதி இருக்கிறார். அவர் சொல்வதை நாமும் பின்பற்றலாம். வெற்றி காணலாம். என்ன சொல்கிறார், அவர்?

"அடிப்படை விஷயங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்."

திருந்தச் செய்

"செய்வன திருந்தச் செய்" என்ற பழமொழி நமக்குத் தெரியும். ஆனால், அது எப்படி வாழ்விற்குப் பயன் படும் என்பதை நாம் உணர்வதில்லை. "ஏதோ ஒரு பழமொழி" என்று அலட்சியமாக, மேம்போக்காக எடுத்துக் கொள்கிறோம். ஆனால், உண்மையில் அது தான் பெரிய அடிப்படை.

செய்கின்ற வேலையில் உன்னதத்தைத் தேடுவீர்களானால் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உங்கள் முத்திரையைப் பதியுங்கள். இது 'ஜெர்மன் மேக்' என்கிறோம். உறுதியுடன் இருக்கும். உழைக்கும் என்ற நம்பிக்கை இன்றும் நமக்கு இருக்கிறது. டி.வி.எஸ். நல்லி என்ற பெயர் அப்படிப் பட்டதுதான். அதைப்போல உங்களது பெருமையைப் பிறர் உணரவேண்டுமானால், நீங்கள் உற்பத்தி செய்யும் பொருளில் நீங்கள் காட்டும் திறமையை, முழு ஈடுபாட்டை, நீங்கள் அதில் கொண்டுவரும் புதுமையை, அழகைப் பொருத்திருக்கிறது என்று விளக்கலாம். அப்படிச் செய்து முன்னேறியவர்கள் நான்கு பேரின் சாதனைகளை சுவைபடச் சொன்னேனானால், நீங்கள் அசந்து போவீர்கள். அதிக ஆர்வம் காட்டுவீர்கள். இப்படி உங்கள் ஆர்வத்தைக் கிளப்பிய மூலகாரணம் எது?

"செய்வன திருந்தச் செய்" என்ற வாசகம்தான், அது.

டாம் பீட்டர்சு சொல்வதைக் கேட்போம்-

"தொழில் வெற்றிக்கான காரணங்கள் சாதாரணமானவை. எளிமையானவை. **நாம் அதன் முக்கியத்துவத்தை உணர்வதில்லை. நாம் அடிப்படையை விட்டு விட்டு எங்கெங்கோ தேடிக்கொண்டிருக்கிறோம்."**

எட்டு வழிகள்

வெற்றிக்கான எட்டு வழிகளை அவர் குறிப்பிடு கிறார். இந்த எட்டு வழிகளை மட்டும் கூறியிருந்தால் "உபதேசிக்கிறார். இப்படிச் சொல்வது சுலபம். இதை வைத்துக் கொண்டு எப்படி முன்னேற முடியும்?" என்று கேட்பார்கள். எனவே, டாம் பீட்டர்சு மிகவும் வெற்றி பெற்ற இன்றைய நிறுவனங்களை எடுத்துக் கொண்டு அவற்றை உதாரணம் காட்டி, "அவர்களது வெற்றிக்கான அடிப்படை மிகவும் சாதாரண விஷயங்களில் இருக்கிறது. எனவே, அந்த சாதாரண விஷயங்களில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் வெற்றி பெறலாம். இதுதான் சுலபமான வழி" என்று கூறாமல் கூறுகிறார்.

அந்த எட்டு வழிப்பாதை.

(1) தீர்மானித்துவிட்டீர்கள் அல்லவா? உடனே செயலில் இறங்குங்கள். இன்னும் எவ்வளவு நாளைக்கு ஆராய்ச்சி, சர்வே, யோசனை, பிறரது ஆலோசனைகளைக் கேட்டல், திட்டமிடுதல் என்று நாட்களை வீணாக்கப் போகிறீர்கள்? இறங்கு மகனே இறங்கு! செயலில் இறங்கு! இறங்கிப் பார். இறங்கிப்

பார்த்தால் எல்லாம் புரியும். தன்னம்பிக்கை மேவும். நீ வெற்றிமேல் வெற்றி பெறுவாய்.

(2) இதோ பார்! யார் உன் பொருட்களை வாங்குபவர்கள்? அவர்களைத் தெரிந்துகொள். அவர்கள் என்ன காரணத்திற்காக உன் பொருளை வாங்குகிறார்கள். என்பதைத் தெரிந்துகொள். உன் பொருளிலிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை, பேச்சுக் கொடுத்தால் சொல்வார்கள். கவனி. எப்போதும் அவர்களுக்கு அருகில் இரு.

(3) நீயாகச் செய். சுதந்திரமாக நில். யாரையும் எதிர்பார்க்காதே. யாரையும் சார்ந்து நிற்காதே. சவால் களைச் சமாளி. தப்பிக்கப் பார்க்காதே, கஷ்ட நஷ்டங்களை சமாளி. உடன் வேலை செய்பவர்களை உற்சாகப் படுத்து. அவர்களுக்குச் சுதந்திரம் கொடு. தனது நிறுவனம் போல அவர்கள் எண்ணி செயல்படும் சூழ்நிலையை உருவாக்கு. போட்டியாளர் களைக் கவனி. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஒரு கண் இருக்கட்டும்.

(4) தொழிலாளர்கள் எவ்வளவு சிறப்பாகச் செய்கிறார்களோ, எவ்வளவு பொறுப்புணர்வுடன் செய்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு உன் தொழில் உற்பத்தி பெருகும். அவர்கள் குடும்பம் மகிழ்ச்சியாக இருந்தால் இங்கே நிறுவனத்தில், தொழிற் சாலையில் மனநிறைவுடன் வேலை செய்வார்கள். எனவே, அவர்கள் மகிழ்வில், மன நிறைவில் கவனம் செலுத்து; அக்கறை எடுத்துக்கொள். வருமானத்தில்

ஒரு பகுதியை மகிழ்வுடன் அவர்களுடன் பகிர்ந்து கொள். அவர்களை அடிக்கடி ஊக்கப்படுத்து.

(5) வேலை நடக்கும் இடத்துக்குப் போய்ப் பார்! அவர்களுடன் பேசு. கவனி. தவறாகச் செய்தால் நீ செய்து காட்டு. அவர்கள் தூக்க முயன்றால் நீ கை கொடு! இதனால் உன் பெருமை தாழ்ந்து போய்விடாது.

(6) பலர் தோற்பதற்குக் காரணம். தங்களின் முக்கியமான தொழிலிலிருந்து பல்வேறு சிறுதொழில் களைத் தொடங்கி, கவனத்தைச் சிதற விட்டுவிடுவார்கள். நீ அப்படிச் செய்யாதே. உன் சிந்தனை கவனம் எல்லாம் எது உன் அடிப்படைத் தொழில் என்பதில் இருக்க வேண்டும். எங்கிருந்து உன் வருமானம், ஆதாயம், பெருமை எல்லாம் வருகிற தென்கிற அடிப்படையை நன்றாகத் தெரிந்துகொள்.

(7) அமைப்பு சிறிதாக, தெளிவாக இருக்கட்டும். வேலை செய்பவர்களை தேவைக்குமேல் போடாதே. வேலை நடக்காது.

(8) வேலை செய்பவர்களிடம் கெடுபிடியாகவும் இருக்கக்கூடாது. அவர்களைச் சுதந்திரமாகவும் விட்டுவிட முடியாது. வேலை செய்பவர்களது தனித் திறமை வெளிவரும்படி சுதந்திரம் கொடு. தாங்கள் சொல்கிற "யோசனையை செயல் படுத்தி வெற்றியைக் காட்ட முடியும்" என்று சொல்வார்களானால், அதற்கு வாய்ப்பு கொடு. இப்படி தொழிலாளர்களை ஊக்கப் படுத்தித்தான் பல நிறுவனங்கள் பல புதிய பொருட்களைக் கொண்டு வந்திருக்கின்றன. இந்த சில

யோசனைகளில் உங்களுக்குத் தேவையானதை நீங்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்பப் பயன்படுத்துங்கள். சொந்த வாழ்விலும் பயன் படுத்தலாம். வெற்றி நிச்சயம்.

16

திறமைசாலிகளுடன் இணைந்து செயல்படுங்கள்!

"ஒரு மூளையைவிட இரண்டு மூளைகள் அதிக பலன் தரும்" என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதாவது "சமயம் நேரும் போது பிறரிடம் யோசனை கேள். விஷயம் தெரிந்தவர்களிடம் தொடர்புகொள். எல்லாமே உனக்குத் தெரிந்திருக்கிறது. யாரையும் கேட்க வேண்டியதில்லை' என்று அலட்சியமாகவோ ஆணவத்துடனோ செயல் படாதே" என்று கூறுகிறார்கள்.

தாழ்வு மனப்பான்மை!

பிறரை யோசனை கேட்க, நாம் பலசமயம் கூச்சப்படுகிறோம். "நம்மை ஒன்றும் தெரியாதவன்" என்று நினைத்துவிடுவார்களோ என்று பயமும் சந்தேகமும் நம்மிடம் தாழ்வு மனப் பான்மையை ஏற்படுத்துகிறது.

ஒருசமயம் நானும் என் நண்பரும் ரெயிலில் பங்களூருக்குப் பயணம் செய்துகொண்டிருந்தோம். நாங்கள் அப்போது கல்லூரி மாணவர்கள்.

காட்பாடியில் ரெயில் மாறவேண்டும். சென்னையிலிருந்து சென்ற வண்டியிலிருந்து இறங்கி பங்களூர் வண்டியில் ஏற வேண்டும். ஏறி உட்கார்ந்தோம். எனக்குச் சந்தேகமாய் இருந்தது.

“இது பங்களூர் வண்டிதானா?” என்பது பற்றி என் நண்பனைக் கேட்டேன். “பேசாமலிரு. பட்டிக்காட்டான் போல நடந்து கொள்ளாதே. இது பங்களூர் போகிற வண்டிதான்” என்றான் அவன். இருந்தாலும் எனக்கு என் சந்தேகத்தை அடக்க முடிய வில்லை. ஒரு ஐந்து நிமிடம் கழித்து பக்கத்தில் இருப்பவரிடம் “இது பங்களூர் போகிற வண்டிதானே என்று கேட்டேன். அவர், பதறிக் கொண்டே சொன்னார்–“தம்பி! பங்களூர் போகிற வண்டி அந்த வண்டி. விசில் ஊதி விட்டான். ஓடிப்போய் ஏறு!” என்றார். பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடினோம். ஏறினோம்.

ஏறி அமர்ந்தவுடன் என் நண்பனை நான் முறைத்துப் பார்த்தேன். அவ்வளவுதான்!

அதுவும் தொழில் செய்யப் போகிறீர்கள்– நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தைப் போட்டு. போனால் திரும்பி வராது; நட்டம் ஏற்பட்டால் என்ன ஆகும்? எனவே நாம் சர்வ எச்சரிக்கையுடன் தொழிலில் இறங்க வேண்டும். இதில் வெற்றி பெற, ஒரு முக்கியமான அம்சம் இருக்கிறது.

கூட்டு ஆலோசனை

அதுதான் “கூட்டு ஆலோசனை.” அப்படிப் பட்ட ஒரு கூட்டு ஆலோசனைக் குழு நம்முடைய

நிறுவனத்திலோ அல்லது வெளியிலோ, நமக்கு உதவத் தயாராக இருக்க வேண்டும். இந்தக் கூட்டு ஆலோசனை நிபுணர்கள், அனுபவசாலிகள். நமக்கு தங்கள் அனுபவத்தைக் கூறி சரியான பாதையில் நடக்க வழிகாட்டுவார்கள்.

ஒரு மண்டபத்தில் நடக்கும் பாட்டுக் கச்சேரியையும் பார்க்கிறோம்; ஒரு தனி நபர் தன் வீட்டில் நமக்காகப் பாடி மகிழ்விப்பதையும் பார்க்கிறோம். பாட்டுக் கச்சேரியில் வயலின், மிருதங்கம், தம்புரா, தாளம், பாடுபவர் என்று அனைவரும் இசைந்து, இணைந்து பாட்டுக்கச்சேரி களை கட்டுகிறது; தனி நபர் பாட்டில் அந்த பிரமிப்பு இல்லை.

அதே போல வயலின் வாசிக்கத் தெரியாதவரோ அல்லது மிருதங்கம் சரியாக வாசிக்க முடியாதவரோ, தாளம் தவறாகப் போடுபவரோ இருந்தால் கச்சேரி வீணாகப் போய்விடும். அதே கதைதான் ஒரு தொழிலுக்கும். உற்பத்தி, விற்பனை, இலாப நட்டக் கணக்கு, நிர்வாகம் எல்லாம் இணைந்து இயங்க வேண்டும். எது தோற்றாலும் சங்கடத்தில், நட்டத்தில், கொண்டுவிடும்.

நல்ல நிர்வாகம்!

சட்டைத்துணி ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திற்கு நிறைய ஆர்டர் இருந்தது. நல்ல விற்பனையாளர்கள் இருந்தார்கள். நல்ல நிர்வாகம் இருந்தது. ஆனாலும் உற்பத்தி சரியில்லாததால் சரியான காலத்தில், கெடுப்படி அவர்களால் பொருளை அனுப்ப

முடியவில்லை. கடைசி நிமிடத்தில் பொருளை விமான மூலம் ஏற்றுமதி செய்யவேண்டி இருந்ததால் வரக்கூடிய இலாபம், ஒரு முப்பது இலட்சம் குறைந்து போயிற்று.

நமது ஆலோசனைக் குழுவில் நம்முடன் இருக்கப் போகும் வேலை செய்பவர்களை நாம் எப்படித் தேர்ந் தெடுக்க வேண்டும்?

இரண்டு முக்கிய அம்சங்கள்.

முதலில் உற்பத்தி மேலாளர், அல்லது விற்பனையாளர் என்றால் அவருக்கு அந்த துறையில் நல்ல அறிவும் அனுபவமும் திறமையும் இருக்கிறதா, சாதிப்பாரா என்று பார்க்க வேண்டும்.

இரண்டாவது "எல்லோருடனும் சுமுகமாகப் பழகுவாரா? நிறுவனத்தின் இலாப நட்டங்களைத் தன்னுடையது போல் பார்த்து எல்லோருடனும் இணைந்து இலட்சியத்தை நிறைவேற்றப் பாடுபடுவரா?" என்பதுதான் அது.

இந்த இணைந்து செயல்படும் குணம்தான் மிக முக்கியமானதாக அமெரிக்காவில் கருதப்படுகிறது. ஒரு இளைஞரையோ ஒரு பெண்ணையோ வேலைக்கு அமர்த்த தீர்மானித்தால் பேட்டிக்கு வருபவர்களிடம் அவர்களது பாட சம்பந்தமான கேள்விகளை-நமது ஊரில் கேட்பது போல்- அங்கே கேட்பதில்லை. படிப்பு பெற்றிருக்கிறார் என்பதற்கான சான்றிதழுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள்.

கூட்டாக உழைத்தல்!

அவர்கள் பார்ப்பதெல்லாம் இவருடைய அனுபவம்- அதைவிட மேலாக இவர் எல்லோருடனும் அனுசரித்து, மரியாதை காட்டி, இணைந்து பழகி, காரியங்களைச் சாதிப்பாரா என்பதுதான். இதை கூட்டாக உழைத்தல் என்பார்கள். இந்த குணம் தான் முக்கியம். இதைக் கருதி இப்போதெல்லாம் பல நிறுவனங்களில் முதல் மதிப்பெண் பெற்றவர்களைக் கூட அதிகமாக வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை. இது நமக்கு வியப்பைத் தரும். ஆனால் அதற்கு காரணம் இருக்கிறது.

"முதலிடம் பெற்ற மாணவ - மாணவிகள் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்துவதால் பலசமயம் அவர்களால் சகஜமாக எல்லோருடனும் பழக முடிவதில்லை. எனவே தனித்து நிற்கிறார்கள். இதனால் உற்பத்தியும் வேலையும் பாதிக்கப்படுகிறது என்பதுதான் காரணம். தொழில் நிர்வாகத்தில் அனுசரித்துப் போகும் மனித உறவுகளுக்கு நாம் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அது கணவன் மனைவியானாலும் சரி, பெற்றோர் குழந்தை களானாலும் சரி, அல்லது முதலாளி தொழிலாளி யானாலும் சரி.

தொழில் தொடங்குபவர் தானும் மனித உறவுகளை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். மற்றவர்களும் அப்படிப்பட்டவர்களாக இருந்தால் தான் தொழில் சிறப்படையும்.

ஒரு சிறிய தொழிலை கணவன் மனைவியுமாகத் தொடங்குபவர்கள் அல்லது இரண்டு நண்பர்கள் சேர்ந்து தொழிலை ஆரம்பிப்பவர்கள், இப்படிப்பட்ட நல்ல திறமைபெற்ற நிபுணர்களை அல்லது அனுபவசாலிகளை பல சமயம் வேலைக்கு வைத்துக் கொள்ள கட்டுபடியாகாது.

அந்தச் சமயங்களில் தொழிலதிபர்கள் நிறைந்த சமூகசேவை சங்கங்களில் அங்கத்தினராவது நல்லது. அங்கு தொழிலில் அனுபவம் பெற்றவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். அவர்கள் உதவுவார்கள்.

வழக்கமாக பல நிறுவனங்களின் கணக்கு வழக்குகளைப் பார்க்கும் "ஆடிட்டர்" எனப்படும் வரவு செலவுகளைப் பரிசீலிக்கும் மனிதர் பெரிதும் உதவியாக இருப்பார்.

வரவு செலவு பட்டியல்!

ஒரு முக்கிய விஷயத்தை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தொழில் என்பது பணத்தைப் போட்டு பணத்தை எடுப்பது என்கிற விஷயம். ஆகவே வரவு என்ன, கச்சாப் பொருளின் விலை என்ன? நிர்வாக செலவுகள் என்ன? விற்பனை என்ன? இலாபம் எவ்வளவு? என்கிற வரவு செலவு கணக்கில், முடிவில் லாபம் வருகிறதா, நட்டம் வருகிறதா என்பதையும், எங்கெங்கே அநாவசிய செலவுகள், அதிக செலவுகள் ஏற்படுகின்றன என்பதையும் புரிந்து கொள்ளும் திறமை அவசியம் தொழில்முனைவோருக்குத் தேவை. வரவு செலவு

பட்டியல் என்பார்கள். எல்லாமே இதில்தான் அடங்கி இருக்கிறது.

கச்சாப்பொருளை வாங்க, நிர்வாக செலவுகளை ஈடுகட்ட பணம் விற்பனையிலிருந்து வந்துகொண்டே இருக்க வேண்டும். இதைத் தான் பணஓட்டம் என்றும் "இலாப நிலையில் கையிருப்பு" என்றும் சொல்வார் கள். அந்தப் பண ஓட்டம் இல்லாதபோது வங்கியிட மிருந்தோ மற்றவர்களிடமிருந்தோ செலவுகளுக்குக் கடன் வாங்க நேரிடும். இது நல்லதல்ல.

தொழில் முனைவோர், நல்ல அனுபவம் பெற்ற நண்பர்களையோ அல்லது ஆடிட்டர், வங்கி நிர்வாகி போன்ற தொழில் துறையில் நிதி நிர்வாக அனுபவம் பெற்றவர்களையோ துணையாகப் பெற்றிருத்தல் அவசியம். அவர்கள் ஆலோசனைக்கு ஒரு பகுதி நேர சம்பளம் கொடுத்து விடலாம்.

இப்படி இணைந்து செயல்படும் குழு நம் தொழிலுக்கு என்ன செய்கிறார்கள்?

ஆலோசகர்கள்!

நிதி நிர்வாகம், மட்டுமல்ல இதில் நாம் பெறுவது. ஆலோசகர்கள் புதிய புதிய தொழில் வாய்ப்புக்களைப் பற்றிக் கருத்து தெரிவிப்பார்கள்.

இந்தக் குழு ஒரு பரஸ்பர கூட்டு முயற்சி; கூட்டு அக்கறை. தொழிலுக்கு ஒரு முழுமை கொடுக்கிறது. பிரச்சினை முக்கியத்துவம் பெறுகிறது. அதைத் தீர்ப்பதற்கான வழிகளில் பல்வேறு நபர்களுடைய அனுபவமும் உதவுகிறது. தொழில் முனைவோர்

இதன்மூலம் நம்பிக்கை பெறுகிறார்கள். துணிவு பெறுகிறார்கள்.

சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும் மனோபாவமும் கொண்ட தொழில் கூட்டணி அதாவது நமது நிறுவனத்தின் காசாளர். விற்பனை நிர்வாகி, உற்பத்தி மேற்பார்வையாளர். தலைமை நிர்வாகி என்ற அனைவரும் பல நிறுவனங்களில் சிறந்த கூட்டணியாக செயல்படுகின்றனர். அப்படிப் பொறுக்கி எடுத்து அவர்களை வளர்த்து பல நிறுவனங்கள் பலன் பெறுகின்றன.

திறமைசாலிகளை இணைத்து கூட்டணி அமையுங்கள். வெற்றி உங்களுக்கே!

17

டாட்டா ஆகுங்கள்! பிர்லா ஆகுங்கள்!!

ஒரு பள்ளிக்கூடத்தில் பேச என்னை அழைத்திருந்தார்கள். நானும் மகிழ்ச்சியுடன் போயிருந்தேன். என் கருத்துக்கள் பிள்ளைகளுக்குப் போய்ச் சேருவதில் எனக்குப் பெருத்த மகிழ்ச்சி. எதிர்காலம் அவர்களின் கையில்தானே இருக்கிறது?

விழாவுக்கு நிறையப் பெற்றோர்களும் வந்திருந்தார்கள். பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளும் நடந்தன. சில பிள்ளைகள் நடனமும் ஆடினார்கள். அத்தனையும் சினிமாப் பாட்டுகள்! பிஞ்சு உள்ளங்களில் இப்பொழுதே சினிமா நஞ்சு புகுந்து விட்டதே என்று வருத்தப்பட்டேன். பள்ளிக் கூடங்களில் பிள்ளைகளைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்துகிறார்கள். தேவாரம் திருவாசகம், திருப்பாவை திருவெம்பாவை, பாரதியார் பாரதிதாசன் பாடல்களைப் பயன்படுத்தலாமே. தமிழில் சிறந்த கீர்த்தனைப் பாடல்களும் இருக்கின்றன. இளம் வயதிலேயே அவர்களுக்கு சினிமாச் சுவையை ஊட்டினால், நாளை ரசிகர்

மன்றங்கள் அமைக்கவும், ரசிகர்களுக்கு 'பேனர்' கட்டவுந்தான் பிள்ளைகள் தயார் ஆவார்கள்! பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களும், கலைநிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஆசிரியர் ஆசிரியைகளும் இதைக் கவனத்தில் கொள்ளுவது நல்லது.

டாக்டர் ஆகுங்கள்! என்ஜினீயர் ஆகுங்கள்!!

கலை நிகழ்ச்சிகள் முடிந்ததும். நான் பேச வேண்டும்.

எனக்கு முன்பே சிலபேர் பேசினார்கள். எல்லாருமே சொல்லி வைத்தது போல பிள்ளைகள் காந்தி ஆக வேண்டும்; நேரு ஆக வேண்டும்; பெரிய டாக்டர் ஆகவேண்டும்; என்ஜினீயர் ஆகவேண்டும்' இந்திரா காந்தி ஆகவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், யாருமேஅரசியல்வாதி ஆகவேண்டும் என்று கூறவில்லை! அரசியல்வாதிகளுக்கு நமது நாட்டில் உள்ள மரியாதையை எல்லாரும் தெரிந்தே வைத்திருக்கிறார்கள். அரசியல் ஒரு காலத்தில் ஒரு சமூதாயப் பணியாக இருந்தது. இன்றோ சம்பாதிக்கும் வழியாக ஆகிவிட்டது. முதலீடு இல்லாத தொழில். ஆனால். கோடி கோடியாக வருமானம்!

"இன்னும் பல எம்.எஸ். உதயமூர்த்திகள் தோன்ற வேண்டும்" என்றுகூட ஒருவர் கூறினார். அதைக் கேட்டுப் பெற்றோரும் பிள்ளைகளும் கை தட்டினார்கள். எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தாலும் சிரித்துக் கொண்டேன்!

இன்றையத் தேவை

கடைசியாக நான் பேசுவதற்கு எழுந்தேன்.

தங்கள் பிள்ளைகள் படித்துப் பெரிய டாக்டர் ஆகவேண்டும். என்ஜினீயர் ஆகவேண்டும். கலெக்டர் ஆகவேண்டும் என்ற ஆசை பெற்றோருக்குக் கூடாது என்று நான் சொன்னேன். அதைக் கேட்டு அனைவருமே திகைத்துப் போனார்கள்.

டாக்டருக்குப் படித்து விட்டு பலபேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். என்ஜினீயருக்குப் படித்து விட்டுப் பலபேர் வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். கலெக்டர் ஆகிவிட்ட பலபேர் அந்த வேலையை விட்டுவிட்டு சொந்தத் தொழில் தொடங்கப் போய்விட்டார்கள். இதையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன். எல்லாரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இன்றைக்கு நமக்குத் தேவை கலெக்டர்கள் அல்ல; என்ஜினீயர்கள் அல்ல; டாக்டர்கள் அல்ல; டாட்டாக்கள் வேண்டும்! பிர்லாக்கள் வேண்டும்! பஜாஜ்கள் வேண்டும்! அண்ணாமலைச் செட்டியார் வேண்டும்! ஏ.சி. முத்தையா வேண்டும்!

நாட்டைத் தொழில் மயம் ஆக்குகிறவர்கள்தான் இன்று வேண்டும். எனவே, உங்கள் பிள்ளை ஒரு டாட்டா ஆக வேண்டும் என்று ஆசைப்படுங்கள்! ஒரு பிர்லா ஆக வேண்டும் என்று ஆசைப்படுங்கள்! ஒரு ஏ.சி. முத்தையா ஆகவேண்டும் என்று ஆசைப்படுங்கள்! ‘நம் பிள்ளை ஒரு பெரிய

தொழிலதிபர் ஆக வேண்டும்! கோடி கோடியாகச் சம்பாதிக்க வேண்டும்" என்று ஆசைப்படுங்கள்.

ஆசை வேண்டும்!

பிள்ளைகளுக்கும் இப்பொழுதே அந்த ஆசையை ஊட்டுங்கள் 'பணம் சம்பாதிக்க வேண்டும். பணக்காரன் ஆகவேண்டும்' என்ற ஆசை இப்பொழுதே பிள்ளைகளிடம் ஏற்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் இதைப் பிள்ளைகளிடம் பெற்றோர் சொல்லவேண்டும்.

'ஒருவருக்குச் சொந்த வீடு இருக்கிறது. காரிலே போகிறார், வருகிறார் தாராளமாக செலவு செய்கிறார். எப்படி? அவர் தொழில் செய்கிறார். பணம் சம்பாதிக்கிறார். மதிப்பாக வாழ முடிகிறது' என்று பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்.

காரிலே போகிறவனைப் பார்த்துப் பொறாமைப் படக்கூடாது. பொறாமை நம்மை உயர்த்தவே உயர்த்தாது. தாழ்ந்துதான் போவோம். 'அவர் எப்படிக் காரிலே போகிறார்? அவருக்கு எப்படிப் பணம் கிடைத்தது?' என்று யோசிக்க வேண்டும். அவரைப் போல நாமும் சொந்தத் தொழில் தொடங்கி, காரில் போகவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.

ஆசைப்படுங்கள்! சொந்தக் காலில் நிற்க இதுதான் முதல் தேவை. 'நான் சொந்தத் தொழில் செய்ய வேண்டும்' என்று ஆசைப்படுங்கள்! 'நான் பணம் சம்பாதிக்க வேண்டும்' என்று ஆசைப்படுங்கள்! அந்த ஆசை நிச்சயம் உங்களை உயர்த்தும்!

தாழ்த்திக் கொள்ளாதீர்கள்!

'உம்... அவரைப் போல ஆக நம்மால் முடியுமா?' என்று உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளாதீர்கள். நீங்கள் கோழையாகிப் போவீர்கள். வாழ்க்கையில் முன்னேற முடியும். 'நம்மால் முடியும்' என்று நம்புங்கள். முயற்சி செய்யுங்கள். கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். நாலைந்து ஆண்டு கழித்துப் பாருங்கள்- நீங்களும் காரில் போய்க் கொண்டிருப்பீர்கள்!

'அதற்கெல்லாம் அதிருஷ்டம் வேண்டும்' என்றும் நினைக்காதீர்கள். இதுவும் ஒரு தாழ்வு மனப்பான்மையே. இதுவும் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடியதே. ஒருவரது உழைப்பை 'அதிருஷ்டம்' என்று குறைத்து மதிப்பிடாதீர்கள். அவர் காரிலே போவதற்கு எவ்வளவு கஷ்டமாக உழைத்தார்- இரவு பகலாக எப்படியெல்லாம் பாடுபட்டார் என்பது உங்களுக்குத் தெரியாது.

வெறும் அதிருஷ்டத்தால் யாரும் முன்னேறி விட முடியாது! அந்த முன்னேற்றம் நிலையானதும் அல்ல! எத்தனையோ லாட்டரி இலட்சாதிபதிகள் இன்று பிட்சாதிபதிகளாக இருப்பதைப் பார்க்கிறோம். உண்மையான உழைப்புதான் உறுதியான உயர்வைத் தரும். சறுக்கல் ஏற்பட்டால் கூட, உழைப்பால் அதை சரிசெய்துகொள்ள முடியும். உங்களை நம்புங்கள்! உங்கள் கைகளை நம்புங்கள்! உங்கள் உழைப்பை நம்புங்கள்! சொந்தக் காலில் நிற்க இது மிகவும் முக்கியம்.

ஆண்டவன் படைப்பு!

'ஆண்டவன் அவரை அப்படிப் படைத்து விட்டான். என்னை இப்படிப் படைத்து விட்டான்' என்று பெருமூச்சு விடாதீர்கள். இதுவும் உங்களிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்படுத்தும். தாழ்வு மனப் பான்மை உள்ளவர்கள் தாழ்ந்தே போவார்கள்.

ஆண்டவன் எல்லோரையும் ஒன்று போலத்தான் படைக்கிறான். அவருக்கும் இரண்டு கால், உங்களுக்கும் இரண்டு கால். அவருக்கும் இரண்டு கண் இரண்டு காது ஒரு மூக்கு. உங்களுக்கும் இரண்டு கண், இரண்டு காது, ஒரு மூக்கு. அவருக்கும் இரண்டு கை; உங்களுக்கும் இரண்டு கை.

அவருக்கும் உங்களுக்கும் ஒரே ஒரு வேறுபாடு உண்டு. அது- அவர் கைகளைப் பயன்படுத்துகிறார். நீங்கள் கைகளைப் பயன்படுத்தவில்லை!

கல் உடைப்பவரும், கட்டை பிளப்பவருங்கூடத் தான் கைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று நீங்கள் சொல்லுவீர்கள். உண்மைதான். அது கூலி வேலை. கூலி வேலை செய்கிறவர் திடீர் என்று ஒருநாள் கூலி வேலைக்கு இருவரை அமர்த்தி. கல் உடைக்கச் சொல்லுகிறார். கட்டை பிளக்கச் செய்கிறார். அவர் முதலாளி ஆகிவிடுகிறார். மலைகளை குத்தகைக்கு எடுத்து, கல் உடைக்கிறார். காடுகளை விலைபேசி, விறகு ஆக்குகிறார். அந்தத் திறமை உங்களுக்கும் வரவேண்டும்!

'டாக்டர் ஆகவேண்டும்! என்ஜினீயர் ஆகவேண்டும்!' என்று நீங்கள் கனவு காணாதீர்கள்.

'டாட்டா ஆகவேண்டும்! பிர்லா ஆகவேண்டும்!' என்று ஆசைப்படுங்கள். நீங்கள் ஒரு டாட்டா-பிர்லாவாக ஆகிவிட்டால். நூறு டாக்டர்களுக்கு, இருநூறு என்ஜினீயர்களுக்கு நீங்கள் வேலை கொடுக்க முடியும்!

சொந்தக் காலில் நிற்க வேண்டும்! சொந்தத் தொழில் செய்ய வேண்டும்! பணத்தைக் குவிக்க வேண்டும்! இந்த ஆசையை இப்பொழுதே உங்கள் பிள்ளைகளிடம் ஏற்படுத்துங்கள்! அவர்களை சொந்தக் காலில் நிற்கச் செய்யுங்கள்.

18

தயார் நிலையில் இருக்கிறீர்களா?

லீஅயோ காக்கா என்ற மனிதர், மூடவேண்டிய நிலையில் இருந்த கிரைஸ்லர் கார் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டார். சரி செய்துவிடலாமென்று நினைத்து வந்தார். மிகப் பெரிய பிரச்சனைகள்! முடியாது என்ற நிலைக்கு வந்தார்! அவர் எழுதுகிறார். "பெரிய மோசமான சூழ்நிலையிலும் திடீரென்று அசாதாரணமாக சில நல்ல வழிகள் தென்படுகின்றன. இதிலிருந்து மீளவே முடியாது என்று தீர்மானிப்போம். அப்போதெல்லாம் நம் 'தலைவிதி'யின் தோளைப் பிடித்துக்கொண்டு, நன்கு உலுக்க வேண்டும்!"

பெரும்பாலும் நிர்வாகம் செய்யத் தெரியாதது தான் தொழில் முனைவோரின் தோல்விக்குக் காரணம். அனுபவமில்லாததும் காரணம். பெரும்பாலான இளைஞர்கள் "ஏதோ வாங்கி விற்பதுதான் வியாபாரம்.. அவன் செய்கிறான், பணக்காரனாகியிருக்கிறான்; இவன் செய்தான், பணக்காரனாகிவிட்டான்!" என்று எண்ணுகிறார்கள்.

"என் மனைவிக்கு நன்கு சமைக்கத் தெரியும்; நல்ல தரமான உணவைக் கொடுக்கமுடியும் என்பதால்

காப்பிக் கடை வைத்தோம்" என்று இறங்கியவர்கள், பலர்! ஆனால், உணவின் தரம் மட்டுமே போதாது!

சரவணபவன் ராஜகோபால், முதலில் மளிகைக் கடை வைத்து "தொழில்-நிர்வாக" அனுபவம் பெற்றிருந்தார். இருந்தும், நல்ல தரமான உணவு தயாரிப்பவர் ஒருவரையும், வியாபாரக் கணக்கை சரியாக வைத்துக் கொண்டு லாப நட்டத்தில் அதிகம் கருத்துச் செலுத்தக் கூடிய மற்றொரு ஆடிட்டரையும் பங்குதாரராக சேர்த்துக் கொண்டுதான் தொழிலில் இறங்கினார். "அவர் இன்று 'ஓகோ' என்றிருக்கிறார்" என்று சொல்பவர்கள், நுணுக்கமாக, அவரது வெற்றியின் அடிப்படைகளை ஆராய்வது இல்லை; தெரிந்து கொள்வதில்லை. கடைபிடிப்பதும் இல்லை; அவற்றில் கவனமாயிருப்பதில்லை. விளைவைப் பார்க்கிறார்களே தவிர, நடந்து வந்த பாதையைப் புரிந்துகொள்வதில்லை.

முதலாவதாக

தொழில் தொடங்க விரும்புபவர்கள், தானே காரியங்களில் இறங்கவும், செயல்படவும் முன்வர வேண்டும். பலர் யோசித்துக் கொண்டே... யோசித்துக் கொண்டே இருப்பார்கள்! காத்திருப்பார்கள்! "தானாகச் செய்ய வேண்டும்" என்ற முனைப்பு இருப்பதில்லை.

பச்சைப்பயிரை முளை கட்டினோமானால், ஈரத்தை இழுத்துக் கொண்டு முளை விடுகிறது. மற்ற எதற்கும் அது காத்திருப்பதில்லை. மற்ற எல்லாம் அதனிடம் இருக்கிறது. வெளிவந்த பின் தான் கீழே

பூமியை நோக்கி வேரும், வெளிச்சத்தையும் காற்றையும் நாடி வானை நோக்கித் துளிர்களும் கிளம்புகின்றன. அதாவது விதை என்ற எண்ணம், சூழ்நிலை என்ற ஈரத்தை உறிஞ்சி "ஆகா!! இதுதான் தருணம்! வெளியே வருவோம்!" என்று தீர்மானிக்கிறது. அதற்கு நம்பிக்கை இருக்கிறது- வேரும் இலையும் நாளை உதவும் என்று.

அப்படிக் கிடைக்காத போது என்ன செய்வது?

பாறையில் வேர்விடும் செடிகளைக் கவனியுங்கள். இருட்டில் இருக்கும் செடி நீண்ட கொடியின் மூலம் தலையை நீட்டி வெளிச்சத்தை நாடுவதைப் பாருங்கள். இதை முனைப்பு (INITIATIVEதானே செய்யும் குணம்) என்பார்கள். வாழ்வில் பலர் பிறர் சொல்கிறவரை காத்திருப்பார்கள்; ஆசிரியர் நெருக்குகிற வரை, வீட்டுக்கணக்கைப் போட மாட்டார்கள், சில மாணவர். மனைவி நெருக்குகிற வரை வீட்டு விஷயங்களைக் கவனிக்க மாட்டார், கணவர்.

சூழ்நிலையைக் கவனித்து "இது தேவை, இதை உடனே செய்ய வேண்டும்" என்று எண்ணுவதும் செயல் படுவதும்தான் தானாகச் செய்யும் குணம். தொழில் முனைவோருக்கு இது மிக அவசியம்.

காரியக்காரர்கள்

இவர்களைத் "திங்கள் கிழமை மனிதர்கள்" என்பார்கள். "காரியக்காரர்கள்!" என்றும் சொல்லலாம். திங்கட்கிழமை வந்தவுடன் "அடடா!

ஞாயிறும் ஓய்வும் முடிந்துவிட்டதா! இன்னும் ஒரு வாரத்திற்கு ஓடு ஓடென்று ஓடியாக வேண்டுமே!" என்று வாழ்க்கையைப் பற்றிக் குறைபடுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வைச் சுமையாக எண்ணுபவர்கள். ஒருநாளும் எதையும் சாதிக்க மாட்டார்கள்.

வாழ்வு இரண்டு உண்மைகளில் அடங்கி இருக்கிறது. ஒன்று உற்சாகம், மற்றது நம்பிக்கை. இவை இரண்டும் இருக்கும்போது மனிதன் தானாகத் துணிந்து செயல்படுவான்; உற்சாகமாகச் செயல் படுவான்.

தொழில் தொடங்குபவர்களுக்கு நல்ல உடல் நலமும் வேண்டும். ஏனெனில் உடல் நலமில்லாத போது மனம் சரியாக-தெளிவாக-சிந்திக்க முடிவதில்லை.

அதுமட்டுமல்ல; தொழில் தொடங்குபவர் இரவு பகல் என்று பார்க்காமல், வெயில் வியர்வை என்று அயராமல், நீண்ட நேரம் உழைக்க வேண்டி வரும். எனவே, தொழில் என்பது சொகுசு பார்ப்பவர்களுக்கு அல்ல. சில நேரம் தொழில் தொடங்கி சில மாதங்களில் லாபம் வரத் தொடங்கும்; சில நேரம் ஓரிரு ஆண்டுகூட ஆகும்! மனத் தளர்வில்லாமலும், உடல் தளர்வில்லாமலும், நம்பிக்கையுடன் உழைக்கும் உடல் தேவை.

மனப்பக்குவம்

சாதாரணமாக "தொழில் எப்படி இருக்கும்? என்ன சூழ்நிலையெல்லாம் இருக்கும்?" என்பதை

முழுமையாகப் பலர் உணர்வதில்லை. ஆகவே, தொழில் தொடங்கியதும் எதிர்பாராத சூழ்நிலைகளைக் கண்டு அதிர்ச்சி அடைகின்றனர். சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். இப்படியெல்லாம் நேரக்கூடும் என்று மன அளவில் முன்பே தயாராக இருந்தோமானால், அப்படி ஏற்படும்போது சமாளிக்கும் மனப்பக்குவத்துடன் இருப்போம்; அதிர்ச்சி அடைய மாட்டோம்.

நன்றாக நாம் நினைவில் கொள்ள வேண்டும். "தொழில் செய்பவர்கள் ஏராள மன நெருக்கடிகளுக்கு ஆளாகிறார்கள்; இதை சரியாக நாம் சமாளிக்காத போது நமது உடல் நலத்தைப் பாதிக்கிறது.

நேரம் இருக்காது !

பல நேரம் குடும்பத்தினருக்கோ குழந்தை குட்டிகளுக்கோ செலவிட நேரமிருக்காது. நமது பசி, தாகம், தூக்கம் இவற்றையும் நாம் தியாகம் செய்தாக வேண்டும். எனவே, நமது தொழிலின் நெருக்கடிகளைப் புரிந்துகொள்ளும் மனைவியோ கணவனோ இருப்பது மிக அவசியம். நம்முடன் ஒத்துழைக்கும் குழந்தைகள் அவசியம்.

சில தொழில்களைத் தொடங்குபவர்கள் முதலில் அதைக் குடும்பத் தொழிலாகத் தொடங்குகின்றனர். கணவன் மனைவி, பள்ளி வயதில் உள்ள குழந்தைகள் என்று எல்லோரும் பாடுபடும் சூழ்நிலை ஏற்படும். அப்படி ஏற்படும்போது, அந்த கூட்டுத் தியாகம் ஒருவருக்கு ஒருவர் மரியாதையையும் நல்ல ஆழமான உறவையும், பொது இலட்சியத்திற்காகப் பாடுபட

வேண்டும் என்ற கூட்டுப் பொறுப்பையும் எல்லோர் உள்ளத்திலும் வளர்க்கிறது.

தொழில் செய்பவர்கள் தங்களுக்குப் பிடித்த வேறு செயல்களில் ஈடுபடலாம் என்று, வெளியில் இருப்பவர்கள் எண்ணுகிறார்கள். இது உண்மையல்ல.

தொழில்தான் உயிர்நாடி. அதைப் புறக்கணித்தோ அல்லது இரண்டாம் இடத்தில் தொழிலை வைத்துக் கொண்டோ நாம் வேறு வேலைகளைக் கவனித்தால், தொழிலின் வளர்ச்சியும் வருமானமும் இரண்டாம் தரமாகத்தான் இருக்கும்; பல நேரம் மூன்றாம்தர நிலையை அடைந்துவிடும்.

அதனால்தான் "நான் தொழிலில் இருக்கிறேன். அன்று என்னால் உங்கள் நிகழ்ச்சிக்கு வரமுடியாது" என்று யாராவது தொழில் அதிபர்கள் கூறுவார்களேயானால், நான் உடனே "ஐயா! உங்கள் தொழில்தான் முக்கியம். நீங்கள் இல்லாமலே, நாங்கள் நிகழ்ச்சியை நடத்த முயல்கிறோம். நீங்கள் உங்கள் தொழிலைக் கவனியுங்கள்" என்று கூறுவதுண்டு.

பூத்துக் காய்த்துக் குலுங்கும் மரத்திற்கு கவனத்துடன் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே இருக்க வேண்டும். பூச்சி அணுகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நம் கவனம் இல்லாவிட்டால், தொழில் படுத்து விடும்.

ஒரு விஷயத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்வது தான் நம்மைத் தயார் நிலையில் வைக்கும். அதற்குத் தான் விழிப்புணர்வு என்று பெயர். கண்ணை மூடிக் கொண்டு நாம் சாலையில் நடப்பதில்லை. விழித்துக்

கொண்டு, காற்றையும் சத்தத்தையும் உணரும் நிலையில்தான் நடக்கிறோம். அந்த தயார் நிலை தொழில் முனைவோருக்குத் தேவை.

நீங்கள் தயார் நிலையில் இருக்கிறீர்களா?

19

நமக்குப் பாடங்கள்

ஒருவர் சொந்தமாகத் தொழில் தொடங்குகிறார் என்றால் அவர் பல முடிவுகளை எடுக்கவேண்டி இருக்கும். எங்கே தொழில் தொடங்கலாம் என்பதில் இருந்து தொழில் செய்ய என்ன எந்திரங்கள் வாங்க வேண்டும், எப்படி பொருளை மக்களிடம் விற்பது, யாரை வேலைக்கு தேர்ந்தெடுப்பது, தொழில் நிறுவனத்திற்கு என்ன பெயரிடுவது என்பது வரை பல முடிவுகளை அவர் எடுக்க வேண்டும்.

தொழில் தொடங்குவது எப்படி ?

தொழில் தொடங்குவது எப்படி என்று விளக்கும் நல்ல புத்தகங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ளன. காமராஜ் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம் போன்றவற்றில் தொழில் முனைவோருக்கு என்றே தனி பாடத் துறைகள் உள்ளன.

இப்போது பல இடங்களில் 'ஏற்றுமதி செய்வது எப்படி ?', 'தொழில் தொடங்குவது எப்படி ?', 'தொழில்முனைவோருக்கு தேவைப்படும் குணங்கள் என்ன ?' என்று பல பயிற்சி முகாம்கள்

நடத்தப்படுகின்றன. பணம் இருக்குமானால் இவற்றில் சேர்ந்து பயிற்சி பெறுவது நல்ல முதலீடு.

தொழில் நிர்வாகம் !

தொழில் நிர்வாகம் என்பது ஒரு மனிதனின் முழுத் திறமைகளையும் வெளிக்காட்டுவது. ஒரு மேடைப் பேச்சாளர் தன் கருத்துக்களை கோர்வை யாகக் காரண காரியம் காட்டிப் பேசுபவராக இருக்க வேண்டும்.

ஆனால் தொழில் நிர்வாகத்தில் எல்லாத் திறமைகளும் தேவைப்படுகின்றன. தொழிலில் ஏற்படும் பலவித சோதனைகளும் மனிதனின் திறமைக்குச் சவாலாக அமைகின்றன.

இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை எதிர்நோக்கவும், சமாளிக்கவும், நாம் தயாராக இருக்க வேண்டும்.

அதனால்தான் படிப்பது மட்டும் போதாது; சில ஆண்டுகள் தொழிலில் இருந்த அனுபவமும் தேவை என்று திரும்பத் திரும்ப கூறுகிறோம்.

தொழில் முனைவோர், உற்சாகமாக தன் பொருளை விற்கும் விற்பனையாளராய் இருக்க வேண்டும். கச்சாப் பொருளை வாங்கும்போது வியாபாரத்தின் நுட்பமறிந்து, நியாயத்துடன் பேரம் செய்பவராக இருக்க வேண்டும். வங்கிக்கு சென்று கடன் பெறவேண்டிய சந்தர்ப்பங்களும் வரும். இப்படி பல துறை நிபுணர்களாக எதையும் சமாளிக்கும் தன்னம்பிக்கையையும் அனுபவத்தையும் பெற்றிருக்க

வேண்டும். எல்லாவற்றையும்விட மிக முக்கியமான குணம் ஒன்றிருக்கிறது.

பகிர்ந்துகொள்ளுங்கள் !

இவர்களுக்குப் பொதுவாக, பணிகளைப் பகிர்ந்து கொள்ளும் பண்பு- மனோ பாவம் இருப்ப தில்லை. எல்லாவற்றையும் தானே தன் தலையில் எடுத்துப் போட்டுக்கொண்டு செய்பவர்களாக இருப்பார்கள்.

தொழில் தொடங்கும் போது எல்லாவற்றையும் நாமே செய்யவேண்டியது தான். போகப் போக பலரிடம் பொறுப்பை நம்பி ஒப்படைக்கும் குணமும், அது சரிவர செய்யப்படுகிறதா என்று மறைமுகமாக கண்காணிக்கும் குணமும் மிக அவசியம்.

"ஏன் பல தொழில்கள் தோற்றுப் போகின்றன?" என்று ஆராய்ந்து அந்தப் படுகுழிகளில் நாமும் விழாது கவனத்துடன் இருப்பது தொழில்முனைவோருக்கு முக்கியத் தேவை.

தொழிலில் தோற்றுப் போனவர்களிடம் பேசலாம். அதைவிட அவருக்குக் கீழே வேலை பார்த்த முக்கிய நிர்வாகிகளுக்கு உண்மைக் காரணம் தெரிந்திருக்கும்.

உதாரணமாக ஒரு தொழில் தொடங்கி நல்ல இலாபம் வந்தபோது அவரது மனைவி ஒவ்வொரு மாதமும் தன் வீட்டுச் செலவு- குழந்தைகளின் எதிர்காலத் திருமணச் செலவு என்று ஒரு பெரும்பகுதியை மாதா மாதம் எடுத்துக்கொண்டிருந்

தார். மற்றோர் தொழிலில் இவர்கள் விற்பனை செய்த இடத்தில் பணம் திரும்பப் பெறமுடியவில்லை. எனவே, கச்சாப்பொருளை வாங்கவோ உற்பத்தி செய்யவோ போதுமான கைப்பணம் இல்லாமல் போய்விட்டது.

மற்றோரிடத்தில் தொழில் தொடங்கி இலாபம் வரத் தொடங்கியதும் "இது தானே ஓடும்" என்றெண்ணி, அரசியலில் தன் கவனத்தைத் திருப்பினார் முதலாளி. தொழில் நசித்துப்போயிற்று.

எனவே, தோல்விக்கு நிறைய காரணங்கள் உள்ளன. தோல்விகள் எல்லாம் நமக்கு முன்கூட்டியே எச்சரிக்கை தருகின்றன.

ஏன் தோற்றுப் போனார்கள் ?

பொதுவாக தொழில் முனைவோர் என்னென்ன காரணங்களினால் தோற்றுப் போனார்கள் என்று அலசி ஆராய்ந்து தொழில் அறிஞர்கள் நமக்கு எச்சரிக்கிறார்கள்.

மூன்றில் இரண்டு பேர் அதாவது 66 சதவிகிதத்தினர் தோற்றுப் போவது; பணப் பிரச்சினையால்தான். பணத்தைச் சரிவர நிர்வாகம் செய்யத் தெரியாததுதான்.

அதிக இலாபம் வரும் என்று கணக்குப் போட்டிருப்பார்கள்; செலவுகள் அதிகமாயிருக்கும், இலாபம் வராது. தொழில் ஆரம்பித்த புதிதில் வருமானமும் செலவும் சரிக்கட்டிக் கொண்டு

போகிறது என்ற நிலையை அடைவதுதான் முதல் இலட்சியமாக இருக்க வேண்டும்.

ஒரு சில தொழில்களில் மட்டும் முதல் மாதமே இலாபம் வரும். பல தொழில்களில் இலாபம் பெற சில ஆண்டுகள் ஆகும். உதாரணமாக: பத்திரிகைத் தொழில். உங்கள் பத்திரிகை மக்களுக்குத் தெரிந்து அதில் வரும் விஷயங்களை அவசியம் படிக்க வேண்டுமென்கிற ஆர்வத்தை வளர்ப்பதற்கு 2-3 ஆண்டுகளும், அதற்கு மேலும் ஆகும். அதுவரை நட்டங்களைத் தாங்க உங்களிடம் போதுமான பண வசதி இருக்கிறதா என்று தீர்மானிக்க வேண்டும்.

மூன்று அம்சங்கள் !

தொழிலில் உள்ள மூன்று அம்சங்கள் மனிதன், பணம், பொருள் என்பார்கள்.

முதல் தேவை; ஈடுபாடு கொண்ட மனிதன்.

இரண்டாவது தேவை: பணம். தொழிலில் முதலீடு செய்யப் பணம் வேண்டும். கூடுமானவரை அது நமது சொந்தப் பணமாக இருப்பது நல்லது.

தொழில் செய்ய முனைபவன் பணப் போக்குவரத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். கவனம் வேண்டும். பெரும்பாலோர் தோற்பது இதில்தான்.

அடுத்த காரணம்: நாலில் ஒருவர்-அதாவது 25 சதம் பேர் தோற்றுப் போவதன் காரணம்: அனுபவமின்மைதான். சமாளிக்கும் திறமைதான்

நிர்வாகம். அது இயல்பாக இல்லை என்றால் தொழிலில் தலைவைத்தும் படுக்காதீர்கள்.

யாராவது சொல்கிற வேலையை மரியாதையாக செய்துகொண்டு நிம்மதியாகக் கழிப்பது நல்லது. அனாவசியமாக, இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிக் கொண்டு திண்டாடுவது நல்லதல்ல.

மூன்றாவதாக போதுமான* விற்பனை இல்லாதது, நாட்டின் பொருளாதாரச் சரிவு, தொழிலில் போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாத நிலை என்ற விஷயங்கள்.

நான்காவதாக சுமார் 8 சதம் தோல்விகளுக்கு காரணம். வரவுக்கு மேற்பட்ட செலவுகள்தான்.

வரவுக்குள் செலவு !

குடும்பமானாலும், தொழில் ஆனாலும், நாடானாலும் வரவுக்குள் செலவழிக்க முடியாமல் போனால், குடும்பம் துன்பப்படும். தொழில் நிர்வாகியின் திறமையின்மையால் அத்தனை தொழிலாளர்களும் அவர்கள் குடும்பங்களும் துன்பப் படுவார்கள். வரவுக்குள் செலவை அடக்கமுடியாத ஒரு நாட்டுத் தலைவனால்- ஒரு தலைவனின் ஊதாரித்தனமான செலவினால்- நாடே கடன்படும். அந்த கடன் நாட்டு மக்களின் மீது அதிக வரியாக வந்து விடியும். அதிக வரி பொருளின் விலையை அதிகமாக்கும். விலைவாசி ஏற்றம் ஏற்படும். நாடே திண்டாடும். இதுதான் இன்றைய நாட்டின் நிலைமை.

நமது மாநில அரசின் வருமானம் ஏறத்தாழ பத்தாயிரம் கோடி ரூபாய். இந்த பணம் சாலை போடவும் குடிநீர் தரவும், பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டவும்- ஊர் நன்மைக்குப்- போய்ச் சேர வேண்டும். இதில் "சுமார் நாலாயிரம் கோடி ரூபாய் 40% இலவச திட்டங்களுக்குச் செலவிடப் படுகிறது" என்று பெருமையுடன் சொல்கிறார் ஒரு மாநில அமைச்சர். அந்த இலவச வேட்டி சேலை சரியாகப் போய்ச் சேருகிறதா என்பது வேறு விஷயம்! ஊர் நாறும் விஷயம்!

இப்படிப்பட்ட அமைச்சர் ஒரு தொழில் தொடங்கி 40 சதவிகித பணத்தை ஊதாரித்தனமாக செலவழித்தார் என்றால் எத்தனை நாளைக்கு இவர் தொழில் செய்ய முடியும்?

செய்வாரா?

நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை எல்லாம் நம் வரிப் பணத்தை நிர்வகிக்க அனுமதிக்கலாமா? யோசிக்க வேண்டும்!

20

திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள்

தொழிலில் இறங்கும் நாம் தொழிலதிபர்களை வெற்றி பெறச் செய்த குணங்கள் எவை? அவற்றை நாம் வளர்த்துக்கொள்ள முடியுமா என்று யோசிக்க வேண்டும்.

தொழில் செய்பவர் என்ன செய்கிறார்? ஒரு பொருளை விற்கிறார். தன்னிடம் இருக்கும் பொருளை இடமாற்றம் செய்கிறார். அதனால்தான் நம் வீட்டுக்கு மளிகைக் கடையிலிருந்து சர்க்கரை வந்து சேருகிறது.

நேற்று வரை அந்த வகை சோப்பு இல்லை. நேற்று வரை குடிநீரை சுத்தப்படுத்தும் கருவி இல்லை. ஒரு காலத்தில் சிக்கிமுக்கிக் கல்தான் இருந்தது: இப்போது தீப்பெட்டியை அவர் உற்பத்தி செய்கிறார். முன்பு ஓரிடத்திலிருந்து மற்றோர் ஊருக்கு நடந்து போனார்கள். இப்போது நமது தொழிலதிபர் பஸ் விடுகிறார்.

இல்லாத ஒன்றை ஏற்படுத்துகிறார்; உருவாக்கு கிறார்: மனித தேவையைப் பூர்த்தி செய்கிறார். கடல் தண்ணீரில்தான் உப்பு கரைந்து கிடக்கிறது. எங்கள் உப்பளக்காரரர் கடல் தண்ணீரைப் பாத்தி கட்டி,

காயவைத்து, உப்பெடுத்து கடைகளுக்கெல்லாம் விற்கிறார். நம் வீட்டுக்கு உப்பு வருகிறது.

சொந்த பணம்!

எப்படி இதைச் செய்கிறார்? தன் உழைப்பைக் கொட்டுகிறார். சிலருக்கு வேலை கொடுக்கிறார். தன் சொந்த பணத்தைப் போட்டு ஆட்களுக்கு சம்பளம் கொடுக்கிறார். நாளை உப்பு விற்கும்போது இதை எடுத்துவிடலாம் என்று அவருக்குத் தெரியும். அவரிடம் சம்பளம் கொடுக்கவும் தூசியிலிருந்து உப்பைக் காக்க கொட்டகையும் போடுகிறார். அதற்கு அவரிடம் பணம் இருக்கிறது.

அந்த மனிதர் சாதனையாளர்! ஏன்?

சமுத்திரத்தை தினமும் பார்க்கிறவர்கள் ஏராளம்! கடல் தண்ணீரில் காலை நனைத்தவர்கள் ஏராளம்! ஒரு சிலர்தான் கடல் தண்ணீருக்குள் உப்பு ஒளிந்திருப்பதைப் பார்க்கிறார்கள். ஒரு சிலர்தான் அதை வெளிக் கொண்டுவரலாம் என நினைக்கின்றனர். ஒரு சிலர்தான் அதில் பணம் ஒளிந் திருக்கிறது என்பதை புரிந்து கொள்கிறார்கள்.

அந்த மனிதர் வெறும் உப்பளக்காரரர் அல்ல; புத்திசாலி! சூட்சுமமான மனிதர்! உழைக்க; வெயிலில் நிற்க தயங்காதவர். தொழிலதிபராக- தொழில் முனைவோராக மாற எது உதவும்?

பாரம்பரியம் உதவும்

உங்கள் தந்தையோ, மாமாவோ அண்ணனோ தொழில் செய்துகொண்டிருந்தார்களானால் அது

உதவும். அங்கே என்ன நடக்கிறது என்பது பற்றிய நேரடி அனுபவம் நமக்கு கிடைக்கிறது. அந்த பாரம்பரியம் உதவும். அது இல்லாவிட்டாலும், மற்றவர்கள் இன்று இருக்கும் ஏராள அறிவைக் கொண்டு யாரும் தொழிலதிபராக முடியும்.

தந்தை செய்கிற தொழில் நமக்கு பிடிக்குமானால், நம் குடும்பத்தைக் காப்பாற்ற வகை செய்யுமானால், மேலும் மேலும் வளர வாய்ப்பு இருக்குமானால் நாம் அதில் இறங்குவது நல்லது. இன்று தொழிலில் சாதிப் பிரிவுகள் ஏதும் இல்லை. யாரும் எதுவும் செய்யலாம்; செய்கிறார்கள். செய்து பணக்காரர்களாகிறார்கள்.

இது எப்படி முடிகிறது?

நாமும் தொழில் செய்து பணக்காரர்களாக வேண்டுமென்ற ஆசைதான். தோல் வியாபாரம் செய்யும் பிராமணர்கள் இருக்கிறார்கள். ஒருகாலத்தில் "பிராமணாள் காப்பிக் கடை" என்று போர்டு இருக்கும். இப்போது நல்ல சமையலும் நிர்வாகமும் தெரிந்த எல்லா சாதிக்காரர்களுடைய காப்பிக் கடைகளும் சக்கைப்போடு போடுகின்றன.

எனவே பாரம்பரியம் என்றால் உங்கள் அப்பா-அம்மா, தாத்தா முப்பாட்டன் இவர்களுக்கு இருந்த குணங்கள் அந்த வழி வழி வந்த பாரம்பரியத்தைத்தான் குறிப்பிடுகிறோம். அப்படி பாரம்பரியம் இல்லாமலும் இறங்கலாம். வெற்றிகளைக் காணலாம். அதற்கு என்ன தேவை? ஆர்வம். சளைக்காத மனம். உழைப்பு. நிர்வாகத் திறமை.

அடுத்து: கல்வி படிப்பு. இன்று எந்த துறையைப் பற்றியும் தெரிந்துகொள்ளும் ஏராள அறிவு பல்கலைக் கழகங்களில் பாடமாகவும், புத்தகக் கடைகளில் புத்தகமாகவும் கிடைக்கின்றன. எனவே அறிவு தேவை; அறிவு உதவும்.

மூன்றாவதாக: உழைக்கும் மனோபாவம் உதவும். பலர் உழைக்க, பாடுபட விரும்புவதில்லை. எளிதாக சம்பாதிக்க விரும்புகிறார்கள். அவர்கள் உத்தியோகம் பார்ப்பது நல்லது. தொழிலில் இறங்க விரும்பினால் கடுமையாக உழைக்கத் தயாராயிருக்க வேண்டும்.

ஆரம்ப காலத்தில் நமது உழைப்பிற்கு சம்பளம் எடுத்துக் கொண்டோமானாலே தொழில் வெற்றி அடைகிறது என்று அர்த்தம்.

குடும்பத்தினரின் ஒத்துழைப்பு, அதிகம் உதவும். நமது பணத்தைப் போட்டு தொடங்கும் தொழிலில் நம்முடன் உழைப்பவர்கள் நமது நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக இருக்க வேண்டும். அண்ணன் தம்பிகள் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அத்தை பாட்டி நமக்கு ஆசியுடன் கொடுக்கும் பணம் இவை அனைத்தும் உதவும்.

பணம் பண்ணுவதற்கு ஏற்ற இடம் எது?

எங்கே நிறையப் பேர் பணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அந்த இடம்தான் என்பார்கள். ஆகவே தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கிற இடம் வளர்ந்து கொண்டிருக்கின்ற

ஊராக, நகரமாக இருக்க வேண்டும்; வளர்ந்து விட்ட நகரமாகவோ– வளராத இடமாகவோ– இருப்பவற்றை நாம் தேர்ந்தெடுப்பது நல்லதல்ல. தமிழ்நாட்டில் வளர்ந்து வருகின்ற ஊர்கள்: ஈரோடு, கோவை, சேலம், நாமக்கல், கரூர், செங்கல்பட்டு (சென்னைக்கு அருகில் இருப்பதால்) திருச்சி, இராஜபாளையம் என்று பல ஊர்களைச் சொல்லலாம்.

இப்படி, பல விஷயங்கள் நமக்கு உதவும். இவை அனைத்தையும் நாம் சீர்தூக்கிப் பார்த்து அதிக அவகாசம் எடுத்துக் கொண்டு நிதானமாக முடிவெடுப்பது நல்லது.

தேவையான குணங்கள் !

நீங்கள் வளர்த்துக் கொள்ளக்கூடிய குணங்கள் சில இருக்கின்றன. அவை:–

(1) வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை. வெற்றிபெற வேண்டும் என்ற ஆசை, துடிப்பு.

(2) நல்ல பலன் கிடைக்கும். நிறைய சம்பாதிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு.

(3) கடினம்தான். போட்ட பணத்தை இழக்கும் வாய்ப்பும் உண்டு. இருந்தாலும் இது நல்ல தொழில். நிச்சயம் இதில் இறங்கி வெற்றி காண முடியும் என்று கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாது இறங்கும் துணிவு.

(4) திட்டமிடும் குணம்: எல்லாவற்றையும் திருத்தமாக, ஒழுங்காக, கவனமாகச் செய்யும் குணம்.

(5) "எல்லாம் நன்றாக நடக்கும்" என்ற அடிப்படை எண்ண ஓட்டம். எதையுமே ஆக்கபூர்வமாக -சாதகமான சூழ்நிலையாகப் பார்க்கும் குணம்.

(7) துடிப்பு. ஓட்டம். தொழில் செய்பவர் ஒரு நிமிடம் சும்மா உட்கார்ந்திருப்பதில்லை. சதா ஏதாவது உருப்படியாக என்ன செய்யலாம் என்று தானாகவே காரியமாற்றும் உடல் சக்தி. ஆரோக்கியம்.

(8) மாற்றிக் கொள்ளும் இயல்பு. தோல்வி, சங்கடம் என்று வரும் போது மீண்டும் மீண்டும் "என்ன ஆகி விட்டது? போகட்டும்!" என்று சந்தர்ப்பங்களுக்கு ஈடு கொடுத்து சமாளிக்கும் திறமை.

(9) பேசுந்திறன். கட்டளையிடும் குரல். பேசும் போதே தன் மனஉறுதியைத் தெரிவிக்கும் வல்லமை.

(10) உண்மையானவன். யோக்கியமானவன் என்று பிறர் காட்டும் மரியாதை மிக அவசியம்.

(11) பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் குணம். "நான்தான் இதற்குப் பொறுப்பு" என்று செயல்படுதல். பிறர் மீது பழி போடாத குணம். பிறரிடம் வேலை கொடுத்தால் அவர்கள் சரியாக செய்கிறார்களா என்று கண்காணித்து, காரியத்தை விரும்பியபடி எடுத்துச் செல்லும் தலைமைக் குணம்.

(12) தனது பலத்தையும் பலவீனத்தையும் அறிந்த மனிதன் அவன். எந்த துறைகளில் பலவீனம் இருக்கிறதோ அவற்றிற்கெல்லாம் அவன் பிறரை

நாடுகிறான்; ஆலோசனை, உதவி பெறுகிறான். எல்லாம் எனக்குத் தெரியும் என்று நினைப்பதில்லை.

(13) விடாமுயற்சி. சளைக்காத மனம். தோல்வியைக் கண்டு துவள்வதில்லை. கீழே அவர்கள் விழக்கூடும். ஆனால், மீண்டும் எழுந்து நிற்பார்கள்; நடப்பார்கள்.

21

தடங்கலுக்கு வருந்த வேண்டாம்!

சாதனை புரிய வேண்டும், பெரிய தொழிலை நடத்தவேண்டும், செல்வந்தனாக வேண்டும் என்ற எண்ணம்- ஆசை - தொழில் முனைவோருக்கு அவசியம். அதேபோல கடும் உழைப்பு தேவை. அதோடு நிர்வாகம் செய்யும் திறமையும் வேண்டும்.

ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிடக் கூடாது. நெருக்கடிகளும், பிரச்னைகளும் நிறையவரும். எப்படி இருந்தாலும்- "நம் வாழ்க்கை சிறப்பாக அமைவதற்காக இந்த தொழிலில் இறங்கி இருக்கிறோம்" என்பதை மறந்துவிடக் கூடாது. "மகிழ்வுடன்-மனநிறைவுடன்- வாழ வேண்டும்" என்ற நோக்கத்தைக் குலைக்கும்படியான எந்தக் காரியத் திற்கும் இடம் கொடுக்கக்கூடாது. நமது வாழ்க்கை தராசு போல எல்லாவற்றையும் சம அளவில் பார்க்கும் குணமாக இருக்க வேண்டும்.

மனைவியை மறந்துவிடக்கூடாது!

இரவு பகல் வேலை, என்று குடும்பத்தை- மனைவி குழந்தைகளை மறந்துவிடக் கூடாது. பல

சமயங்களில் நமது மனைவிதான் நமக்கு ஆறுதல் சொல்லக்கூடும்; தைரியம் கொடுக்கக்கூடும். நம் குழந்தைகளின் சிரிப்புத்தான் எல்லாக் கவலைகளையும் மறக்கச் செய்யும். சில சமயம் கோயிலுக்கோ அல்லது வெளியூர் திருமணத்திற்கோ போய் வருவது ஒரு நிதானத்தையும் புத்துணர்ச்சியையும் தரும்.

நம்மிடம் இருக்கின்ற மிகப்பெரிய சொத்து மனம் தான். அதை எவ்வளவு நம்பிக்கையுடனும் உற்சாகத் துடனும் வைத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் பிரச்சினைகளையும் சவால்களையும் சமாளிக்க முடியும்.

வாழ்வில் பல விஷயங்கள் இருக்கின்றன. தொழில் செய்வது வாழ்வதற்காக. எனவே, தொழில் தொடங்கும்போது பிரச்சினை வரும்போதும், “வாழப் பிறந்திருக்கிறோம். அதற்காகத்தான் தொழிலில் இறங்கி இருக்கிறோம்” என்ற நிதானத்தை இழந்துவிடக் கூடாது. ஏதாவது ஒரு விஷயத்தை மிகப்பெரிதாக்கி, கற்பனை செய்து, பயந்து, நம்மை நாமே சீரழித்துக் கொள்ளக்கூடாது.

நேரம் தவறாமை சோறு போடாது !

சிலர் எல்லாவற்றையும் சுத்தமாக வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவார்கள்; சிலர் நேரம் தவறாமையில் மிக கண்டிப்புடன் இருப்பார்கள். இப்படி பல விஷயங்களும் முக்கியம்தான். ஆனால் அது ஒன்று மட்டுமே சோறு போடாது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

தொழில் முனைவோர் எதில் தோற்றுப் போகிறார்கள்? அல்லது எதனால் அதிகம் சங்கடப்படுகிறார்கள்?

தொழில் முனைவோரிடம் தொழிலைப் பற்றிய தெளிவான திட்டம் இருப்பது இல்லை. “தொழிலை எப்படிச் செய்யப் போகிறீர்கள். எப்படிப் பணம் வரும்?” என்கிற திட்டம் இருந்தால் தான் வங்கியில் கடன் வாங்க முடியும். அதற்குரிய விவரங்களை வங்கிக்காரர்கள் மூலம்- அல்லது புத்தகங்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், திட்டம் தயாரித்து கடன் வாங்கி தொழில் செய்பவர்கள் தொழில் செய்யத் தொடங்கியதும், திட்டத்தை மேசை டிராயருக்குள் வைத்துவிடுவார்கள்! அதை உபயோகிக்க மாட்டார்கள்! திட்டம் என்பது, “நாம் எப்படிச் செயல்பட்டால் தொழில் மென்மேலும் வளரும்” என்பதற்கான வழிவகைகளைக் கூறும் ஒரு கையேடு; பாதை காட்டும் வரைபடம். அதை உபயோகிக்காமல் போனால் சரியான ஊருக்கு போய்ச் சேரமுடியாது.

நம் திட்டம் என்ன, அதை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். செயல்படுத்துபவர்கள் கூட, சில சமயம், அந்த திட்டத்தை “கால நிலைமைக்கேற்றவாறு, மாற்றி செயல்படுத்த வேண்டும்” என்ற முனைப்புடன் செயல்படுவதில்லை.

புரிந்துகொள்வதில்லை

பல சமயம் எடுத்துக் கொண்டிருக்கும் தொழிலைப் பற்றி பூரணமாக ஆராய்வதில்லை. "அவன் பனியன் கம்பெனி தொடங்கி பணக்காரன் ஆனான். நானும் ஆகமுடியும்" என்று இறங்குகிறார்கள். அதற்காக அந்த மனிதன் என்னென்ன செய்தான் என்பதை மறந்து விடுகிறார்கள்; புரிந்து கொள்வதில்லை. பனியன் தொழில் என்றால் பல சமயம் நூல் தட்டுப்பாடு வரும்; பல சமயம் உங்கள் சட்டைத் துணிகளை வாங்குபவர் களது தேவையும், எதிர்பார்ப்பும், டிசைனும் மாறிவிடும்; பல சமயம், பங்களாதேஷ்காரர்களும் சீனாக்காரர்களும் உங்களைவிடக் குறைந்த விலையில் பொருளை விற்க முன்வந்திருப்பார்கள்.

இவற்றைப் பற்றிய ஆராய்ச்சி, முன்கூட்டிய அனுமானங்கள் உங்களிடம் இருக்க வேண்டும். பலர் இவற்றில் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

தொழில் முனைவோர் பலர் அவசரப் படுகிறார்கள். மிக விரைவில் பெரிய தொழிலதிபராக ஆகிவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்! எனவே, திட்டம் தயாரிக்கும்போது, "முதலாம் ஆண்டு இவ்வளவு வருமானம் வரும்; இரண்டாம் ஆண்டு இதைப்போல் இரண்டு பங்கு விற்பேன்!" என்று உலக நிலவரத்தை எல்லாம் அறியாது, பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

ஒரு தொழில் கூடம் கட்டுவதென்றால் 6 மாதத் தில் முடித்துவிடலாம் என்பார்கள். நமது ஆசை வேறு

உண்மை நிலை வேறு. முடிப்பதற்கு ஓராண்டிற்கு மேலாகும்.

நியாயமில்லாத, உலக யதார்த்தத்திற்கு புறம்பான ஒரு காலவரையறைகளைப் போட்டுக் கொண்டு செயல்படுபவர்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகிறார்கள். விதை உடனே மரமாகி கனி தருவதில்லை. விதைவிதைத்தவுடன், "என்ன விதை முளைக்க வில்லையே?" என்று நாம் மண்ணைத் தோண்டி தினம் தினம் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அது போல அவசரப்படுவதில் அர்த்தமில்லை.

முகதாட்சண்யம்

தொழில் முனைவோரும் சரி, தொழில் செய்பவர்களும் சரி, ஏராளமான தடங்கல்களைச் சந்திக்கிறார்கள். தன் தொழில் கவனத்தைப் பாதிக்கும் பார்வையாளர்களையும், அர்த்தமற்று போனில் கூப்பிடுபவர்களுக்கு-நேரத்தை வீணாக்குகிறார்கள்.

"வாருங்கள்! என்ன விஷயம்? எங்கே வந்தீர்கள்?" என்று கேட்டால், "சும்மாதான் வந்தேன்!" என்பார்கள். இல்லாவிட்டால் "பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்பார்கள்.

அவர்களுக்கு வீணடிக்க நேரம் இருக்கலாம்! நாம் நம் நேரத்தை வீணடிக்க முடியாது! 'முகதாட்சண்யம்' என்பது தொழிலில் சரிப்பட்டு வராது.

இங்கே நமக்கு வேலை கிடக்கிறது. வேலை செய்தால்தான் காரியம் நடக்கும். காரியம் நடந்தால்

தான் வேலை பார்ப்பவர்களுக்கு சம்பளம் கொடுக்கலாம். அரசியல் அக்கப்போர்களுக்கோ, சினிமா கிசுகிசுகளுக்கோ, வெட்டிப் பேச்சுக்கோ அலுவலக நேரங்களில் அவகாசம் கிடையாது.

தொழில் முனைபவர்கள் ஆரம்பிக்கும்போது எல்லாவற்றையும் அவர்களே செய்யவேண்டி இருக்கிறது. இந்த குணம் அவர்களிடம் தொடர்கிறது. ஒரு நிறுவனம் வளர வளர ஒரு மனிதர் எல்லா வேலைகளையும் கவனிக்க முடியாது.

பல நிறுவனங்களின் நிர்வாகிகளை மனதில் கொண்டு வாருங்கள். அவர்கள் நிறுவனங்களில் பல துறைகள் இருக்கின்றன- கச்சாப்பொருளை வாங்குவதிலிருந்து கணக்கு எழுதுவது வரை. இவை அனைத்தையும் நம்முடன் வேலை பார்க்கும் பலரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

முட்டாள்தனம் !

"தான் செய்தால்தான் எல்லாம் சரியாக இருக்கும்" என்று எண்ணி எல்லா வேலைகளையும் தன் தலையில் போட்டுக்கொண்டு திண்டாடுவார்கள். இது தவறு; முட்டாள்தனம்.

நம்பகமான மனிதர்களிடம் பணிகளைப் பகிர்ந்து கொண்டு, அது சரிவர நடைபெறுகிறதா என்று அவ்வப்போது கண்காணிப்பதுதான் சிறந்த நிர்வாகம். இதைத்தான் அன்றே "இதனை, இதனால் இவன் முடிப்பான் என்று அறிந்து, அந்த வேலையை

அவனிடம் விட்டு விடவேண்டும்'' என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இதனால் நம் வேலை சுலபமாகிறது. பெரிய பெரிய திட்டங்களை கற்பனை செய்யவும், எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதற்கும் நமக்கு நேரம் கிடைக்கும்.

சில முக்கிய குணங்கள்: பொறுமை; தொடர்ந்த முயற்சி; சளைக்காத மனம். எல்லாவற்றிற்கும் மேலாக புதிய புதிய யோசனைகளையும், தீர்வுகளையும், உருவாக்கும் சிந்தனைத் திறன்; கற்பனைத்திறன்.

வளைந்து கொடுத்துப் போகும் குணம்; பேசும் போது நியாயத்தைக் கூறி அவர்களை மதிக்கும் குணம்.

மலைக்காதீர்கள்! மனதுவைத்தால் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் நாம் கற்றுக் கொள்ளலாம்!

22

முன்னேற முதல்படி திட்டமிடுதல்தான்!

அதிகம் உணராத ஒரு துறை இருக்கிறதென்றால் அது நம் வாழ்க்கையைத் திட்டமிட்டு நாம் விரும்பியதை அடையலாம் என்கிற ஞானம்தான்.

அதேபோல "திட்டமிட வேண்டும். அதன்படி செயல்பட வேண்டும், அறிவை உபயோகிக்க வேண்டும்" என்பதும் பலருக்குப் புரிவதில்லை.

நமக்கு 30 ஏக்கர் நிலம் இருக்கிறது. எல்லாம் கரம்பும் புதருமாக; யாரோ சொல்கிறார்கள், "தென்னை போடலாம்" என்று. இன்னொருவர் "எலுமிச்சை, வாழை, மா போடலாம்" என்று சொல்கிறார். இதில் இருந்து, நமக்குப் பிடித்ததைச் செய்கிறோம். தென்னை நடுகிறோம். இரண்டு மூன்று ஆண்டுகளில் அது வளரவில்லை. இலைகள் மஞ்சள் பூத்துக் கிறங்கிப்போய் நிற்கின்றன.

மற்றொருவர் தோட்டத்தைப் பார்க்கிறோம். சீமை இலந்தை போட்டிருக்கிறார். பம்ப் போட்டிருக்கிறார். பாத்திகட்டி இருக்கிறார்.

தோட்டத்தைப் பார்த்துக் கொள்ள ஆள் வைத்திருக்கிறார். அவர் சொல்கிறார். "இங்கே, பூமியில் தண்ணீர் குறைவு. சப்போட்டா, கொய்யா, இலந்தை போடலாம் என்றார்கள். சீமை இலந்தையை கடையில் பார்த்தேன். நல்ல ருசியாக இருந்தது. விலையோ அதிகம். விவசாய நிபுணர்களைக் கேட்டேன். சீமை இலந்தை பயிரிட்டேன். நல்ல மகசூல்!" என்கிறார்.

திட்டமிடுபவர்களுக்கும் திட்டமிடாதவர் களுக்கும் இதுதான் வித்தியாசம்.

திட்டமிடாவிட்டால், என்ன நேர்கிறது? அடுத்து என்ன வேலை வருகிறதோ நமது நேரத்தை நிரப்புகிறது. அப்போது நமது நேரம், உழைப்பு, புத்திசாலித்தனம் எல்லாம் நம் கையில் இல்லை. எது வருகிறதோ, அதற்கு ஈடுகொடுத்து, நேரத்தை, காலத்தை, நம் உழைப்பைச் செலவிடுகிறோம். நமக்கு இருப்பதோ ஒரு குறிப்பிட்ட காலம்தான்- குறிப்பிட்ட காலம்தான் மனித வாழ்க்கை. அதில் நாம் விரும்பியதை அடைய முயல்வதா? அல்லது ஏதோ குளத்தில் தெப்பக்கட்டை மிதப்பது போல "எங்கோ போகிறோம்-காற்றடித்த பக்கம்!" என்று வாழ்க்கையை அலையவிடுவதா?" யோசித்துப் பாருங்கள்!

காலமும் நேரமும் நம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இல்லாவிடில் நமக்கு நேர்கின்ற சம்பவங்களின் கருணையில்-சூழ்நிலையின் பிடிப்பில்-நம் வாழ்க்கை அமைந்துவிடும்!

திட்டமிட வேண்டும்!

அன்றாட வேலைகளை நாம் திட்டமிட்டு செய்ய வேண்டும். இன்று செவ்வாய்க்கிழமை. எனது முதல்

வேலை 'ராணி'க்கு-கட்டுரை எழுதி முடிப்பது தான்; காலை நேரம். அதுதான், என் மனம் தெளிவாகவும் என் மூளை சுறுசுறுப்பாகவும் வேலை செய்யும் நேரம். போன் அடிக்காத நேரம். யாரும் கதவைத் தட்டாத நேரம்.

திட்டமிடுதல் என்பது அன்றாட வாழ்வில் தொடங்க வேண்டும். நம் வாழ்வில் நாம் என்னவாக ஆக விரும்புகிறோம் என்பதைப் பற்றி யோசித்து- நம் இலட்சியத்திற்கேற்ப நாம் திட்டமிட வேண்டும். 'நம் குடும்பம்' எங்கே வாழ வேண்டும்'. எங்கே நல்ல காற்று, தண்ணீர், நல்ல பள்ளிக்கூடம் இருக்கும் என்பதையும் நமக்கு எவ்வளவு குழந்தைகள் வேண்டும்?' என்பதையும் திட்டமிட வேண்டும்.

அடுத்து மிக முக்கியம், 'என்ன தொழிலில்- அல்லது என்ன வேலையில் இறங்குகிறோம்? அதில் கடைசியில் என்னவாக விரும்புகிறோம்? என்பதை நாம் திட்டமிட வேண்டும். திட்டமிட்டால்தான், அதைப்பற்றி சிந்திக்கும்போதுதான் அது நிகழும். ஏனெனில் எதை நீ ஆழ்ந்து சிந்திக்கிறாயோ- சிந்தித்துக் கொண்டிருக்கிறாயோ- அதுவாக நீ மாறுகிறாய் என்று உபநிடதம் கூறுகிறது.

ஏன் அவற்றை நம் வாழ்க்கைக்கு உபயோகித்துக் கொள்ளக்கூடாது?

முதலில், "வாழ்க்கையில் நான் என்னவாக விரும்புகிறேன்?" என யோசியுங்கள். "எதைச் சாதிக்க விரும்புகிறேன்?" என்று சிந்தியுங்கள். இதுதான் உங்கள் இலட்சியம். வாழ்வில் இலட்சியம்தான் பெரிய உந்து சக்தி., இலட்சியத்தை மனதிற்குக் கொடுத்துவிட்டீர்

களானால் நமது மனம் நம்மை அறியாமல், நம் இலட்சியத்தை நோக்கி நம்மை துரத்திக் கொண்டிருக்கும்.

தெளிவு வேண்டும்

இரண்டாவதாக, வாழ்வில் பல ஆசைகளை நிறைவேற்றவேண்டும் என்று எண்ணுகிறோம். இதில் எது முக்கியம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். எது முக்கியம் என்பதற்கும் உங்கள் இலட்சியத்திற்கும் தொடர்பு இருக்கிறதா என்று பாருங்கள். அதாவது 'எனது இலட்சியத்தை அடைய எதை நான் முக்கியமாக செய்ய வேண்டும்?' என்ற தெளிவு அவசியம்.

மூன்றாவதாக, முன்பே கூறியது போல எந்த நேரம் ஏற்ற நேரம், காலையா, பத்து மணிக்கு மேலா, மதியமா, மாலையா அல்லது நீங்கள் இரவு மனிதரா என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ப நம் பணிகளை அந்த நேரங்களில் மிக முக்கிய காரியங் களில் ஈடுபடுத்த வேண்டும்.

நான்காவதாக, "ஒரு நாளை–24 மணி நேரத்தை– எப்படி பங்கிட்டு, அழகாக செய்தால், எனக்கும் ஓய்வு இருக்கும். நானும் மகிழ்வேன், அதே சமயம் பல காரியங்களும் ஆகி இருக்கும்'' என்பதை மனதில்கொண்டு நாம் அன்றாட வேலைகளுக்கு சரியாக நேரத்தை ஒதுக்க வேண்டும்.

பலர் தோற்றுப்போவதற்குக் காரணம் எதிலும் அரைகுறையாக ஈடுபடுவது தான். அரைகுறையாக ஈடுபட்டால் பலனும் அரைகுறையாகத்தான் இருக்கும். எனக்குத் தெரிந்த ஒருவர் பொதுவாழ்வில்–

அரசியலில் ஈடுபட்டார். பெயர் கிடைத்தது. கொஞ்ச காலம் கழித்து 'பெரிய பணக்காரனாக வேண்டும் என்றால் தொழில் தொடங்க வேண்டும்' என்று எண்ணினார். தொழில் தொடங்கினார். தொழில் 'ஓகோ' என்று ஓடிற்று. உடனே அரசியல்-தேர்தல் அவர் கவனத்தைக் கவர்ந்தது. அவர் சொல்லிக் கொண்டார். "இந்த தொழிலை யாரும் நடத்திவிடலாம்" என்று சொல்லி, தொழிலைக் கவனிக்க ஆளைப் போட்டார். என்ன ஆயிற்று? தொழிலில் அரைக் கிணறு தாண்டினார்; அரசியலில் அரைக் கிணறு தாண்டினார்; "பல முட்டாள்கள் தங்களை சகலகலா வல்லவர்கள் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்" என்றான் ஒரு அறிஞன். அதுதான் நேர்ந்தது அவருக்கு.

இன்று நீங்கள் தொழில் பற்றி அறியாதவராக இருக்கலாம். ஆனாலும் தொழிலில் இறங்கி அதிலேயே ஊடாடிக்கொண்டிருந்தால், அதிலேயே கவனம் செலுத்தினால், நீங்கள் அதில் நிபுணராக-வல்லவராக மாறிவிடுவீர்கள்.

வெற்றிக்கு என்ன தடைகள்?

வெற்றி பெறுவோமா என்கிற பயம். நம் இலட்சியத்தை எப்படி அடைவது; அடையும் வழி நிச்சயமற்று இருக்கிறதே என்கிற உணர்வு. தவிப்பு. இதில் நட்டமானால் என்ன நேரும்? என்ற மன உளைச்சல்.

நாம் முதலில் இத்தகைய எண்ணங்களை நிறுத்த வேண்டும். இத்தகைய உணர்வுகளுக்கு இடங் கொடுக்கக்கூடாது.

இருக்கிற நிலையை ஏற்றுக்கொள்ளுங்கள். பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, 'இதுதான் உண்மை நிலவரம்' என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். கையில் இருக்கிற வேலையைக் கவனியுங்கள். மீள வழி காணுங்கள். புலம்பல் எதையும் சாதிக்காது.

நம் நாட்டில் நிலவும் ஊழல் லஞ்சத்தைப் பற்றி பலரும் புலம்புவதைத்தான் அதிகம் பார்க்கிறோம். அதற்கு 'நாம் என்ன செய்யமுடியும்?' என்று ஒத்த உள்ளம் உடைய நல்லவர்களை ஒன்று திரட்டி செயல்பட முன்வருபவர்களைக் காணமுடிவதில்லை. புலம்பினால் எங்கே போவோம்!

"எனக்கோர் கனவு உண்டு...!" என்று முழங்கினார் மார்ட்டின் லூதர்கிங்- அமெரிக்க நாட்டின் கறுப்பு மக்களின் தலைவர், அத்துடன்- அந்தக் கனவுடன் நிற்கவில்லை. மக்களை ஒன்று திரட்டினார். செயல் பட்டார். தொழில் செய்ய முன்வருபவர்கள் கனவு கண்டால் மாத்திரம் போதாது; காரியத்தில் இறங்க வேண்டும்; செயல் புரியவேண்டும்.

'உடனடியாக எது முக்கியம்?' என்று பார்த்து 'எது அவசரம்?' என்று ஆராய்ந்து அதை நிறைவேற்ற வேண்டும்.

நேரம் கிடைப்பதில்லை !

"எனக்கு நேரமே கிடைப்பதில்லை" என்றார் ஒரு பெரிய பணக்கார தொழிலதிபர். "எனக்கு பல காரியங்களையும் செய்ய நேரம் கண்டுபிடித்துக்

கொடுத்தால் நீங்கள் கேட்கிற பணத்தை உங்களுக்குத் தருகிறேன்!" என்றார், அவர், எதிரே நின்ற தொழில் ஆலோசகரிடம். "நீங்கள் நாளைக்கு செய்யவேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் இந்தத் தாளில் எழுதுங்கள்" என்றார் ஆலோசகர். தொழிலதிபர் எழுதினார்.

"இப்போது இவற்றில் உண்மையில் எது மிக முக்கியம் என்று எல்லாவற்றையும் 1, 2, 3 என்று வரிசைப்படுத்துங்கள்!" என்றார். செய்தார் தொழில் அதிபர்.

"இப்போது இதில் இருக்கிற முதல் முக்கிய காரியத்தை முடிக்கிற வரை அடுத்ததிற்குப் போக வேண்டாம். அதன்பிறகு இரண்டாவது. அது முடித்தபின் மூன்றாவது என்று செயல்படுங்கள். உங்களால் எவ்வளவு முடியுமோ அதுவரை செல்லுங்கள்" என்றார். "அப்போது முக்கியமான விஷயங்களை எல்லாம் முடித்திருப்பீர்கள். இந்த முக்கியமற்ற விஷயங்கள் எல்லாம் உங்கள் கவனத்தை சிதறடிக்காது" என்றார் ஆலோசகர். இப்படி ஒரு மாதம் செய்து பார்த்தார் தொழிலதிபர். மூன்று மாதம் கழித்து அந்த தொழில் ஆலோசகருக்கு அவர் இதுவரை பெற்றிராத 25,000 டாலருக்கான காசோலையை அனுப்பினார்!

அந்த இருபத்தி ஐயாயிரம் டாலர் பெறுமான 'யோசனை' இதோ உங்கள் கையில்! செயல்படுங்கள்! முன்னேறுங்கள்!

☐ ☐ ☐

எம்.எஸ். உதயமூர்த்தி

வாழ்க்கைக் குறிப்பு

மனவியலைப் பற்றித் தொடர்ந்து கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப் பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதி வருபவர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி. மனோதத்துவங்களை வாழ்க்கைக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சுமார் 14 நூல்களில் வடித்துத் தந்திருக்கிறார் அவர். சிறந்த ஆசிரியர் என்ற விருதும், 'புல் பிரைட்' அறிஞர் (Fulbright Scholar) என்ற கௌரவமும் இவருக்கு உண்டு.

எம்.எஸ். உதயமூர்த்தி விளநகர் என்ற கிராமத்தில், மயிலாடுதுறை தாலுக்காவில் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர். இவரின் பெற்றோர் திரு. சிங்காரம், கமலம்மாள் ஆவார். மயிலாடுதுறை உயர் நிலைப்பள்ளியில் படித்த பின் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பும், முதுநிலைப் பட்டப்படிப்பும் பெற்றார். சென்னை பல்கலைக் கழகத்தில் தனது பாடமான வேதியியலில் மற்றோர் முதுநிலைப் பட்டம் பெற்றபின் மேல் படிப்புக்கு அமெரிக்கா சென்றார்.

அமெரிக்கா செல்லுமுன் சீர்காழி இந்து உயர் நிலைப் பள்ளியிலும், குடந்தை அரசினர் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். பின் கிண்டி பொறியியற் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணி புரிந்தார்.

அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் மருத்துவ ரசாயனத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்று ஒரு பத்தாண்டுகள் விஸ்கான்சினிலுள்ள மவுண்ட் செனாரியோ கல்லூரியிலும் மின்ன சோட்டா, ஐடகோ பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பின் ஆசிரியத் துறையை விட்டு விலகி, விஸ்கான்சினில் உணவு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் அதன் தலைமை நிர்வாகியாக நான்காண்டுகள் பணியாற்றினார். 1982-ல் (Barclay Chemicals) பார்கிளே கெமிக்கல்ஸ் என்ற ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் தனது சொந்த நிறுவனத்தைத் துவங்கினார். "அமெரிக்காவில் தொழில் துறையில் உள்ளவர்கள் யார் யார்" என்ற நூலில் (Directory of Who is Who in Business and Finance in the U.S.A.) அவரது பெயர் இடம் பெற்ற பெருமையும் இவருக்குண்டு. அந்நிறுவனத்தை தனது குமாரரிடம் ஒப்படைத்து விட்டு 1987-ல் நிரந்தரமாக இந்தியா வந்தார். இன்று சென்னையில் வசிக்கின்றார் அவர்.

சுய வளர்ச்சி பெற வாசகர்கள், 'எண்ணங்கள்' 'மனம், பிரார்த்தனை, மந்திரம்', 'நெஞ்சமே அஞ்சாதே நீ', 'தட்டுங்கள் திறக்கப்படும் என்ற அவரது நூல்களைப் படியுங்கள்.

சுய பொருளாதார மேம்பாடு பெற அவரது 'சிந்தனை, தொழில், செல்வம், என்ற நூலை தாரக மந்திரமாக உபயோகியுங்கள்.

சமுதாய ஈடுபாட்டின் அவசியத்தை உணர அவரது 'நாடு எங்கே செல்கிறது' என்ற நூலையும், 'நம்மால் முடியும் தம்பி, நம்பு', 'நீ தான் தம்பி

முதலமைச்சர்'' என்ற நூல்களையும் படித்துப் பாருங்கள்.

எம்.எஸ். உதயமூர்த்தியின் உந்துதல்கள் கன்யாகுமரியிலிருந்து கிருஷ்ணகிரி வரை, வேதாரண்யத்திலிருந்து வால்பாறை வரை இளைஞர்களை, பெண்களை படித்த மக்களை ஒரு உத்வேகம் பெறச் செய்திருக்கிறது. டைரக்டர் பாலசந்தர், 'உன்னால் முடியும் தம்பி' என்ற தலைப்பில், கதாநாயகனுக்கு உதயமூர்த்தி என்ற பெயரைச் சூட்டி, ஒரு திரைப்படத்தை வெளியிட்டிருக்கிறார். பாலசந்தரிலிருந்து பள்ளி இளைஞர்கள் வரை, அவரது எழுத்துக்கள் ஒரு பாதிப்பை ஒரு உத்வேக உணர்வை ஒரு நம்பிக்கையை உருவாக்கி இருக்கிறது. இதன் விளைவாக, ஒரு அமைதியான மாற்றம் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

தனது அறிவுக்கும், திறமைக்கும் ஏற்ற ஒரு புதிய சமுதாயத்தைத் தமிழகம் பெற வேண்டும் என்று விரும்பும் எம்.எஸ். உதயமூர்த்தி, இதற்காக மக்கள் சக்தி இயக்கம் என்ற ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்.

தொகுப்பு : G. **சீனிவாசன்** Ex. P.T.C.

இயக்கப் பத்திரிக்கை

'நம்பு தம்பி நம்மால் முடியும்' மாதப் பத்திரிக்கைக்கான ஆண்டுச் சந்தா 20 ரூபாய். மக்கள் சக்தி இயக்கத்தில் என்ன நடக்கிறது. என்ன செய்யலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

முகவரி: தலைமையகம், மக்கள் சக்தி இயக்கம்,
17A, சௌத் அவென்யூ, பஸ் நிலையம் அருகில்
திருவான்மியூர், சென்னை - 600 041

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794